விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 08 திங்கட்கிழமை (24.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 279

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

உழவு இயந்திர சில்லுக்குள் சிக்குண்டு

## ஒன்றரை வயது பாலகன் பரிதாபமாக உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

உழவு இயந்திரத்தின் சில்லுக் குள் சிக்குண்டு ஒன்றரை வயது ஆண் குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் நேற்று மல் லாகம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மல்லாகம் கல்லாரை பகு தியை சேர்ந்த ஒரு வயதும் 8 மாத ங்களுமான விஜயகாந்த் தஸ்மிலன் என்ற ஆண் குழந்தையே மேற்படி பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

நேற்று நண்பகல் குறித்த குழந் தையின் தந்தை வீட்டில் 24☛

## அரசைக் காப்பாற்றுவதிலேயே த.தே.கூட்டமைப்பு கவனம்!

மைத்திரி குணரட்ண குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வாக்களித்த தமிழ் மக்களின் நலனுக்காக செயற்படுவதை விடு த்து அரசாங்கத்தை காப்பாற்றுவத ற்காகவே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு செயற்பட்டு வருவதாக ஐக் கிய தேசிய சுதந்திர முன்னணி யின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி மைத்திரி குணரட்ண தெரிவித்து ள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்க ண்டவாறு தெரிவித்துள்ளார். இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில். 23☛

## 10-வது நாளாக தொடர்ந்த கைதிகளின் உணவு தவிர்ப்பு


(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் சிலர் அநுராதபுரம் சிறைச்சாலையில் ஆரம்பித்த உண்ணாவிரதப் போரா ட்டம் நேற்று 10-வது நாளாகவும் தொடர்ந்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 02☛

# அரசியல் ரொட்டித் துண்டுக்கு ஆசைப்பட்டவர்களே எமக்கு முட்டுக்கட்டை போட்டனர்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் காட்டம்



(கொழும்பு) எமது வினைத்திறன் சம்பந்தமாக கேள்விகள் எழுப்பப்படு கின்றன. எம்மை பொறுத்தவரை எமது பின்னடைவுகளுக்கு காரணம் நாமல்ல. எம்முள் இருந்து கொண்டே எமக்கு குழி பறித்துக்கொண்டிருப் போரே அதற்கு பதில் கூறவேண்டும். அரசியல் ரொட்டித் துண்டுகளைக் காட்டி அறநிலை மறந்த அவையினர் சிலரை வைத்து அரங்கேற்றிய நாடகங்கள் பின்னடைவை தராமல் எதனைத்தரும் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் காட்டமாக கேள்வி எழுப்பியுள்ளார்.(23-ம் பக்.)

## துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டின் இரு வேறு பகுதிகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்க ளில் இருவர் உயிரிழந்து 24☛

## அனைவருக்கும் சட்டம் சமனாக இருக்க வேண்டும்

● மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

வடக்கிற்கு ஒரு சட்டமும் தெற் குக்கு வேறோரு சட்டத்தையும் நடைமுறைப்படுத்த முடி 23☛

## மைத்திரிக்கு எதிராக நியூயோர்க்கில் போராட்டம்

(கொழும்பு)

ஐ.நா பொதுச்சபையில் உரை யாற்ற செல்லும் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவின் வருகை க்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பொரு ட்டு, நியூயோர்க்கில் கவ 02☛

## பிரதம நீதியரசராக ஜயசூரிய, சட்டமா அதிபராக டி லிவர

ஜனாதிபதி மைத்திரி முன்மொழிவு

(கொழும்பு)



நாட்டின் 46ஆவது பிரதம நீதியரசராக, சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரியவை நியமிப்ப தற்கும், புதிய சட்டமா அதிபராக மேலதிக சொலிஸ்ரார் ஜெனரல் டப்புல்ல டி லிவரவை நியமிப்பதற் கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன பரிந்துரைத்துள்ளார்.

தற்போதைய பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் அடுத்தமாதம் 7ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளார்.

இந்த நிலையிலேயே சட்டமா அதிபராக உள்ள ஜயந்த 24☛

## ரயில் மோதி 2மாத குழந்தை உயிரிழப்பு

(கொழும்பு)

ரயில் கடவையில் இடம்பெற்ற விபத்தில் 2 மாத குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளதுடன், நால்வர் காயமடைந்துள்ளனர்.

ரயிலுடன், கார் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை ஹபராதுவை கொக்கல பகுதியில் மோதுண்டத னாலேயே இந்த விபத்து இடம்பெற் றுள்ளது.

இதன்போது 2 மாத குழந்தை ஒன்று சம்பவ இடத்திலேயே உயி ரிழந்துள்ளதாக பொலிஸார் 02☛

## நினைவேந்தலை உள்ளூராட்சிகள் நடத்துவது பொருத்தமற்றது!

காக்கா அண்ணா, மாவையிடம் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

நினைவேந்தல் நிகழ்வுகளை மாநகர சபை உட்பட உள்ளூராட்சி மன்றங்கள் பொறுப்பேற்பது பொரு த்தமானது அல்ல என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராசா தெரிவித்துள்ளார். 24☛

## வட - கிழக்கில் பொது வாக்கெடுப்பு; பிரேரணை ஐ.நாவை சென்றடைந்தது

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மக்களின் அர சியல் அபிப்பிராயங்களை அறிந்து கொள்ள பொது வாக்கெடுப்பு நடத் தப்பட வேண்டுமென்ற வடமாகாண சபையின் பிரேரணை ஐ.நா செய லாளரிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளது. அந்த பிரேரணையை 23☛



# நாங்களாகவே விக்னேஸ்வரனை கொண்டுவந்துவிட்டு அவருக்கு எதிராக வழக்கு போடுவது நல்லதல்ல!

## சித்தார்த்தன் எம்.பி பகிரங்க குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஜனநாயக மக்கள் முன்னணியின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று நடைபெற்றது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) ஏற்பாட்டில் மட்டக்களப்பு கிரான்குளம் பகுதியில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பல வேறுபாடுகள் இருந்தாலும் பல பிரச்சினைகள் இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுடைய தேவைக்காக ஒற்றுமையாக தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதிலேயே எங்களது கட்சி மிகத் தீவிரமாக இருக்கிறது.

விக்னேஸ்வரன் ஐயாவுக்கு எதிராக அந்த வழக்கைப்போட்டது அவருக்கு எதிராக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் அவ்வளவு தூரம் நல்லதல்ல.

நாங்களாகவே அவரை வலிந்து கொண்டு வந்துவிட்டு அவருக்கு வழக்குப் போடுவது அல்லது அவர் குற்றவாளியாக காணப்படுகிறார் என்று நாங்கள் கருதுவது எல்லாம் நல்லதல்ல என்று ஒரு அபிப்பிராயம் இருக்கிறது. அந்த அபிப்பிராயம் எனக்கும் இருக்கிறது. தமிழரசுக் கட்சிதான் ஒற்றுமையைக் குலைக்கிறது என்றால் அது எந்தக் கட்சியாக இருந்தாலும் அந்தக் கட்சியை நிராகரிப்பதன் ஊடாக நீங்கள் நிச்சயமாக தமிழ் மக்களுடைய விடுதலைக்காக சரியான பாதையிலே கட்சியைக் கொண்டு செல்வதற்கு உதவுவீர்கள் என சித்தார்த்தன் கூறினார். (மு)

# 2019 மார்ச்சில் டொலர் 200 ரூபாயைத் தாண்டும்!

(கொழும்பு)

நாட்டில் தற்பொழுது நிலவும் பொருளாதார நிலைமைக்கு ஏற்ப டொலரின் பெறுமதி எதிர்வரும் 2019 ஆண்டு மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் ஆகும் போது 200 ரூபாவைத் தாண்டும் என பொருளியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

இறக்குமதிகளைக் கட்டுப்படுத்திக் கொள்வது டொலர் விலையேற்றத்தைத் தடுப்பதற்கான பிரதான வழிமுறையெனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

டொலர் விலை அதிகரிப்பினால் பல நிறுவனங்களும் நட்டமடைந்து சில மூடப்படும் ஆபத்தில் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (மு)

# ரூபாய் பெறுமதி வீழ்ச்சியை கட்டுப்படுத்த தயார்-மத்திய வங்கி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி பாரியளவில் வீழ்ச்சியடைவதை கட்டுப்படுத்துவதற்கான தலையீடுகளை மேற்கொள்ள தயார் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆளுநரான கலாநிதி நந்தலால் வீரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நிதிச் சந்தையில் இதுபோன்ற மாறுபட்ட நிலைமை தொடர்ச்சியாக நீடிக்க இடமளிக்க முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த நிலைமையை மாற்றுவதற்கும், நாணயமாற்றின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கும், அவசியம் ஏற்படின் மத்திய வங்கி சில கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித்குமாரசாமி தெரிவித்துள்ளார். (மு)

## மைத்திரிக்கு எதி...

னயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. போர்குற்றங்கள் தொடர்பில் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்புமாறு ஐ.நா பொதுச் சபை உறுப்பினர்களையும் மற்றும் அனைத்துலக ஊடகங்களையும் வி.உருத்திரகுமாரன் வலியுறுத்தியுள்ள நிலையில், இக்கவனயீர்ப்பு போராட்டமும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணி முதல் 2 மணிவரை நியூயோர்க்கில் உள்ள ஐ.நா பொதுச்சபைக்கு முன்னால் மைத்திரி திரும்பிப் போ #GoBackMY3# எனும் முழக்கத்துடன் இக்கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற இருக்கின்றது.

## வல்லிபுரத் தேரின் போது 13 பேரின் தங்கச் சங்கிலிகள் அறுக்கப்பட்டதாக பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தேர் திருவிழாவில் 13 பேரின் தங்கச்சங்கிலிகள் அறுக்கப்பட்டுள்ளதாக தம்மிடம் முறையிடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தேர் திருவிழா நடைபெற்றது.

காலையில் இருந்து இரவு வரையான காலப்பகுதியில் 13 பேர் தமது சங்கிலிகள் அறுக்கப்பட்டுள்ளதாக முறையிட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டனர். ஆனால் அவர்களிடம் எந்தவிதமான அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களும் காணப்படவில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (மு-60)

அமெரிக்காவின் பல பாகங்களில் இருந்து மட்டுமல்ல, கனடாவில் இருந்தும் இக்கவனயீர்ப்பு போராட்டத்தில் பங்கெடுப்பதற்கான பேருந்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.(மு)

## ரயில் மோதி...

தெரிவித்துள்ளனர்.

மேலும் இதன்போது காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (மு)

## 10-வது நாளாக...

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் தமது வழக்குகளைத் துரிதப்படுத்தக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(மு)



## திலீபனுக்கு வல்வெட்டித்துறையில் அஞ்சலி



தியாகி திலீபனுக்கு வல்வெட்டித்துறையில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் இவ் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை சந்தியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் சிவப்பு மஞ்சள் கொடிகள் பறக்க விட ப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதில் வடமாகாண சபை உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளர், உப தவிசாளர் மற்றும் அப்பகுதி மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (இ-60)

# தியாகி திலீபன் நினைவேந்தல் காலத்தில் வேறெந்த நிகழ்வுக்கும் அனுமதியில்லை

## யாழ். மாநகரசபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் நினைவேந்தல் காலத்தில் யாழ்ப்பாணம் மாநகர சபை நியாயாதிக்க எல்லையினுள் வேறெந்த நிகழ்வையும் நடத்த அனுமதிக்கக்கூடாது என்று யாழ்ப்பாணம் மாநகர சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் 26 ஆம் திகதி நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபன் நினைவிடத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவது தொடர்பில் மாநகர சபை உறுப்பினர்களுக்கான ஒழுங்குபடுத்தல் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை யாழ். மாநகர சபையில் நடைபெற்றது.

இதன் போது உறுப்பினர் ஒருவரால் 'தியாக தீபம் திலீபன் நினைவேந்தலை ஒழுங்குபடுத்தும் அதே வேளை, மாநகர சபை எல்லையினுள் நிகழ்வொன்றை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட வேண்டு கோளை அடுத்து இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்களின் நிறைவில் நாளை மறுதினம் 26 ஆம் திகதி திட்டமிடப்பட்டுள்ள தேசிய சுற்றுலா தின நிகழ்வுக்காக யாழ். மாநகர சபை மைதானத்தை வழங்குவதில்லை என்று கலந்துகொண்ட உறுப்பினர்கள் ஏகமனதாகத் தீர்மானித்ததுடன், உறுப்பினர்களின் தீர்மானம் பற்றி வடமாகாண சுற்றுலாத்துறைச் செயலணியின் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (இ-9)

# தியாக தீபம் நினைவாக நல்லூரில் இரத்ததானம்




தியாக தீபம் திலீபனின் நினைவாக நேற்றுக் காலை 9.30 மணியளவில் இரத்த தான நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபி அருகில் இடம்பெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வலி. தெற்கு பிரிவினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுமக்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினார். (இ-9)

## பாலத்தை திறக்கச் சென்ற சந்திரிகாவுக்கு எதிர்ப்பு



(அத்தனகல்ல)

அத்தனகல்ல கித்தம்மஹர போனெகலை வழியாக அத்தனகலு ஓய மீது நிர்மாணிக்கப்பட்ட பாலமொன்றை திறந்து வைப்பதற்காக சென்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு எதிராக நேற்று முன்தினம் பொது மக்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளனர்.

முந்தைய அரசாங்கத்தின் கீழேயே இந்த பாலத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட அதே வேளை, தற்போதைய அரசாங்கத்தின் பிரதிநிதிகளால் திறந்து வைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே பொது மக்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இந்தப்பாலமானது, அண்மையில் மேல்மாகாண மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் உபுல் மஹேந்திர ராஜபக்ஷ மற்றும் அத்தனகல்ல பிரதேச சபைத் தலைவர் பிரியந்த புஷ்பகுமார ஆகியோரின் தலைமையில் திறந்துவைக்கப்பட்டிருந்தாலும், நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவினால் உத்தியோக பூர்வமாக திறந்துவைக்கப் படவிருந்தது.

இதைத் தெரிந்து கொண்ட மக்கள் குறித்த பகுதியில் ஒன்றுகூடி அங்கு வந்திருந்த அமைச்சர்களான லசந்த அழகியவண்ண, பைஸர் முஸ்தபா மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோருக் கெதிராக கூச்சலிட்டும் இடைமறித்தும் தமது எதிர்ப்புகளைக் காட்டினர்.

இந்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இந்த பாலம் திறந்து வைக்கும் வைபவம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் தலைமையில் இடம் பெற்று முடிந்தது.

வைபவம் முடிந்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அங்கிருந்து வெளியேறியவுடன் அங்கு கூடியிருந்த மக்களும் அகன்று சென்றனர். (இ)

# சம்பளப் போராட்டத்தால் தலவாக்கலை ஸ்தம்பிதம்





(தலவாக்கலை)

தோட்ட தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்தக்கோரி தலவாக்கலை நகரில் தமிழ் முற்போக்கு கூட்டணி ஏற்பாட்டில் மாபெரும் போராட்டம் ஒன்று நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்த போராட்டத்தில் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த பல தோட்டப்பகுதிகளின் தொழிலாளர்களும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சி பிரமுகர்களும், ஆசிரியர்கள், மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏழு தொழிற்சங்கங்களை சேர்ந்த முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். இதன்போது மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், மத்திய மாகாண சபை உறுப்பினர்களான சதாசிவம் சோ.சிறிதரன், உதயகுமார், பெருந்தோட்ட மனிதவள நிதியத்தின் தலைவர் வீ.புத்திர சிகாமணி என பல கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு அருகில் தலவாக்கலை நுவரெலியா பிரதான வீதியில் ஆரம்பமான போராட்ட பேரணி தலவாக்கலை கொத்மலை வீதி ஊடாக தலவாக்கலை நகரசபை மைதானம் வரை சென்றடைந்தது.

நியாயமான சம்பள உயர்வு கோரிய கோஷங்களை எழுப்பிய வண்ணம் பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் சென்றனர்.

பெருந்தோட்ட கம்பனிகளுக்கு எதிராக அழுத்தம் கொடுக்கும் வகையில் இடம்பெற்ற இந்த போராட்டத்திற்கு தலவாக்கலை நகரவாசிகள் தங்களது வியாபார ஸ்தலங்களை மூடி ஆதரவினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (இ)

# கரோலினா கலக்கல்




சீன ஓபன் பட்மின்டன் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீராங்கனை கரோலினா மரின் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

சீனாவில், சர்வதேச ஓபன் பாட்மின்டன் தொடர் நடந்தது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியில் ஸ்பெயினின் கரோலினா மரின், சீனாவின் யுபெய் சென் மோதினர்.

மொத்தம் 46 நிமிடம் நீடித்த போட்டியில் அபாரமாக ஆடிய கரோலினா மரின் 21-18, 21-13 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியில் இந்தோனேஷியாவின் அந்தோனி சினி சுகா கின்டிங் 23-21, 21-19 என்ற நேர் செட் கணக்கில் ஜப்பானின் கென்டோ மொமோடாவை தோற்கடித்து சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

# ஆஹா... ஓஹோ பிலிஸ்கோவா

## பான் பசுபிக்கில் சம்பியன்

பான் பசிபிக் ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் செக்குடியரசு வீராங்கனை பிலிஸ்கோவா சம்பியன் பட்டம் வென்றார். இறுதிலில் 6-4, 6 - 4 என, ஜப்பானின் ஓசாகாவை தோற்கடித்தார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில், பெண்களுக்கான பான் பசிபிக் ஓபன் டென்னிஸ் தொடர் நடந்தது.

இதன் ஒற்றையர் பிரிவு இறுதியில் செக்குடியரசின் கரோலினா பிலிஸ்கோவா, ஜப்பானின் நவோமி ஓசாகா மோதினர்.

இதில், சமீபத்தில் முடிந்த யு.எஸ்., ஓபனில் முதன்முறையாக 'கிராண்ட்ஸ்லாம்' பட்டம் வென்ற ஜப்பானின் ஓசாகா வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஒரு மணி நேரம், 3 நிமிடம் நீடித்த இறுதியில் அபாரமாக ஆடிய பிலிஸ்கோவா 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இதன்மூலம் தொடர்ச்சியாக 10 போட்டிகளில் வெற்றி கண்ட ஓசாகாவின் வெற்றி நடைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.




# இந்திய பெண்கள் வெற்றி




இலங்கை அணிக்கு எதிரான மூன்றாவது 'ரி20' போட்டியில் இந்திய பெண்கள் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இலங்கை வந்துள்ள இந்திய பெண்கள் அணி ஐந்து போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற் கிறது.

முதல் போட்டியில் இந்தியா வென்றது. இரண்டாவது போட்டி மழையால் ரத்தானது.

நேற்று முன்தினம் நடந்த மூன்றாவது போட்டியில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

**ஓட்டம் ஒன்றை பெற எத்தணிக்கும் ஜெமிமா ரொட்ரிக்ஸ்**

**அருந்ததி அபாரம்**

இலங்கை அணிக்கு யசோதா. அணித் தலைவர் ஜெயங்கனி ஜோடி ஆரம்பம் கொடுத்தது. வேகத்தில் மிரட்டிய அருந்ததி, யசோதாவை (3) அவுட்டாக்கினார். ஜெயங்கனி (28), சுரங்கிகா (7) ஏமாற்றினர். சற்று தாக்குப்பிடித்த ஷஷிகலா (35), அருந்ததி 'வேகத்தில்' வீழ்ந்தார். கௌஷல்யா (10), நிலாக்சி (31) தவிர மற்றையவர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் திரும்பினர்.

20 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்கள் எடுத்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் அருந்ததி, ஹர்மன் பிரீத் கவுர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

**ஜெமிமா கலக்கல்**

இந்திய அணிக்கு மிதாலி ராஜ் (13), ஸ்மிருதி மந்தனா (6), தா்னியா (5) ஏமாற்றம் கொடுத்தனர்.

அணித் தலைவர் ஹர்மன் பிரீத் கவுர் 24 ஓட்டங்கள் எடுக்க, 18 வயது வீராங்கனை ஜெமிமா ரொட்ரிக்ஸ் (57 ஓட்., 40 பந்து) அரைச்சதம் கடந்து வெற்றிக்கு கைகொடுத்தார்.

இந்திய அணி 18.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்கள் எடு த்து 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. வேதா (11), அனுஜா (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி




**வெற்றிக் கோலை அடித்த மட்ரிட்டின் அசென்சியோ**

# ரியல் மட்ரிட் வெற்றி

லா லிகா கால்பந்து தொடரில் நேற்றிரவு நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் ரியல் மட்ரிட் - ஆர்சிடி எஸ்பான்யல் அணிகள் மோதின.

சொந்த மைதானத்தில் விளையாடினாலும் ரியல் மட்ரிட் அணியால் கோல் அடிக்க முடியவில்லை. எஸ்பான்யல் அணி வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த ரியல் மட்ரிட் தடுமாறியது.

ஆட்டத்தின் 41ஆவது நிமிடத்தில் அசென்சியோ ஒரு கோல் அடிக்க ரியல் மட்ரிட் 1-0 என முன்னிலை பெற்றது. அதன்பின் இரு அணி வீரர்களும் ஆட்டம் முடியும் வரை கோல் அடிக்கவில்லை. இதனால் ரியல் மட்ரிட் 1-0 என வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் ரியல் மட்ரிட் 5 போட்டிகளில் நான்கில் வெற்றி பெற்று 13 புள்ளிகளுடன் முதல் இடத்தை பிடித்துள்ளது.

பார்சிலோனா 4 போட்டிகளில் விளையாடி நான்கிலும் வெற்றி பெற்று 12 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது.

# வோர்னர் விளாசல்

உள்ளூர் ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலியாவின் வோர்னர் சதம் கடந்தார். சக வீரர் ஸ்ரீவ் ஸ்மித் 85 ஓட்டங்கள் விளாசினார்.

அவுஸ்திரேலியாவில் என்.எஸ். டபிள்யு., பிரிமியர் கிரிக்கெட் உள்ளூர் தொடர் நடக்கிறது.

கடந்த மார்ச் மாதம் பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் சிக்கி ஓராண்டு தடைபெற்ற, அவுஸ்திரேலியாவின் வோர்னர், ஸ்ரீவ் ஸ்மித் பங்கேற்றனர்.

ஓவலில் நடந்த முதல் சுற்றில் ரேன்ட்விக் பீட்டர்சம், செயின்ட் ஜோர்ஜ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய செயின்ட் ஜோர்ஜ் அணிக்கு ஸ்டாப்லெடன் (108 ஓட்.), மெக்டொனால்ட் (104 ஓட்.,) சதம் கடக்க 50 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 277 ஓட்டங்கள் எடுத்தது.

**வோர்னர் விளாசல்**

பின், களமிறங்கிய ரேன்ட்விக் பீற்றர்சாம் அணிக்கு ஆரம்ப வீரர் வோர்னர் மிரட்டினார். பவுண்டரி, சிக்சர் மழை பொழிந்த இவர் 98 பந்துகளில் சதம் விளாசினார். 152 பந்துகளைச் சந்தித்த வோர்னர் 155 ஓட்டங்கள் எடுக்க, ரேன்ட்விக் அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக் களை இழந்து 278 ஓட்டங்கள் எடுத்து, 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.




அபாரமாக ஆடி சதமடித்த டேவிட் வோர்னர்

**ஸ்மித் அபாரம்**

கிளைன் மெக்ராத் ஓவல் மைதானத்தில் நடந்த மற்றொரு போட்டியில் சதர்லாந்து, மோஸ் மேன் அணிகள் மோதின.

முதலில் விளையாடிய சதர்லாந்து அணிக்கு கிறிஸ் வில்லியம்ஸ் (47), பிவாயனோ் (37) சிறப்பான ஆரம்பம் கொடுத்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய ஸ்மித் அசத்தினார். 6 பவுண்டரிகள், ஒரு சிக்சர் விளாசிய இவர், 92 பந்துகளில் 85 ஓட்டங்கள் எடுத்தார்.

50 ஓவர்கள் நிறைவில் சதர்லாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 238 ஓட் டங்களை எடுத்தது.

239 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய மோஸ்மேன் அணிக்கு ஹெறனே (59) அரைச்சதம் அடிக்க, 49.2 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (239 ஓட்.,) 3 விக்கெட்டுக்களால் அடைந்தது.

## யா/வடமராட்சி துன்னாலை

# அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

# தீர்த்தோற்சவ சிறப்பு மலர் 24.09.2018





### பிரதம குருமார்களின் அருளாசிச்செய்தி



பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய சதுஷ்க்ருதாம்!
தர்ம ஸம்ஸ்தா பநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே!!
கீதா தத்வ விவேசனீ- 4ஆம் அத்தியாயம் 259. பக்(8)

சாதுக்களைக் காப்பதற்காகவும் பாவச் செயல்களைச் செய்கிறவர்களை அழிப்பதற்காகவும் தர்மத்தை நன்கு நிலைநாட்டுவதற்காகவும் யுகந்தோறும் நான் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றேன்.

இன்று விளம்பி வருடம் புரட்டாதி மாதம் 8 ஆம் நாள் (24.09.2018). அவனருளாலே அவன் தாள் வணங்கி! எல்லாம் வல்லிபுரமாயவன் தாள் பணிந்து!

எம் பெருமான் ஸ்ரீ சக்கரவல்லிபுர மாயவனது சமுத்திர தீர்த்தநாள் சரித்திரப்பிரசித்தி பெற்ற மாயவனது மஹோற்சவம் 09.09.2018 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வந்து இன்று வரலாற்று முக்கியம் வாய்ந்த புரட்டாதி பூரணை நாளில் சமுத்திரத் தீர்த்தம் நடைபெறுகிறது.

ஆஞ்சநேய தீர்த்தம் கற்கோவளம் கடலில் எம்பெருமான் மாயவன், விநாயகர், லக்ஷ்மி சமேதராக வந்து தீர்த்தமாடி அடியவர்களின் பாவங்களைப் போக்குவார். பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றான அருளல் தொழில் தீர்த்தமாடலில் இடம்பெறும். இலவல்லியின் நாகசாபம் போக்க குழந்தைவடிவாகி பின் சக்கரமாக மாறிய ஸ்ரீமன் நாராயணனின் மச்சவதாரச் சிறப்பு நன்னாள்.

எல்லாம் வல்ல வல்லிபுரமாயவனது இந்தச் சிறப்பு வாய்ந்த நன்னாளில் அனைத்து உலக வாழ், இலங்கை வாழ் மக்களுக்கும் மாயவனது நல்லருளுடன் எமது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோவிந்தா ஹரி கோவிந்தா!

- பிரம்மஸ்ரீ சுதர்மா கணபதீஸ்வரக்குருக்கள், மஹோற்சவ குரு பிரதம குரு,
- பிரம்மஸ்ரீ ச.க. சுதர்சனக்குரு (J.P)
- பிரம்மஸ்ரீ ச.க. புருஷோத்தமக்குரு (J.P)

பிரதான குருமார்கள்
ஸ்ரீஆழ்வார் பீடம்,
ஸ்ரீவல்லிபுரக்கோவில், புலோலி.



இலங்கை மாதாவின் சிரமெனத் திகழ்வது யாழ்ப்பாணக் குடாநாடு. தொல்பெருமைக்குரிய வரலாற்றுப் புகழ்மிக்க வடமராட்சி துன்னாலை பருத்தித்துறையில் அமைந்த ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் அழகிய வெண்மணற் பரப்பில் காட்சியளிக்கின்றது. அவ்வாலயத்தைச் சுற்றி விரிந்து குடைபோல் பரந்து நிழல்தரும் பல்வேறு விருட்சங்கள் மாயவனைத் தரிசிக்க வரும் பக்தர்கள் நிழலில் அமர்ந்து வணங்கும் வகையில் ஆலயச் சூழல் அமைந்துள்ளது. பார்ப்பவர் மனதிலே பக்திப் பரவசம் தோன்றச் செய்து ஓங்கி உயர்ந்து இராஜகோபுரம் புதுப்பொலிவுடன் கம்பீரமாய் காட்சி தருகிறது. இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கமைந்த பிரசித்தி பெற்ற புராதன திருத்தலமாகும்.

இவ்வாலயத்தின் பழைய வரலாறு என்றும் நினைவுகூரத்தக்க அற்புதமானது. முன்னொரு பொழுது அலை பொங்கி எழும் வங்கக் கடலிலே இன்று தீர்த்தோற்சவம் நடைபெறும் பகுதியிலே அதிசய மச்சம் ஒன்று துள்ளிக்குதித்து ஆரவாரம் செய்து மக்களைத் திகைக்க வைத்தது. கற்கோவளத்து பகுதியில் வாழ்ந்த கடலோடிகள் பலரும் செய்த முயற்சிகள் எவையுமே பலிக்கவில்லை. வலைகளைக் கிழித்துக் கொண்டு மிக்க உயரத்தில் பாய்ந்தும் குதித்தும் வேடிக்கையாக விளையாடிக் கொண்டிருந்தது. திகைப்படைந்த மக்களுக்கிடையே தனது நாகசாபம் தீர்ப்பதற்காக பலகாலம் தவம் செய்து கொண்டிருந்த இலவல்லி என்னும் பெண் தோன்றி பக்தி சிரத்தையுடன் பகவானைத் தரிசித்து தனது கைகள் இரண்டையும் நீட்டவே அம் மச்சம் அம்மையாரின் மடியில் குதித்ததும் அழகான குழந்தையாக மாறியது. இதைக் கண்ணுற்ற மக்கள் மகிழ்ந்தனர். இலவல்லியின் ஆலோசனைப்படி அப்புனித குழந்தையை ஒரு பல்லக்கில் வைத்து அன்பர்களும் அடியார்களும் கற்கோவள மக்களும் புடைசூழ மண்மேடுகளுக்கூடாக தூக்கி வந்தனர். நெடுந்தூரம் தூக்கி வந்தமையால் களைப்புற்ற மக்கள் மரநிழலில் பல்லக்கை வைத்துவிட்டு தாகசாந்தி செய்தபின் மீண்டும் தூக்க முயன்றனர்.

எனினும் பல்லக்கை அசைக்க முடியவில்லை. குழந்தை மறைந்துவிட்டது. அச்சமயம் அந்தணர் ஒருவர் தோன்றி அங்கு நின்ற பக்தர் ஒருவரிடம் சக்கரம் ஒன்றைக் கொடுத்து அதையே வைத்துப் பூசிக்கும்படி கூறிச் சென்றார். அவ் வழக்கப்படியே இன்றும் மூலஸ்தானத்தில் சக்கரம் வைத்தே பூசிக்கப்படுகிறது.

### அருளாசிச்செய்தி

தாவிலா அருள் தந்து காப்பாய் நீயே!
வங்கக் கடல் நாடி விருப்போடு நீராடும்
வைபவத்தைக் காணவரு மக்கள் வரிசையிட
பாங்காக முன்வந்துன் புதுமலரின் பூச்சொரியும்
பக்திமிகு கற்கோவள மக்கள் விரித்திடு
சக்கரத்தாழ்வார் இளைப்பாறு மண்டபத்தின் கீழிருந்து
சகலர்க்கும் அருள்புரியும் நாராயணா நாளும்
தீங்கேது மணுகாது தேசத்தோர் நலம்பெற
தாவிலா அருள் தந்து காப்பாய் நீயே

கலாபூஷணம் மு.தணிகாசலம்,
கற்கோவளம்.

### அருளாசிச்செய்தி

சங்கடங்கள் தீர்க்க வல்ல
சமுத்திர நாயகனே வருக!
வளம் மிக்க வல்லிபுர மண்ணிலே
வந்தோரை வாழ வைக்கும் வல்லிபுர ஆழ்வாரே- வருக! வருக!
ஆழ்கடல் மீதினிலே ஆனந்தமாக தீர்த்தம் ஆடிட
அற்புத ராஜாவே அலைகடல் நோக்கி வருக! வருக!
அலைகடல் மீதினிலே தீர்த்தம் ஆடி- தீமைகள் தீர்க்க வல்ல
சமுத்திர நாயகனே சனத்திரளில் மிதந்து வருக! வருக!
சமுத்திர நாயகனாக வரும் போதே வந்தோர்க்கும்
வையகத்தில் வாழ்வோருக்கும் வாரி வாரி
அருள் புரிந்திட ஆனந்தமாக விரைந்து வருக!

ஆர்.எஸ்.பகீரதன், கச்சேரி, யாழ்ப்பாணம்.

### அருளாசிச்செய்தி



இன்று கற்கோவளம் மக்களால் தீர்த்தோற்சவம் நடைபெறும் இடத்தில் தீர்த்தக்கடற்கரை சக்கரத்தாழ்வார் இளையாறு மண்டபம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு புதுப்பொலிவுடன் திகழ்கின்றது. அங்கு கூடும் அடியார்களை பக்திமயப்படுத்துவதாக அமைந்தது மாயவன் திருவுள்ளம் போலும். பரந்தாமனின் பக்தர்கள் பார் போற்ற வாழ அவன் திருவடிகளையே அர்ச்சித்து வணங்கி நிற்போமாக.

சாமஸ்ரீ தேசமானிய **Lion** த.ஜெயரூபன், சமாதான நீதவான், கணக்காய்வாளரும், வருமான வரி ஆலோசகரும் மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பும் மற்றும் அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் உறுப்பினர், சமூக சேவையாளர், கற்கோவளம்.

## இன்று வங்கக்கடலில் நீராடி வரும் மாயவனின் அருள் பார் எங்கும் கிடைக்க வேண்டி நிற்போர்

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
**சரவணா மகாலட்சுமி தங்கமாடம்**
இல. 93, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே. 021 321 4577

தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு
**தரன் நகை மாளிகை**
ம. ம. வி. வீதி, நெல்லியடி.
தொ. பே.- 021 321 9254
கிளை I: **தரன்** நகைமாளிகை
பிரதான வீதி, பருத்தித்துறை.

தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு நாடவேண்டிய இடம்
**வைஷ்ணவி நகைப்பூங்கா**
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.- 021 226 4519

**விக்னேஸ்வரா திருமண மண்டபம்**
யாழ்.பிரதான வீதி, வல்லை.
தொ.பே - 021 226 1567
Room, Hall A/C Facility
Conference Hall with
200 Seating Capacity

நவீன வடிவமைப்புக்களில் தரமான 22 கரட் நகைகளுக்கு நாட வேண்டிய இடம்
**சுசீலா ஆபரண மாளிகை**
இல. 258, பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே.-021 226 3064
கிளை I **நியூ சுசிலா ஆபரண மாளிகை**
இல. 228, பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே.- 021 226 4154

**சிறீரங்கம் ரெக்ஸ் ரைலஸ்**
பிரதான வீதி, நெல்லியடி,
NTB வங்கிக்கு அருகில்
கிளை I
வதிரி வீதி, உடுப்பிட்டி.

# கடையிற் சுவாமிகளின் 127 ஆவது குருபூசை

"முத்தி" என்று இந்து மதம் வரையறுத்துள்ள இறைவனை அடைந்து இறை நிலை எய்தும் அந்நிலையை நோக்கியே அண்ட சராசரத்தில் படைக்கப்பட்டுள்ள அனைத்து ஆத்மாக்களும் பயணிக்கின்றன. அவரவர் செய்யும் நல்வினை, தீவினைக்கு ஏற்ப முத்தி நிலைப் பயணத்தில் முன்னேற்றங்களும் தடைகளும் ஏற்படுகின்றன. ஆன்மாக்கள் கருமங்கள் புரிவதற்காகவே உலகில் உடல் எனப்படும் கருவி வழங்கப்படுகின்றது. இவ் உடல் வகைகள் உலகில் எண்பத்து நான்கு இலட்சம் இருப்பதாக குறிப்பிடப்படுகின்றது. இவற்றினுள் அதி உயர்வானதாக கருதப்படுவது மானிடப்பிறவியேயாகும். நல்வினை எது? தீவினை எது? என்பவற்றைப் பகுத்தறிந்து தீவினையை ஒதுக்கி நல்வினைகளை செய்வதற்கு மனிதப் பிறவிக்கே பகுத்தறிவு எனும் ஆறாவது அறிவை இறைவன் வழங்கியுள்ளார். இவ்அறிவைப் பயன்படுத்தி ஒவ்வொருவரும் செய்யும் நற்கருமங்களும் கணக்கிடப் பெறுகின்றது. தீய கருமங்களை செய்துவிட்டு பின்பு ஏதாவது நற்கருமம் செய்து விட்டால் தீய கருமத்திற்கான கெடு விளைவிலிருந்து நல் கருமத்திற்கான நல் விளைவு நம்மை காத்து விடுமென நினைப்பது நமது மடமை மற்றும் தவறான சிந்தனை. இறைவனின் கணக்கில் நல்வினையும் வரவு வைக்கப்படுகின்றது. தீவினையும் வரவு வைக்கப்படுகின்றது. நல்வினைக்கான பலன் ஆசீர்வாதமும், மகிழ்ச்சியும் உயர் நிலையும் என்று இறைவனால் தீர்மானிக்கப்பட்டு, நற்பலன்களை அவ் ஆன்மா அனுபவிக்கும் நிலையில் அவர் செய்யும் தீவினைக்கான பலன் சாபமும், துக்கமும், தாழ்நிலையுமே என்று தீர்மானிக்கப்பட்டு அதற்கான தண்டனையையும் அனுபவிக்க நேரிடும்.

அதனால் நம் முன்னோர்கள், மக்கள் ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டால் தம் மனதை அடக்கி, இறைவழிபாட்டில் மனம் செலுத்தி தீவினைகளை அகற்றி நல்வினைகளை செய்வர் என்று சிந்தித்து, நல்வினை, தீவினை என்பவற்றினை அறிவுறுத்தும் இறைவனால் உலகத்தினருக்காக அருளப்பட்ட வேதத்தினையும், புராணங்களையும் மக்கள் படித்து உணர வேண்டும் என வலியுறுத்தி வந்துள்ளார்கள். புராணங்கள், வேதங்களை படித்து அறியமுடியாத சாதாரண மக்களுக்கு வழிகாட்டவே அவற்றை உணர்ந்த ஞானிகளும், சித்தர்களும் இறைவனின் கட்டளையால் மனித சமுதாயங்களில் குறிப்பிட்ட காலப்பகுதியில் தோன்றி மக்கள் வாழ்க்கைப் பாதையினை நேர்ப்படுத்துகின்றனர். அவ்வகையில் இறைவனால் யாழ்ப்பாணத்து மக்களுக்கு வழங்கப்பட்ட அருள் ஞான வரம் ஈழத்துச் சித்தர் பரம்பரையின் ஆதிமுதற்குரு அருள் ஞான வள்ளல் கடையிற் சுவாமிகள் ஆவார் என்றால் அது மிகையாகாது.

அகத்தியர், திருமூலர் தொடங்கி கோரக்கர் வரை இருந்த பதினெண் சித்தர்கள் அடியைப் பின்பற்றி பல சித்தர்கள் தோன்றியிருக்கின்றார்கள். அவர்கள் வழி வந்தவர்களே எமது சித்தர் பரம்பரையினர். இலங்கையில் அருள் ஞான பரம்பரை ஒன்று மலர்வதற்கு வித்திட்ட மூலமுதல்வர் எமது ஆதி கடைநாதனேயாவார். இந்தியாவில் பெங்களூர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த காலத்தில் கொலைக்குற்றவாளி ஒருவனுக்கு தீர்ப்பு வழங்க வேண்டிய சமயத்தில் சுவாமிகளுக்கு ஞானத்தேடல் ஏற்பட்டது. அத்தேடல் தமக்குரிய ஞான குருவை அடைய வழிசெய்தது. அக் குருமூர்த்தியானவர் மைசூர் சிருங்கேரி மடத்தின் சங்கராச்சாரிய பீடத்தில் அறுபத்துநான்காவது தலைவராக (1817-1879) வீற்றிருந்து அருள்பாலித்த ஞான குரு ஸ்ரீநரசிம்ம பாரதியாராவார். முத்தியானந்தர் எனும் தீட்சா நாமம் கொண்டு குருவின் கட்டளையை சிரமேல் கொண்டு 1862 ஆம் ஆண்டு ஈழநாட்டில் ஞான கடாட்சம் புரிய திருவுளம் கொண்டு சுவாமி முத்தியானந்தர், சுவாமி சின்மயானந்தர், சுவாமி நிரஞ்சனானந்தர் என்ற மூன்று சித்தர்கள் ஈழம் வந்தனர் என்று கர்ண பரம்பரைச் செய்தி கூறுகின்றது. சுவாமி முத்தியானந்தர் யாழ்ப்பாணம் பெரிய கடைப் பகுதிகளில் அதிகம் நடமாட்டம் செய்து வந்தமையால் கடையிற் சுவாமிகள் என்ற திரு நாமமே நிலை பெற்றுவிட்டது. மண்டைதீவில் நன்னியார் என்பவரின் வீட்டின் ஒரு பகுதியில் இருந்து அருளாட்சி செய்தார் சுவாமிகள். அவ் வீடு பிற்காலத்தில் சிதைந்து போய் விட்டாலும் சுவா மிகள் தங்கியிருந்த பகுதி மட்டும் அவ் ஊர் அன்பர்களால் இன்றும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. யாழ்.மண்ணில் சுவாமிகளின் சித்து விளையாடல்களோ எண் ணிலடங்கா. மிக வறிய நிலையி லிருந்த அன்பர் ஒருவரிடம் இரு ம்புத் துண்டு ஒன்றைப் பெற்று அதனைப் பொன்னாக்கி அவர் வறுமையைப் போக்கியருளினார். ஐந்து வயதாகியும் எழுந்து நடக்க முடியாதிருந்த குழந்தை ஒரு வரை எழுந்து நடக்கச் செய்தார். திருநெல்வேலி ஊரைச் சேர்ந்த பக்தை ஒருவரின் கைவளங்கா நிலையில் இருந்த போது சுவாமிகள் அந்நோயை குணமாக்கினார்.



இணுவில் அம்பிகைபாகர் என்ற தமிழ் பேரறிஞர் ஒருவர் மாதவச் சிவஞான சுவாமிகளின் சீடர் ஒருவரால் எழுதப்பட்ட தணிகைப் புராணத்திற்கு உரை எழுதும் பணியில் ஈடுபட்டிருந்த போது சில பாடல்களுக்கு உரைநடை காண்பதில் கஷ்டமுண்டாயிற்று. ஒருநாள் அம்பிகைபாகர் பெரிய கடைதெரு வழியே சென்று கொண்டிருந்த போது கணீர்க் குரலில் சில பாடல்கள் பாடப்பட்டு அதன் விளக்கத்தையும் சொல்லிக் கொண்டிருந்தார் எம் சுவாமிகள். அப்பாடல்கள் அம்பிகைபாகர் பொருள் காண சிரமப்பட்ட பாடல்களேயாம். அன்று முதல் அவரும் சுவாமிகளின் அன்பரானார். சுவாமிகள் தமது முதன்மைச் சீடர் செல்லப்பா சுவாமிகளை ஆட்கொண்ட சம்பவம் விநோதமானது. நல்லூர் பகுதியில் வாழ்ந்து வந்த செல்லப்பர் எனும் நாமம் கொண்டவர் சுவாமிகளிடம் ஆரா அன்பு பூண்டவர். சுவாமிகளைக் காண பெரியகடைப் பகுதிக்கு சென்ற போது சுவாமிகள் கடலை க்கார பெண்மணியிடமிருந்து ஒரு ரூபா நாணயம் ஒன்றை வாங்கி அதை வெற்றிலையில் மடித்து செல்லப்பரின் கையில் கொடுத்து, தம் கையிலிருந்த குடையை அவர் தலைமேல் அசைத்துத் தட்டி "ஓடடா" என்றார். அன்றிலிருந்து பதினைந்து நாட்கள் வரை பூவுலகு நிலை மறந்த நிலை செல்லப்பருக்கு. அதன்பின் அவர் உலகம் போற்றும் உத்தம ஞானியாகி தம் சீடராக யோகர் சுவாமிகளை உருவாக்கியமை உலகம் அறிந்ததே. தம்மை பித்தனாக கருதிய பொலிஸார் ஒருவரை தம் சீடனாக்கியமை குறிப்பிடத்தக்கது. பெரியகடைப் பகுதிகளில் பைத்தியக்காரரைப் போல் திரிந்து கொண்டிருந்த எமது குருநாதனை பித்தனாகவே கருதிய பொலிஸார் அவரை மனநல மருத்துவமனையில் சேர்க்கக்கருதி அவரை தம்முடன் அழைத்துச் சென்று பொலிஸ் நிலையத்தின் ஓர் அறையில் பூட்டி வைத்தனர். மறுநாள் கதவைத் திறந்து பார்த்தால் சுவாமிகள் அங்கு இல்லை.

அவர் பழையபடி பெரிய கடைத் தெருவில் உலாவித் திரிந்து கொண்டிருந்தார். அன்றிலிருந்து யாழ்.பொலிஸாரும் சுவா மிகள் பக்தரானார்கள்.

சுவாமிகளின் சித்து விளையாடல்கள் இவ்வாறு பல. சுவாமிகள் தமது இறுதிக் காலத்தில் "நீர்வாவியடி" எனும் தலத்திலேயே தங்கிவிட்டார்கள். சமாதி கூடும் காலத்தை முற்கூட்டியே தமது சீடரான குழந்தைவேல் சுவாமிகளுக்கு அறிவுறுத்தியிருந்தார். அதன்படி குழந்தைவேல் சுவாமிகள் தமது சுவாமிகளின் ஆணைப்படி சமாதிக்கான முன் னேற்பாடுகளை செய்திருந்தார். எம் குருநாதர் 1891ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பூரட்டாதி நட்சத் திரம் கூடிய நன்னாளில் மகா சமாதி கூடினார். அவர் சமாதி கூடிய இடத்திலேயே மகாசமாதி அமைக்கப்பெற்று அதன்மேல் சிவ ஆலயம் ஒன்றும் அமைக்கப்பெற்றது. ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தியநாதர் தேவஸ்தானமாக திகழும் கடையிற் சுவாமிகளின் சமாதிச்சிவாலயம் அன்பர்களின் முயற்சியினால் இன்று சிறப்பாகக் கட்டி எழுப்பப்பட்டு வேத ஆகம விதிப்படி சிவபூஜை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தைப் பொங்கல், மகாசிவராத்திரி, பிரதோஷம், பங்குனி உத்தரம், சித்திரா பௌர்ணமி, ஆனி உத்தரம், ஆடிப்பூரம், நவராத்திரி, கௌரி விரதம், திருவெம்பாவை, கடையிற் சுவாமிகள் குருபூஜை, திருவிழா முதலான முக்கிய திருநாட்கள் இங்கு வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது.

அடியார்கள் அனைவரும் இப் பூஜைகளில் கலந்து கொண்டு ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தியநாதப் பெருமானின் திருவருளையும் அருட்குரு கடையிற் சுவாமிகளின் குருவருளையும் பெற்று பேரானந்தம் பெறுவோமாக.

**கடையிற் சுவாமிகளின் அடியார்கள்.**





கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலய அறநெறிப் பாடசாலைக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 21ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் விருந்தினராக கலந்துகொண்டு கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். இதில் ஆலய குருக்கள், அறநெறிப் பாடசாலை நிர்வாகிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மக்கள் வங்கியின் பணம் வைப்பிலிடும் மற்றும் மீளப்பெறும் இயந்திரம் நேற்று சாவகச்சேரியில் திறந்து வைக்கப்பட்டது. சாவகச்சேரி நீதிமன்றத்திற்கு அருகாமையில் ஏ-9வீதியில் இந்த இயந்திரம் நிறுவப்பட்டு நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் நிதி அமைச்சின் செயலாளர், மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் எம்.வசந்தகுமார், யாழ் பிராந்திய முகாமையாளர் ஆகியோர் இயந்திரத்தை உத்தியோகபூர்வமாக மக்கள் பாவனைக்காக திறந்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து வாடிக்கையாளர்கள் இயந்திரம் மூலமாக பணம் வைப்பிலிடும் மற்றும் மீளப்பெறும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். நிகழ்வில் சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-சுபேசன்)




# கறிமுருங்கை இலை தேவை



நல்ல பசுமையான பூச்சி புழுத் தாக்கம் பழுத்தல் (மஞ்சள் நிறம்) அற்ற கறி முருங்கை இலை பெருந்தொகையாக கொள்வனவு செய்யப்படும். மேலேயுள்ள படத்தில் உள்ளது போல குலக் குகளாக ஒடித்து வழங்க வேண்டும். (576)

முகவரி
Nutri Food Packers, கிளுவானை ஒழுங்கை,
(Kopay Christian College அருகாமை)
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
தொடர்புகளுக்கு:- தொ.பே.இல: 076 628 9170


# நல்லூரில் பாரதி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்தியத் துணைத்தூதரகமும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் இணைந்து முன்னெடுக்கும் பாரதி விழா எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் தி.வேல் நம்பி தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன் முதன்மை உரை ஆற்றுவார். யாழ். மாநகர ஆணையாளர் கவிஞர் த. ஜெயசீலன் வாழ்த்துரையையும் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தொடக்கவுரையையும் ஆற்றவுள்ளனர்.

தமிழ்ச்சங்கத்தால் நடத்தப்பட்ட கவிதைப் பயிலரங்கில் கலந்துகொண்டு சித்தி பெற்றோருக்கான மதிப்பளிப்பு அன்றைய தினம் இடம் பெறுவதுடன் அவர்களுள் தேர்வு செய்யப்பட்டோர் கவிஞர் சோ.ப. தலைமையில் நடைபெறும் கவியரங்கில் "புயலாய் புதுப்புனலாய் என்ற பொருளில் கவிதை படிக்கவும் உள்ளனர்.

சிறப்பு நிகழ்வாக தமிழ்ச்சங்கச் செயலர் இ.சர்வேஸ்வராவின் தொகுப்பாக்கத்தில் யாழ் .முன்னணிப் பாடகர்கள் இணைந்து வழங்கும் "நல்லதோர் வீணை செய்தே" என்ற பொருளில் அமைந்த இசை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளது. (இ)


# யாழ்.முகாமையாளர் சம்மேளனம்

யாழ்.மாவட்டத்திலுள்ள JCB, EXCAVATOR உரிமையாளர்களுடனும் மற்றும் யாழ்.மாவட்ட விவசாய சம்மேளன நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் ஒன்றினை யாழ்.முகாமையாளர் சம்மேளனம் ஒழுங்குசெய்துள்ளது.

காலம்: 24.09.2018 திங்கட்கிழமை
நேரம்: மாலை 3.30
இடம்: யூரோவில் மாநாட்டு மண்டபம்
17, விவசாய திணைக்கள வீதி, நல்லூர்.
மேலதிக விபரங்களுக்கு: வி.நிரஞ்சன்
077 304 3206
(3924)

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

# நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்க ஒன்றிணைவோம்

- மின்சார பாவனையாளர் முறைப்பாடுகளை தீர்ப்பதற்கான ஆலோசனைகள்
- குடிநீர் துறையிலுள்ள பிரச்சினைகளுக்கான கொள்கைத் திட்டமிடல் ஆலோசனைகள்
- பெற்றோலிய பாவனையாளர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கொள்கைத் திட்டமிடல் ஆலோசனைகள்
- வீதி விளக்கு முகாமைத்துவ தேசிய திட்ட வரைவுக்கான ஆலோசனைகள்
- உரிமதாரர்களுக்கான பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவத் திட்டத்துக்கான ஆலோசனைகளுக்கான...

உங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எழுத்துமூலமாக எங்களுக்கு அனுப்பிவையுங்கள்.

அனுப்பிவைக்கவேண்டிய முகவரி :
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தக கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03.

இணையதளம் : www.pucsl.gov.lk | மின்னஞ்சல் : consultation@pucsl.gov.lk
முகநூல் : www.facebook.com/pucsl | பெக்ஸ் : 011 2392641

இந்த நிகழ்வுக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

திகதி : 27 ஆம் திகதி செப்டெம்பர் 2018 (வியாழக்கிழமை)
நேரம்: 8.30 AM - 2.00 PM
இடம்: செல்வா பெலஸ் மண்டபம் - யாழ்ப்பாணம்
பங்குகொள்ள விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்
0770 399 119

# தேசிய மட்டப் போட்டியில் வெற்றிபெற வாழ்த்துகிறோம்

கிளிநொச்சி கனகபுரம் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை மாணவர்கள்



செல்வி தமிழ்விழி அருமைநாயகம் (நீளம் பாய்தல்)



செல்வி பதுசாளினி சுரேஸ்குமார் (100 Mஓட்டம்)

25.09.2018 கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் தேசிய மட்டப் போட்டிகளில் நீளம்பாய்தல், 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் சாதனை படைக்க வாழ்த்துகிறோம்.

(5762)

கோண்டாவில்,
021 222 7938

நிர்வாக சபை,
சிவபூமி அறக்கட்டளை.


# இராசி பலன்

**மீனம்:** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், தூரதேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும்.

**மேடம்:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், ஆரோக்கியமான நாள், பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர்.

**கும்பம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**கடகம்:** உதவுவதாகச் சொன்னவர்கள் உதவி கேட்டு வரலாம், குடும்பத்தில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் | | | ராகு |
| கேது, செவ் | | | |
| சனி | | குரு, சுக் | சூரி, புத |

சந்திராஷ்டமம்
மகம், பூரம்
இரவு 6.28 மணிக்கு
மீன-சந்

24.09.2018
புரட்டாதி 08, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 7.42 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 12.53 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
பூரணை விரதம்
வளவன்

**மகரம்:** தொலைபேசி வழியில் உற்சாகம் தரும் செய்திகள் வந்து சேரலாம், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கைக்குக் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், கௌரவமான நாள்.

**தனுசு:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர்.

**விருச்சிகம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**துலாம்:** வியாபார விருத்தியுண்டு, எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** கூட்டு முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள், உடல் நலன் சீராகும், பகைவர்கள் விலகுவர், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

# அமைச்சர் சரத் பொன்சேகா முல்லைத்தீவுக்கு விஜயம்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவி வருகின்ற வனஜீவராசிகள் திணைக்களம் தொடர்பான குறைபாடுகளைக் கேட்டறியும் நோக்குடன் ஒழுங்குபடுத்தப்பட்ட விசேட கலந்துரையாடலில் வனஜீவராசிகள் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கலந்து கொண்டு மக்களது குறைகளைக் கேட்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளையும் தெரிவித்திருந்தார்.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வன ஜீவராசிகள் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, மீள்குடியேற்ற பிரதியமைச்சர் காதர் மஸ்தான், வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்கள பணிப்பாளர் மற்றும் உயரதிகாரிகள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களினதும் பிரதேச செயலாளர்கள், பொதுமக்களென பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது மக்கள் மற்றும் அதிகாரிகளிடம் குறைகளைக் கேட்டறிந்த அமைச்சர் இந்த விடயங்கள் தொடர்பில் எடுக்கவுள்ள நடவடிக்கை தொடர்பில் தெளிவுபடுத்தினார். (2-281)

## கிளிநொச்சியில் அடையாள உண்ணாவிரதம்



(கிளிநொச்சி)

ஈழவிடுதலைப் போராட்டத்தில் தன்னுயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக அடையாள உண்ணாவிரதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 7 மணிக்கு ஒழுங்கமைக்கப்பட்டு இருக்கின்றது.

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இந்திய அமைதி காக்கும் படையினரிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து காந்திய வழியில் நீரும் அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்து கோரிக்கைகள் நிறைவேற்றப்படா சமயம் உறுதியுடன் உயிர் துறந்தவர் .இவரை இந்திய அரசு இறக்க விட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையே நடைபெற்ற போருக்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாக இருந்தது

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினுடைய ஒழுங்கமைப்பில் அடையாள உண்ணாவிரத நிகழ்வு நடைபெறவுள்ளது.

ஏற்பாட்டாளர்கள், தமிழ்த் தேசிய உணர்வாளர்கள், பொது மக்கள் என அனைவரையும் அழைக்கின்றார்கள். (2)

# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பள நிர்ணய சபையை அமைக்க வேண்டும்

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கையில் தனியார் மற்றும் அரச ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பாக ஆணைக் குழுக்களை நியமித்து அதனூடாக சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்காக எடுக்கும் நடவடிக்கையை நாம் வரவேற்கின்றோம் என கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை எங்களுடைய பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் ஓர் சம்பள நிர்ணய சபையை அமைத்து அவர்களுக்கான வேதனத்திற்கான உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க முன்வராதது ஏன் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், கல்வி இராஜாங்க அமைச்சருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தலவாக்கலையில் நேற்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சம்பள போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து சமயங்களும் ஒன்றாக மதிக்கப்பட வேண்டும். அவர்களுக்கான மரியாதை கொடுக்கப்பட வேண்டும். அனைத்து துறைகளிலும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

ஆனால் எங்களுடைய பெருந்தோட்ட தொழிலாளர்களின் நிலை அவ்வாறு இல்லை. நாங்கள் எதை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றாலும் அதற்காக போராட்டம் செய்தே பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை இருக்கின்றது.

இது அடிமைகளாக இருக்கின்றவர்களின் நிலை போலவே இருக்கின்றது. ஏனையவர்கள் சம்பள போராட்டம் செய்யும் போது அதற்காக குரல் கொடுக்கும் அனைவரும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினைக்கு குரல் கொடுப்பதில்லை. இதற்கு காரணம் என்ன நாங்களும் இந்த நாட்டு பிரஜைகளே.

இந்த நாட்டினுடைய அபிவிருத்தி முதல் ஆட்சியமைப்பதற்கு அரசாங்கங்களை கொண்டு வருவது முதல் எங்களுடைய பங்களிப்பை வழங்கி வருகின்றோம்.

ஆனால் எங்களுக்கு என்று பிரச்சினைகள் வரும் பொழுது நாங்கள் ஓரம் கட்டப்படுகின்றோம்.

இதனை இந்த அரசாங்கம் மட்டுமல்லாது இந்த நாட்டை ஆட்சி செய்த அனைத்து அரசாங்கங்களும் இதனையே பின்பற்றி வருகின்றது.

எனவே இந்த நிலையில் மாற்றம் வேண்டும். நாங்கள் 2 வருடத்திற்கு ஒரு முறை எங்களுடைய ஊதிய உயர்விற்கு போராட்டம் செய்ய முடியாது. ஏனையவர்களுக்கு என்ன நடைமுறை இருக்கின்றதோ அது போன்று ஒரு நடைமுறையை எங்களுக்கும் அறிமுகம் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்று பெருந்தோட்ட கம்பனிகள் பல தேவையற்ற செலவீனங்களை செய்வதை நாங்கள் பார்க்கின்றோம். தோட்டங்களை முறையாக பராமரிப்பதில்லை.

உரிய நேரத்திற்கு அதற்கான பசளைகளை இடுவதில்லை. இப்படி தோட்ட நிர்வாகங்கள் செய்கின்ற குறைபாடுகளுக்கு எங்களுடைய மக்கள் எந்தவிதத்திலும் பலிக்கடாவாக முடியாது என்றார். (2)

## டிப்பர்-மோ.சைக்கிள் விபத்து; ஒருவர் பலி

மாத்தளை - தம்புள்ள பிரதான வீதியில் மணல் ஏற்றும் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள் ளானதில் மோட்டார் சைக்கிளின் சாரதி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் லெனதோர என்ற இடத்திலேயே இடம்பெற்றுள்ளது. குறித்த விபத்தில் நாலந்தா பகுதியைச் சேர்ந்த 24 வயதையுடைய இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

மேலும் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் டிப்பர் வாகனத்தின் சாரதியை கைதுசெய்துள்ளனர். (2)

## கூரை உடைந்து வீழ்ந்ததில் மாணவன் உயிரிழப்பு

உடப்பு பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றின் கட்டட கூரை மீதேறிய மாணவன், கூரை உடைந்து வீழ்ந்ததில் கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக உடப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை, 6 ஆம் வட்டாரம் உடப்பைச் சேர்ந்த 13 வயதுடைய திவாகரன் என்ற மாணவன் புறா பிடிப்பதற்காக கூரை மீது ஏறியுள்ளான். இதன்போது கூரை உடைந்து விழுந்ததில் மாணவன் கீழே விழுந்து காயங்களுக்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

உயிரிழந்த மாணவனின் சடலத்துக்கான பிரேத பரிசோதனைகள் வைத்தியசாலையில் இடம்பெற்றதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)





தியாகி திலீபனின் நினைவு தினத்தினை முன்னிட்டு வல்வெட்டித்துறையில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் ஜனநாயக போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் இரத்ததான நிகழ்வில் ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் உட்பட பலர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். (படங்கள்:-மகாலிங்கம்)

# வீடொன்றினுள் புகுந்த பொலிஸார் மோ.சைக்கிளை எடுத்துச் சென்றனர்



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் தாண்டிக்குளம் பகுதியில் வீடொன்றினுள் புகுந்து மோட்டார் சைக்கிளொன்றை போக்குவரத்து பொலிஸார் எடுத்துச்சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது.

வவுனியா நகர்ப்பகுதியில் இருந்து தாண்டிக்குளத்தில் உள்ள தனது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞனொருவரை போக்குவரத்து பொலிஸார் மறித்துள்ளனர்.

எனினும் குறித்த இளைஞன் நிறுத்தாமல் சென்று தனது வீட்டினுள் மோட்டார் சைக்கிளை விட்டுள்ளதுடன் தானும் வீட்டிற்குள் சென்றுள்ளான்.

இளைஞனை பின்தொடர்ந்த பொலிஸார் இளைஞனது வீட்டிற்குள் சென்று இளைஞனை வெளியில் வருமாறு மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுத்ததுடன் குடும்பத்தினருடனும் இளைஞனை வெளியில் விடுமாறும் கோரினர்.

இந் நிலையில் இளைஞன் வெளியில் வராமையால் வீட்டு வளவினுள் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை எடுத்த பொலிஸார் அதனை தாம் கொண்டு சென்றிருந்தனர். (2)

# "மழை தருமோ என்தேசம்" கவிதை தொகுப்பு நூல் வெளியீடு



(வவுனியா)

யாழ்.பல்கலைக்கழக மாணவி தே.சுரேக்காவின் 'மழை தருமோ என் தேசம்' எனும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் மன்னா பத்திரிகை ஆசிரியர் அருட்பணி லக்கசன் டி சில்வா தலைமையில் வவுனியா இறம்பைக்குளம் மறைக் கோட்ட நடு நிலையத்தின் மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழகத்தின் உளவியல் துறை விரிவுரையாளர் க.கவிந்தன் கலந்து கொண்டிருந்தார்.

நிகழ்வில் கலந்து கொண்டிருந்த அதிதிகளால் 'மழை தருமோ என் தேசம்' கவிதை தொகுப்பு நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கவிதை நூல் வெளியீட்டைத் தொடர்ந்து தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமார் நூல் ஆசிரியரை பொன்னாடை போர்த்தி கௌரவித்து உரையாற்றிய அவர் தமிழ் விருட்சம் அமைப்பானது படைப்புக்கள், ஆக்கங்கள் மென்மேலும் வளர்ச்சியடை வேண்டும் என்பதற்காக படைப்பாளிகளையும் கலைஞர்களையும் கௌரவித்து ஊக்குவித்து வருகிறது என தெரிவித்தார்.

நிகழ்வில் பங்குத்தந்தை அருட்பணி இராஜநாயகம், வவுனியா சுகாதாரத் திணைக்களம் வைத்தியர் முத்துக்குமார் மதிதரன், அருட்தந்தை லக்கோன்ஸ் பிகராடோ, மடு பிரதிகல்விப் பணிப்பாளர் ஆனந்தன் லோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2)

# பரிசளிப்பு நிகழ்வின் மண்டபம் மாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருநெறிக் கழகம் கடந்தவருடம் கிளிநொச்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கு நடத்திய சைவநெறித் தேர்வுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கிளி/கிளிநொச்சி ம.வித்தி யில் நடைபெறவுள்ள நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் அன்றைய தினம் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)




# ஊர்வனிகன்பற்று இந்து மயானத்தை பார்வையிட்டார் பிரதேசசபை தவிசாளர்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் ஊர்வனிகன் பற்றில் உள்ள இந்து மயானத்தை பச்சிலைப்பள்ளி பிரதேசசபை தவிசாளர் சு.சுரேன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஊர்வனிகன்பற்றில் உள்ள இந்து மயானத்தை பல குடும்பங்கள் பயன்படுத்திவருகின்றனர். ஆனாலும் இதுவரை காலமும் அடிப்படைத்தேவைகள் ஏதும் இல்லாது வெறுமையாக காணப்பட்ட குறித்த இந்துமயானத்துக்கு கிராம மட்ட அமைப்புக்களின் தொடர்ச்சியான வேண்டுகோளிற்கு அமைய பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் அண்மையில் சென்றிருந்தார்.



அங்கு கூடியிருந்த அமைப்புக்களிடம் கருத்து தெரிவிக்கையில், குறித்த இந்து மயானம் இரண்டு மாதங்களில் புனரமைத்து தரப்படும் என உறுதிமொழி வழங்கியுள்ளார். அத்துடன் மக்களின் அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றுவதற்காக பச்சிலைப்பள்ளி பிரதேச சபை கடுமையான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் மக்களின் கருத்துகளின் அடிப்படையில் அவர்களின் பங்குபற்றலுடன் எதிர்வரும் காலங்களில் பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

குறித்த பயணத்தில் பிரதேச சபையின் உறுப்பினர்களான அருட்செல்வி, த.ரமேஸ், வீரவாகுதேவர் மற்றும் கிராம அலுவலர் காண்டீபன் மற்றும் பொது அமைப்புக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

# ஓமந்தை ம.கல்லூரி மாணவன் புதியவகை அலுமாரி கண்டுபிடிப்பு

(வவுனியா)



வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி மாணவனான ரவிந்திர குமார் இளமாறன் என்பவர் ஒரு புதியவகை அலுமாரியை கண்டுபிடித்துள்ளார்.

கடந்த 14ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை நடந்த தேசிய மட்ட கண்காட்சியில் கலந்து கொண்டு தனது பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இக் கண்காட்சியானது ஆணையாளர் மகேஸ் எதிரிசிங்க தலைமையில் நடத்தப்பட்டது.

எதிர்வரும் 26.10.2018 இல் இவருக்கான பரிசில்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கி வைத்து கௌரவிப்பார். (2)

# வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்த பிரதேச சபை தலைவர்

(மன்னார்)

மாந்தை மேற்கு மற்றும் மடு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வரட்சியின் காரணமாக மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

வரட்சியினால் பெரியமடு, முள்ளிக்குளம், சின்னவலயன்கட்டு, இரணை இலுப்பக்குளம், பரிசன் குளம், கீரிச் சுட்டான், விலாத்திக்குளம், கல்மடு போன்ற கிராம மக்கள் இவ்வாறு பாதிப்படைந்துள்ளனர்.

அந்த கிராமங்களில் உள்ள மக்களை நேற்று முன்தினம் சனிக்கிழமை காலையில் இருந்து மாலை வரை மாந்தை மேற்கு பிரதேச சபை தலைவர் ஆ.இ.சந்தியோகு நேரில் சென்று சந்தித்து மக்களின் குறைகளை கேட்டறிந்தார்.இதன் போது அம்மக்கள் தெரிவிக்கையில்,

கடும்வரட்சியின் காரணமாக பாவனைக்கும், குடிப்பதற்குமான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மேலும் தமது கிராமங்களுக்கான போக்குவரத்து, மருத்துவப் பிரச்சினை தொடர்ச்சியாக காணப்படுவதோடு வாழ்வாதார திட்டங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும்பல்வேறு குறைபாடுகளை தெரிவித்தனர்.

மக்களின் குறைகளை கேட்டறிந்த மாந்தை மேற்கு பிரதேச சபையின் தலைவர் மிக அவசர தேவையாக உள்ள குடிநீர் மற்றும் வீதி புனரமைப்புகளை உரியவர்களிடம் பேசி உரிய காலத்தில் தீர்த்து வைப்பதாக தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# மனைவியை காணவில்லை; கணவன் பொலிஸில் முறைப்பாடு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில்குடும்பப்பெண்ணை காணவில்லை என கணவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். கிளிநொச்சி இராமநாதன் பாம் மருத நகர் பகுதியை சேர்ந்த 46 வயதான ஐந்து பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக கணவர் நேற்று முன்தினம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 13ஆம் திகதி வீட்டிலிருந்து சுகயீனம் காரணமாக வைத்தியசாலைக்கு சென்று திரும்புவதாக தெரிவித்து சென்ற குறித்த குடும்ப பெண் வீடு திரும்பவில்லை என கணவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த பெண்ணை தமது உறவினர்கள் வீடுகள் உள்ளிட்ட பல இடங்களில் தேடிய போதிலும் இன்றுவரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என குறித்த பெண்ணின் கணவர் தெரிவிக்கின்றார்.

குறித்த நபர் தொடர்பான தவல்கள் கிடைக்குமிடத்து தந்துதவுமாறு குடும்பத்தினர் கோரிக்கை விடுக்கின்றனர்.

மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில் கிளிநாச்சி பொலிஸாரும் தீவிர விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அண்மைக்காலமாக குடும்ப பெண்கள் வெளிநாடுகள் செல்வதும், காணாமல் போனதன் பின்னர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவங்களும் தொடர்ந்த வண்ணம் இடம்பெற்று வரும் நிலையில், காணாமல் போன குறித்த குடும்ப பெண் தொடர்பில் தகவல் கிடைக்குமிடத்து தந்துதவுமாறு குடும்பத்தினர் கோருகின்றனர்.

காணாமல் போன பெண் மருத நகர் பகுதியை செர்ந்த மஞ்சுளா என அழைக்கப்படும் நாகராசா முனியம்மா என்ற குடும்ப பெண் என குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். இவர் தொடர்பான தகவல்கள் கிடைக்குமிடத்து அவரின் கணவரான இராசதுரை நாகராசா என்பவரை 077 675 3485 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவல் தெரிவிக்குமாறும் கோருகின்றனர். (2)









# வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா



மாயவா, கேசவா, கோபாலா என வானைப்பிளந்த கோசங்கள் ஒலிக்க வல்லிபுர மாயவர் தேரில் ஆரோகணித்தார். வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது. நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் வசந்தமண்டப பூசைகள் இடம்பெற்று சக்கரத்தாழ்வார் உள் வீதியுலா வலம்வந்து தேரில் ஆரோகணித்தார். முற்பகல் 10 மணியளவில் மாயவா, கேசவா, கோபாலா என்ற வானைப்பிளந்த கோசங்கள் ஒலிக்க வல்லிபுர மாயவர் தேரில் வலம் வந்தார். அடியவர்கள் அங்கப்பிரதிஷ்டை, கற்பூரச்சட்டி, ஆட்டக்காவடி, தூக்குக் காவடிகள், பறவைக் காவடிகள், எடுத்து நேர்த்திக்கடனை செலுத்தினர்.

(படங்கள்:-மகாலிங்கம் )

# 15 ஏக்கர் நிலப்பரப்பை புற்றரையாக்கி யானைகளின் உணவுப் பிரச்சினைக்குத் தீர்வு

## அமைச்சர் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

காட்டு யானைகளுக்கு உணவளிப்பதற்காக, 15 ஏக்கர் நிலப்பரப்பை, புற்றரையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என, நிலையான அபிவிருத்தி மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இந்த நோக்கத்துக்குத் தேவையான வனவளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும், நாடாளு மன்றத்தில் உரையாற்றும் போது அவர் தெரிவித்தார்.

அடையாளம் காணப்பட்டுள்ள வனப்பகுதிகளில், புற்களை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறிய அவர், இதற்கான நிதி, ஐக்கிய நாடுகள் சபையால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்தப் புற்றரைகள் மூலம், சுமார் 1,500 காட்டு யானைகளுக்கு உணவளிக்க முடியும் என்றும்இதனால் உணவு தேடி, கிராமங்களுக்குள் நுழையும் யானைகளின் அளவு கட்டுப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையால், மனிதன் - யானைகளுக்கிடையில் ஏற்பட்டுள் முரண்பாடுகளை தீர்க்கமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# மேலும் 69 சீனக்குடா எண்ணெய்த் தாங்கிகள் இந்தியாவின் கட்டுப்பாட்டில்

(திருமலை)

திருகோணமலை- சீனக்குடாவிலுள்ள 85 எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவின் உதவியுடன், கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்யும் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதற்கமைய, சீனக்குடாவில் உள்ள, 85 மேல் நிலை எண்ணெய் தாங்கிகள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும், லங்கா இந்தியன் ஒயில் நிறுவனமும் இணைந்து உருவாக்கும், கூட்டு துணை நிறுவனம் ஒன்றின் மூலம் அபிவிருத்தி செய்யப்படும்.

அபிவிருத்தி செய்யப்படும் 85 மேல் நிலைத் தாங்கிகளில் 16 தாங்கிகள், பின்னர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தனிப்பட்ட பயன்பாட்டுக்காக வழங்கப்படும்.

எஞ்சிய 69 தாங்கிகளையும், லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம், அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படும் காலத்துக்கு, பெற்றோலிய வணிகத்துக்காகப் பயன்படுத்தும் இந்தத் திட்டத்தை உள்ளடக்கிய அமைச்சரவைப் பத்திரத்தை பெற்றோலிய வளங்கள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

அதேவேளை, லங்கா இந்தியன் ஒயில் நிறுவனத்தினால் தற்போது பயன்படுத்தப்படும், 15 கீழ் நிலை எண்ணெய்த் தாங்கிகளின் நில உரிமை தொடர்ந்தும் அரசாங்கத்தின் வசமே இருக்கும் என்றும் இந்த உடன்பாட்டு வரைவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

## கேரளக் கஞ்சாவுடன் 25 இளைஞர்கள் கைது

(ஹற்றன்)

நுவரெலியாவிற்கு சுற்றுலா சென்ற 25 இளைஞர்கள் ஒருதொகை கேரள கஞ்சா மற்றும் சட்டவிரோத சிகரட்டுகளுடன் ஹற்றன் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹற்றன் குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று முன்தினம் மாலை மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த கைது இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த இளைஞர்களிடமிருந்து பெருந்தொகை கேரளக்கஞ்சா மற்றும் 271 சட்டவிரோத சிகரட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ)

# இரண்டு வீடுகள் வழங்கல்







(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட இரு குடும்பங்களுக்கு இராணுவத்தினால் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் உள்ள அளவெட்டி தெற்கு மற்றும் பலாலி தெற்கில் உள்ள இரு குடும்பங்களுக்கு இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடுகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

இராணுவத்தின் மனிதநேய செயற்திட்டத்தின் கீழ் பாதுகாப்பு படைகளின் யாழ். மாவட்ட கட்டளை தளபதி தர்சன ஹெட்டியாராச்சியின் உத்தரவுக்கமைய குறித்த வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மோகன சங்கர் குடும்பத்தினர் தமது மகனின் பிறந்த தினத்தை முன்னிட்டு வழங்கிய நிதி உதவியிலும் இராணுவத்தின் 2 ஆவது கெமுனு மற்றும்7 ஆவது கஜபா பிரிவின் தொழில்நுட்ப உதவியில் வீட்டு உபகரணங்களுடன், மேற் குறித்த வீடுகள் இரண்டும் வழங்கப்பட்டுள்ளன. (இ-9)

## சீனப்பெண் உயிரிழப்பு

நுவரெலிய, மாகஸ்தொட பகுதியிலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றிலிருந்து விழுந்து வெளிநாட்டுப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

சுற்றுலா விடுதியின் மூன்றாவது மாடியிலிருந்து விழுந்ததிலேயே குறித்த பெண் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

34 வயதுடைய சீனா நாட்டை சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை குறித்த விடுதியின் மூன்றாவது மாடி யிலிருந்து இயற்கையை இரசித்து கொண்டிருந்த போது தவறுதலாக விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (இ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் திரு. குமாரசாமி கார்த்திகேசு



தோற்றம் 21.11.1931

மறைவு 25.08.2018

எமது பாடசாலை ஆசிரியர் திரு.கா.குமாரபுரன் அவர்களின் அன்புத் தந்தை குமாரசாமி கார்த்திகேசு அவர்கள் கடந்த 25.08.2018 அன்று இறைபதம் எய்திய செய்தி அறிந்து துயரடைகிறோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்.

(5771)


## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்




DMI COMPUTER EDUCATION

DIPLOMA IN ENGLISH
Spoken English

ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

Reading | Writing | Speaking | Listening

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 26 / 9 / 2018 (Wed)

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | |
|---|---|---|---|
| Mon,Wed,Fri 8:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 3.30 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Sat, Sun 3:30 p.m. | Tue, Thu 08.30 a.m.<br>Tue, Thu 03.30 p.m. | சுன்னாகம் Mon,Wed,Fri 11:30 a.m<br>சண்டிலிப்பாய் Mon,Wed,Fri 1:30 p.m<br>கிளிநொச்சி Sat, Sun 10.30 a.m |

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

IELTS •Unique Test Tips •Latest course Materials

IELTS Life Skills (A1,B1) திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு


மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (Reg No. P25/0056)

DMI COMPUTER EDUCATION

| | | | | | |
|---|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சுவாமி தோரல் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V.வீதி நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | சீரணிச் சந்தி சண்டிலிப்பாய் Tel.: 021 225 6665 | No.19,A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655 |


## 38 ஆவது பிறந்த நாள் நினைவும் 33 ஆவது மாத நினைவஞ்சலியும்

### அமரர் கெங்கேஸ்வரன் தீபா



பிறப்பு 24 09 1980

இறப்பு 02 01 2016

எங்கள் உயிரோவியமே;
எமது ஆருயிர் செல்வமே நீர்
இறையடி சேர்ந்து 33 மாதங்களாகின்றன
உம்மை நினைக்காத நேரமில்லை அம்மா;
இன்று உமது பிறந்த நாளை கண்ணீருடன் கழிக்கின்றோம்
உமது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டி நிற்கும்

4 ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.


(வி-3935)

அன்புக் கணவர், மகள்,
அப்பா, அம்மா, சகோதரர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 11 10 1956

இறப்பு 21 09 2018



### மதிப்புக்குரிய பத்மகுமாரகுருக்கள்
(ஊற்றங்கரை, ஜெயந்தி குருக்கள்)

அன்னாரது பிரிவு எமக்கு மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் தருகிறது. இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஊற்றங்கரை விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

4 ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

மு.கிருஸ்ணமூர்த்தி
(மூர்த்தி)

## மரண அறிவித்தல்

### அமரர் திரு. சின்னையா நடராஜலிங்கம்
(ஓய்வுநிலை மாவட்ட முகாமையாளர், இலங்கை வங்கி - யாழ்ப்பாணம்)



குரும்பைகட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா நடராஜலிங்கம் அவர்கள் நேற்று 23.09.2018 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா- இராசரத்தினம் தம்பதிகளின் இளைய புதல்வரும் காலஞ்சென்ற நடராசா மற்றும் மனோன்மணி தம்பதிகளின் மூத்த மருமகனும், பிறேமா அவர்களின் பாசமிகு கணவரும் அம்பிகா (லண்டன்),முகுந்தன் (லண்டன்), ஜனார்த்தனன் (இலங்கை வங்கி - பருத்தித்துறை ), ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியராஜன் (லண்டன்), சுபேந்தினி (லண்டன்), அதீபா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற பாலசுந்தரலிங்கம் மற்றும் திலகவதி, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சரஸ்வதி, கிருஷ்ணானந்தன் மற்றும் சிவச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் அகானா (லண்டன்), அஸ்விகன் (லண்டன்), பவிஷா , முகுந்தன்-சுபேந்தினி தம்பதிகளின் புதுவரவு மகன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 23.09.2018 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குரும்பைகட்டி,
புலோலி.

077 821 7853
021 226 3382
+4474 607 15557 (முகுந்தன்)

தகவல்:
குடும்பத்தினர்

# தன்சானியாவில் படகு கவிழ்ந்ததில் பலி எண்ணிக்கை 207 ஆக உயர்வு



(உகாரா)

தன்சானியா நாட்டில் விக்டோரியா ஏரியில் சென்ற படகு மூழ்கி கவிழ்ந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 207 ஆக உயர்ந்துள்ளது.

ஆபிரிக்க நாடான தன்சானியாவில் விக்டோரியா ஏரியில் சென்ற சொகுசு படகு ஒன்று உகாரா தீவு அருகே மூழ்கியது. தகவல் அறிந்ததும் மீட்புப் படையினர் அங்கு விரைந்து சென்றனர்.

அதற்குள் படகு முழுவதும் மூழ்கியது. இந்த விபத்தில் பலர் பலியாகினர். தற்போது பலி எண்ணிக்கை 207 ஆக உயர்ந்துள்ளது. இதற்கிடையே உயிருடன் இருப்பவர்களை மீட்கும் பணியில் 4 நீச்சல் வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

அவர்கள் 2 பேரை மட்டும் உயிருடன் மீட்டு வந்தனர். படகில் 200 பேர் மட்டுமே பயணம் செய்ய முடியும். ஆனால் 300-க்கும் மேற்பட்டோர் ஏற்றப்பட்டனர். இதனால் எடை அதிகரித்து பாரம் தாங்காமல் படகு ஏரியில் மூழ்கியதாக உயிருடன் மீட்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

படகு மூழ்கிய விபத்துக்கு காரணமானவர்களை கைது செய்ய தன்சானியா நாட்டின் ஜனாதிபதி ஜான்மகு புலி உத்தரவிட்டுள்ளார். இன்னும் பலர் மீட்கப்படாமல் உள்ளனர். அவர்களை மீட்கும் பணி நடக்கிறது. எனவே அவர்களது உறவினர்கள் கண்ணீருடன் ஏரிக்கரையில் காத்து கிடக்கின்றனர். (இ)

# ஈரான் இராணுவ

# தீவிரவாதிகள் து

## 24 பேர் உயிரிழப்பு! 2





(டெக்ரான்)

ஈரானில் இராணுவ அணி வகுப்பில் துப்பாக்கியால் சுட்டு பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் வீரர்கள் உட்பட 24 பேர் பலியாகினர். தாக்குதல் நடத்திய பயங்கர வாதிகளில் 2 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 2 பேர் கைதாகினர்.

ஈராக் ஜனாதிபதியாக இருந்த சதாம் உசேன், ஈரானை 1980 ஆம் ஆண்டு ஆக்கிரமித்தார். அதைத் தொடர்ந்து அந்த ஆண்டின் செப்டெம்பர் 22 ஆம் திகதி இரு நாடுகள் இடையே போர் தொடங்கியது.

8 ஆண்டுகளுக்கு பிறகு ஐ.நா. சபையின் முயற்சியால் போர் முடிவுக்கு வந்தாலும், இது 20 ஆம் நூற்றாண்டில் பேரழிவை சந்தித்த போர்களில் ஒன்றாக இன்றுவரை கருதப்படுகிறது.

அந்தப் போர் தொடங்கியதை நினைவுகூர்ந்து ஈரானில் முக்கிய நகரங்களில் நேற்று முன்தினம் இராணுவ அணிவகுப்பு நடத்தப்பட்டது.

அங்குள்ள அவாஸ் நகரில் உள்ளூர் நேரப்படி காலை 9 மணிக்கு இராணுவ அணிவகுப்பு தொடங்கியது. அதை பார்வையிட ஏராளமான பொதுமக்கள் கூடியிருந்தனர்.

இந்த நிலையில், அணி வகுப்பு மைதானம் அருகே உள்ள ஒரு பூங்காவில் இருந்து அணிவகுப்பில் கலந்து கொண்ட வீரர்களையும், பார்வையிட வந்திருந்த பொது மக்களையும் குறிவைத்து சரமாரியாக துப்பாக்கியால் சுடப்பட்டது.

இராணுவச் சீருடை அணிந்த 4 பயங்கரவாதிகள் ஒன்று சேர்ந்து இந்தத் தாக்குதலை நடத்தினர். துப்பாக்கிச்சூட்டால் இராணுவ அணி வகுப்பு சீர்குலைந்தது. பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இதற்கிடையே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட பூங்காவுக்கு பாதுகாப்பு படையின

# மோடியும், அம்பானியும் இணைந்து இராணுவத்தில் துல்லிய தாக்குதல்

## ராகுல்காந்தி குற்றச்சாட்டு



(டில்லி)

மோடியும் அனில் அம்பானியும் இணைந்து இராணுவத்தில் ரூபாய் 1 1/4 இலட்சம் கோடிக்கு துல்லிய தாக்குதல் நடத்தி உள்ளனர் என்று ராகுல்காந்தி குற்றம் சாட்டினார்.

பிரான்ஸ் நாட்டின் டசால்ட் நிறுவனத்திடம் இருந்து ரூபாய் 59 ஆயிரம் கோடிக்கு, 36 ரபேல் போர் விமானங்களை வாங்குவதற்கு 2016 இல் மோடி அரசு செய்து கொண்ட ஒப்பந்தத்தில் ஊழல் நடந்துள்ளதாக காங்கிரஸ் குற்றம் சாட்டி வருகிறது.

இந்தநிலையில், பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண்டே அளித்த பேட்டியில், 'போர் விமான ஒப்பந்தத்தில் உதிரிப் பாகங்களை தயாரிப்பதற்கு இந்தியாவின் சார்பில் அனில் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனம் மட்டுமே சிபாரிசு செய்யப்பட்டது. எங்களுக்கு வேறு வாய்ப்பு எதுவும் அளிக்கப்படவில்லை' என்று கூறியிருந்தார். இதனால் இந்த விவகாரம் சூடுபிடித்து உள்ளது. ஹாலண்டே பிரான்ஸ் ஜனாதிபதியாக இருந்த போதுதான் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து டில்லியில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது.

பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி ஹாலண்டேயின் கருத்து, பிரதமர் மோடி ஒரு திருடர் என்பதற்கு உறுதியான ஆதாரமாக அமைந்து உள்ளது. அது நமது பிரதமரை திருடர் என்று கூறுகிறது. எனவே இந்த விவகாரத்தில் தனது பெயர் அடிபடுவது பற்றி மோடி தெளிவுபடுத்தவேண்டும். ஏனென்றால் பிரதமர் ஊழல்வாதி என்பதில் நாங்கள் முழுமையாக நம்பிக்கை கொண்டிருக்கிறோம். அதேபோல் நாட்டின் பாதுகாவலரான பிரதமர் திருடர் என்பது நாட்டு மக்களின் மனதிலும் ஆழமாக பதிந்து விட்டது.

எனவே ரபேல் போர் விமான ஒப்பந்தம் தொடர்பாக ஹாலண்டே கூறியிருப்பது பற்றி மோடி விளக்கம் அளிக்கவேண்டும். இதில் ஏன் பிரதமர் மௌனம் சாதிக்கிறார் என்று தெரியவில்லை. ஏனென்றால் இது நாட்டின் பாதுகாப்பு படை பற்றிய விவகாரம். ஊழல் தொடர்பான விடயம்.

ஹாலண்டேயின்கருத்தை ஏற்றுக் கொள்கிறாரா? அல்லது ஹாலண்டே பொய் சொல்கிறாரா? என்பது பற்றி பிரதமர் மோடி விளக்க வேண்டும். இதில் எது உண்மை என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும்.

ரபேல் போர் விமான முறைகேடு விவகாரம் குறித்து நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். இதில் பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி ஹாலண்டேயையும் அழைக்கலாம்.

மோடியை இந்த விவகாரத்தில் பாதுகாப்பதற்காக தேசிய ஜனநாயக கூட்டணியின் பல்வேறு இராணுவ அமைச்சர்களும் பொய் சொல்கிறார்கள் என ராகுல்காந்தி தெரிவித்தார்.

முன்னதாக ராகுல்காந்தி நேற்று முன்தினம் தனது டுவிட்டர் பதிவில், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இந்திய இராணுவம் துல்லிய தாக்குதல்(சர்ஜிக்கல் ஸ்டிரைக்) நடத்தியதை மோடி அரசு பெருமையாக கூறுவதை ரபேல் போர் விமான ஒப்பந்தத்துடன் தொடர்புபடுத்தி கிண்டல் செய்தார்.

அவர், "பிரதமர் மோடியும் அனில் அம்பானியும் இணைந்து இந்திய இராணுவத்தின் ரூபாய் 1.30 இலட்சம் கோடி மீது துல்லிய தாக்குதல் நடத்தி உள்ளனர். நாட்டுக்காக தியாகம் செய்த வீரர்கள் சிந்திய இரத்தத்தை நீங்கள்(மோடி) அவமதித்து உள்ளீர்கள். இது வெட்கக்கேடானது. மேலும் நீங்கள் இந்தியாவின் ஆன்மாவிற்கு துரோகமும் செய்து விட்டீர்கள்" என்று ஆவேசமாக குறிப்பிட்டார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் பிரதமர் மோடி, அனில் அம்பானிக்கு ரூபாய் 30 ஆயிரம் கோடியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார் என்றும் ராகுல்காந்தி குற்றம் சாட்டினார். (இ)

# ராஜீவ் காந்தி கொலை 7பேர் விடுதலைக்கு காங்கிரஸ் தடை!



(சென்னை)

ராஜீவ் கொலை குற்றவாளிகள் ஏழு பேர் விடுதலையில் காங்கிரஸ் கட்சி தடையாக உள்ளது. இதனை ஸ்டாலின் கண்டிக்காதது ஏன்? என அமைச்சர் ஜெயக்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

'அ.தி.மு.க. அரசு மீது குற்றம்சாட்டுவதையே தி.மு.க. தலைவர் ஸ்டாலின் வழக்கமாக வைத்துள்ளார்.

ஊழல்குறித்து பேசதி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகளுக்கு தகுதி கிடையாது. தி.மு.க. பஞ்சாயத்து கட்சியாக மாறிவிட்டது. இதற்காக ஸ்டாலின் வழக்கு தொடர்ந்தால் சந்திக்க தயார்.

என்னை அரிச்சந்திரன் என்று கூறிய கருணாசுக்கு நன்றி. சாதி ரீதியாக பேசிய கருணாஸ் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். அவரது பேச்சிற்கு அ.தி.மு.க. கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், தி.மு.க. தலைவரான ஸ்டாலின் இன்னும்கண்டனம்தெரிவிக்காதது ஏன்?

ராஜீவ் கொலை குற்றவாளிகள் ஏழு பேர் விடுதலை விவகாரத்தில் காங்கிரஸ் கட்சி தடையாக இருக்கிறது. அதனை ஸ்டாலின் கண்டிக்காதது ஏன்? ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டது மூடப்பட்டது தான். திறக்கப்படும் என்ற பேச்சிற்கே இடமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சவு



## சதாம்

## சந்திக்

# ...ுவ அணிவகுப்பில் துப்பாக்கிச்சூடு !

## ...ப்பு! 20 பேர் படுகாயம்



...படையினர் விரைந்தனர். அங்கே துப்பாக்கியால் சுட்டுக்கொண்டிருந்த பயங்கரவாதிகளை நோக்கி அவர்கள் துப்பாக்கியால் சுட்டனர். இதில் 2 பயங்கரவாதிகள் குண்டுபாய்ந்து பலியாகினர். 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

4 பயங்கரவாதிகளும் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 24 பேர் உயிரிழந்தனர். ஒரு குழந்தை, ஒரு பெண் உள்ளிட்ட 20 பேர் படுகாயம் அடைந்தனர். படுகாயம் அடைந்தவர்கள் அங்கிருந்து மீட் கப்பட்டு உடனடியாக அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

10 நிமிடங்களில் இந்தத் தாக்குதல் முடிவுக்கு வந்தது.

பலியான 24 பேரில் ஈரான் இராணுவ வீரர்கள் பத்திரிகையாளர்,பொது மக்களும் அடங்குவர். பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூடு பற்றி ஈரான் இராணுவ செய்தி தொடர்பாளர் ரமேசான் ஷெரீப் தெரிவிக்கையில்,

"துப்பாக்கிச்சூடு நடத்திய பயங்கரவாதிகள் சவுதி அரேபியா ஆதரவு பெற்ற அல் அவாஸியா பயங்கரவாத குழுவை சேர்ந்தவர்கள். இப்படி ஒரு துப் பாக்கிச் சூடு சம்பவம் இதுவரை நடந்தது கிடையாது" எனத் தெரிவித்தார்.


பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய இந்த அவாஸ் நகரில், வாழ்க்கைத்தரம் குறைந்து விட்டதாகக் கூறி அரசுக்கு எதிராக கடந்த ஓராண்டாக போராட்டங்கள் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் குறித்து ஈரான் வெளியுறவு அமைச்சர் முகமது ஜாவத் ஷெரீப் டுவிட் டரில் கருத்து தெரிவிக்கையில்,

"ஒரு வெளிநாட்டு அரசால் பயங்கரவாதிகள் அமர்த்தப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு, ஆயுதங்கள் தந்து, கூலி கொடுத்து அவாஸ் நகரில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மேலும், "இந்தத் தாக்குதலுக்கு ஈரான் விரைவாகவும், உறுதியாகவும் பதிலடி கொடுக்கும்" என்றும் அவர் தெரிவித்தார். (இ)

# சவுதியில் செய்தி வாசித்த முதல் பெண்



(ரியாத்)

வரலாற்றிலேயே சவுதி அரேபியாவில் முதன் முறையாக பெண்களை தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளராக பணியாற்ற அந்நாட்டு அரசு அனுமதியளித்துள்ளது.

இளவரசர் முகமது பின் சல்மான் ஆட்சி பீடமேறிய பின் விஷன் 2030 என்ற பெயரில் சவுதி அரேபிய சமூகத்தை நவீனமயமாக்கும் நோக்கில் வாகனங்களை செலுத்த பெண்களுக்கு இருந்த தடையை நீக்கினார்.

கடந்த ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி முதல் திரையரங்குகளுக்கு பெண்கள் செல்ல விதிக்கப்பட்ட தடையை நீக்கினார்.

இந் நிலையில் அல் சவுதியா தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராக வீம் அல் தஹீல் என்ற பெண் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாலை நேரத்தில் மாத்திரம் வீம் ஆண் வாசிப்பாளருடன் இணைந்து செய்தி வாசிக்க அந்நாட்டு அரசு அனுமதியளித்துள்ளது.

இளவரசர் முகமது பின் சல்மானின் இத்தகைய சீர்திருத்தங்களுக்கு பல்வேறு நாடுகளிலுள்ள பெண்கள் வரவேற்பு அளித்துள்ளனர்.

மேலும் விஷன் 2030 திட்டத்தின் கீழ் இளவரசர் இன்னும் பல புரட்சிகரமான திட்டங்களுக்கு அனுமதியளிப்பார் என சவுதி பெண்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (இ)

# சதாம் உசேனுக்கு நேர்ந்த கதியை ட்ரம்ப் சந்திக்க நேரிடும்-ஈரான் ஜனாதிபதி மிரட்டல்

(டெஹ்ரான்)

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசேனுக்கு நேர்ந்த கதியைத்தான் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சந்திக்க நேரிடும் என ஈரான் ஜனாதிபதி ரவுகானி எச்சரித்துள்ளார்.

பயங்கரமான அழிவுகளை ஏற்படுத்தும் அணு ஆயுதங்களை வைத்துள்ளதாக கூறி ஈரானின் மீது அமெரிக்கா கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. அந்தத் தடைகளால் ஈரானின் பொருளாதாரம் கடும் பின்னடைவை சந்தித்து வருகிறது. விலைவாசி பன்மடங்கு அதிகரித்துள்ளதால் அந்நாட்டு மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இந்நிலையில், ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசேனுக்கு நேர்ந்த கதியைத்தான் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சந்திக்க நேரிடும் என ஈரான் ஜனாதிபதி ரவுகானி எச்சரித்துள்ளார்.

நாட்டு மக்களுடன் வானொலி மூலம் உரையாற்றிய ஈரான் ஜனாதிபதி ஹஸன் ரவுகானி, 1980 களில் ஈரான் மீது போர் தொடர்ந்த சதாம் உசேனுக்கு ஏற்பட்ட அதேகதி அமெரிக்காவுக்கும், ட்ரம்ப்புக்கும் ஏற்படும். அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு பயந்து ஏவுகணைகளை நாங்கள் கைவிட முடியாது என அவர் தெரிவித்தார். (இ)

## பேச்சுவார்த்தை இரத்து;

# 'அகங்காரம் பிடித்த இந்தியா' இம்ரான்கான் கடும் விமர்சனம்





(இஸ்லாமாபாத்)

இந்தியா, பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர்களுக்கு இடையே நடக்க இருந்த பேச்சுவார்த்தையை இரத்து செய்தது இந்தியாவின் அகங்காரத்தையும், எதிர்மறையான பதிலாகவும் இருக்கிறது என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் விமர்சித்துள்ளார்.

நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. சபைக்கூட்டதின் போது இந்தியா மற்றும் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் இடையிலான பேச்சுவார்த்தையை நடத்த இரு நாடுகளும் முடிவு செய்திருந்தன. இதனால், 2016 ஆம் ஆண்டுக்குப் பின் மீண்டும் பேச்சு தொடங்க இருப்பது எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் காஷ்மீரில் மூன்று பொலிஸாரை வீட்டில் இருந்து கடத்திச் சென்ற ஹிஸ்புல் தீவிரவாதிகள் அவர்களை சுட்டுக் கொலை செய்து வீசிவிட்டுச் சென்றனர். அதேவேளை இந்தியப் படைகளால் கொல்லப்பட்ட தீவிரவாதி புர் ஹான் வானியைப் புனிதப்படுத்தி இஸ்லாமாபாத்தில் தபால் தலை வெளியிடப்பட்டது.

இந்தச் சம்பவங்களால் அதிர்ச்சியடைந்த மத்திய அரசு நியூயோர்க்கில் நடக்க இருந்த இருதரப்பு பேச்சுவார்த்தையை இரத்து செய்து அறிவித்தது. பாகிஸ்தானின் புதிய பிரதமர் இம்ரான் கானின் உண்மையான முகம் என்ன என்பது தெரிந்து விட்டது. இந்தப் பேச்சுவார்த்தைக்கு பின் பாகிஸ்தானின் கொடுமையான திட்டம் என்பதை அறிந்து கொண்டோம் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் விமர்சித்து இருந்தது.

இதற்குக் கண்டனம் தெரிவித்தும், பேச்சுவார்த்தையை இரத்து செய்தது குறித்தும் பாகிஸ்தான் பிரத்மர் இம்ரான் கான் தனது டுவிட்டர் பக்கத்தில் கடுமையாக விமர்சித்துள்ளார்.

"இரு நாடுகளுக்கு இடையிலான அமைதிப் பேச்சு என்னுடைய அழைப்பின் பெயரில், வேண்டுகோளின் பெயரில் தொடங்க இருந்த நிலையில், இந்தியாவின் அகங்காரமான, எதிர் மறையான செயறபாடுகள் என்னை வேதனைப்படுத்துகிறது.

எப்படியாயினும், தொலைநோக்குப் பார்வை இல்லாத எதையும் மிகப்பெரிய அளவில் சிந்திக்க இயலாத, அற்ப மனிதர்கள் மிகப் பெரிய பதவிகளில் இருப்பதை நான் என்னுடைய வாழ்க்கை முழுவதும் பார்த்திருக்கிறேன், அதைக் கடந்துதான் வந்திருக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார். (இ)

# 'மோடி நேர்மையின் அடையாளம்: ராகுல் தன்முகத்தில் தானே கரியைப் பூசிக்கொண்டார்'

## பா.ஜ.க.அமைச்சர் ரவிசங்கர் தெரிவிப்பு



(டில்லி)

பிரதமர் மோடி நேர்மையின் அடையாளம், ரபேல் போர்விமானத்தில் எந்த விதமான ஊழலும் நடக்கவில்லை. பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி ஹாலண்டே மோடியை அவதூறாகப் பேசி இருந்தால் என்ன நெருக்கடியில் அவர் அவ்வாறு பேசினார் என எங்களுக்குத் தெரியாது என மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் தெரிவித்தார்.

ரபேல் போர் விமானக் கொள்முதல் ஒப்பந்தத்தில் ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு இந்தியாதான் ஒப்பந்தம் கொடுக்கக்கூறியது என்று பிரான்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஹாலண்டே கூறியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அது மட்டுமல்லாமல், மோடியை திருடன் என்று பிரான்ஸ் ஜனாதிபதி ஹாலண்டே குற்றம்சாட்டினார் என்று காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி தெரிவித்து, மோடி விளக்கம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதற்குப் பதில் அளித்து மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் டில்லியில் நிருபர்களிடம் தெரிவிக்கையில்,

பிரதமர் மோடி நேர்மையின் சின்னம், அடையாளம். சுதந்திர இந்தியாவில் எந்தக் கட்சியின் தலைவரும்பிரதமரை இது போன்று மரியாதைக்குறைவான வார்த்தைகளால் பேச முடியாது. ராகுல் காந்தியிடம் இருந்து இதற்கு மேல் வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. நாம் தகுதியே இல்லாதவர்களிடம் இருந்து திறமையையோ அல்லதுதகுதியையோ எதிர்பார்க்க முடியாது.

பிரதமர் மோடி மீது தவறான குற்றச்சாட்டுகளைக் கூறி ராகுல் காந்தி, தனது முகத்தின் மீது தானே கரியைப் பூசிக்கொண்டுள்ளார்.

மத்திய அரசுக்கு பல்வேறு அழுத்தங்கள் கொடுப்பதன் மூல்ம் ராகுல் காந்தி பாகிஸ்தானுக்குத்தான் உதவுகிறார். அனைத்துவிதமான ஆயுதக்கொள்முதல் விவகாரங்களையும் வெளிப்படையாக்கி, ராகுல் காந்தி பாகிஸ்தானுக்கு உதவுகிறார். என்னைப் பொறுத்தவரை எதிரிகளின் கைப்பாவையாக ராகுல் செயற்படுகிறார்.

ஊழல் குற்றச்சாட்டில் சிக்கி, ராகுல் காந்தியும், அவரின் தாயும் பிணையில் வெளியே வந்துள்ளார்கள். அவர்களிடம் இருந்து நாம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும். தன்னுடைய மைத்துனர் மீது ஊழல் குற்றச்சாட்டு இருக்கிறது. ஆனால், ராகுல் அமைதியாக இருக்கிறார், அவரின் குடும்பமே போபர்ஸ் பீரங்கி ஊழல் சிக்கியது அது குறித்தும் அவர் பேசவில்லை. ராகுல் காந்தியின் வார்த்தைகளை நாடும் நம்பப்போவதில்லை, உலகமும் நம்பப்போவதில்லை.

ராகுல் காந்தியின் குடும்பமே ஊழல்கறை படிந்தது. மோடியின் அரசு , ஊழலைக் கட்டுப்படுத்தி வருகிறது. ராகுலிடம் பிரச்சினை இருக்கிறது, நாட்டில் ஊழல் உருவாக காங்கிரஸ்தான் காரணம். பிரான்ஸின் டசால்ட் நிறுவனமும், ரிலையன்ஸ் டிபன்ஸ் நிறுவனத்துக்கும் ஒப்பந்தம் கடந்த 2012ஆ ம்ஆண்டு காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலேயே போடப்பட்டுள்ளது. ராகுல் காந்தி யார் எழுதிக் கொடுத்ததைப் படித்துள்ளார். அவர் சரியாக வீட்டுப்பாடங்களைச் செய்ய வேண்டும் என ரவி சங்கர் பிரசாத் மேலும் தெரிவித்தார். (இ)

## உயிருக்கு அச்சுறுத்தல்

# ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் பாதுகாப்புக் கோரிய கோத்தா

## ஒன்றரை மாதங்களாகியும் எந்தப்பதிலுமில்லை

(கொழும்பு)

பாதாள உலக குழுத் தலைவர் மாகன்துரே மதுசின் உதவியுடன்தன்னைக்கொலை செய்வதற்கு சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக நம்பகமான தகவல் கிடைத்துள்ளது என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"பல்வேறு நம்பகமான வழிகளின் ஊடாக சரிபார்த்துக் கொண்டதில். இந்த தகவல் உண்மையானது என்று தெரிய வந்துள்ளது.

அதற்குப் பின்னர், எனக்கு முழுமையான எண்ணிக்கை கொண்ட பாதுகாப்பு அணியை மீளப்பெறுவது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் பேசினேன்.

எனது பாதுகாப்பு அணி பாதியாகக் குறைக்கப்பட்டு விட்டதாக கூறினேன். அதனைப் பார்த்துக் கொள்வதாக இணங்கிய போதிலும், அதற்குப் பின்னர் அவரிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை. இது நடந்து ஒன்றரை மாதங்களாகி விட்டது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



நீதிமன்றத்தில் முன்னிலையாகும் போது தன் மீது தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது என்றும், பாதாள உலகக் குழுத் தலைவரின் இந்த முயற்சியை அறிந்து கொண்டு தாம் மேலதிக முன்னேற்பாடுகளை மேற்கொண்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேனவையும் தன்னையும் கொலை செய்யும் சதித் திட்டம் பற்றிய செய்திகள் வெளியானதும் முன்னாள் மற்றும் பணியில் இருக்கும் இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பலர் தொலைபேசியில் அழைத்து, மேலதிக பாதுகாப்பு முன்னேற்பாடுகளைச் செய்யுமாறும், உள்ளூர் பயணங்களை குறைத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டனர் என்றும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தச் சதித் திட்டம் தொடர்பாக எங்கிருந்து தகவல் கிடைத்தது என்றோ, அதனை எவ்வாறு சரிபார்த்துக் கொண்டார் என்பதையோ கோத்தபாய ராஜபக்ஷ வெளிப்படுத்த மறுத்து விட்டார்.

அதேவேளை, தம்மைக் கொல்ல சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், இது குறித்து விசாரணைகளை நடத்துமாறும், தமக்கு முழுமையான பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸ்மா அதிபருக்கு, கோத்தபாய ராஜபக்ஷ கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (இ)

# விஜேரத்தினத்தின் கொலைப் பின்னணியில் உள்ளவர்களை கைது செய்ய வேண்டும்-மனோ

(இரத்தினபுரி)

இரத்தினபுரி கொலுவாவில பாம்காடன் தோட்டத்தில் சட்டவிரோத கசிப்பு விற்பனைக்கு எதிராக செயற்பட்ட விஜேரத்தினத்தின் கொலைக்கு பின்னணியாக இருக்கும் அனைவரையும் உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இரத்தினபுரி கொலுவாவில் கடந்த 19 ஆம் திகதி கடத்தப்பட்டு அடித்து கொலை செய்யப்பட்ட இரத்தினபுரி கொலுவாவில பாம்காடன் தோட்டத்தை சேர்ந்த விஜேரத்தினத்தின் உடலுக்கு அமைச்சர் மனோ கணேசன் நேற்று முன்தினம் இறுதி அஞ்சலி செலுத்திவிட்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி கொலை செய்யப்பட்ட விஜேரத்தினம் என்ற



இளைஞன் கசிப்பை ஒழிப்பதற்காக பொலிஸாருக்கு ஆதரவாக செயற்பட்டார்.

இவ்வாறு செயற்பட்ட இந்த இளைஞன் கொலை செய்யப்பட்டமை குறித்து நான் கவலையும் மனவருத்தமும் அடைகின்றேன். இது சம்பந்தமாக பொலிஸார் வெட்கப்பட வேண்டும்.பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உயர் அதிகாரிகள் கசிப்பு விற்பனைக்கு எதிராக செயற்பட்டு வந்த போதிலும் கீழ்மட்ட பொலிஸ் அதிகாரிகள் கசிப்பு விற்பனைக்கு ஆதரவாக செயற்படுகின்றார்கள். இதை எனக்கு உறுதியுடன் கூற முடியும்.

மேற்படி கொலை செய்வதற்கு ஆதரவாக செயற்பட்டவர்களை கைது செய்துள்ளீர்களா?இதில் சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை எத்தனை பேரை கைது செய்துள்ளீர்கள்? பிரதான சந்தேகநபரை கைது செய்துள்ளீர்களா?என்று நான் தற்போது பொலிஸாரிடம் கேள்வி எழுப்பிவிட்டு தான் வந்தேன்.

இது குறித்து உயர்பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் கலந்துரையாடியுள்ளேன். கொல்லப்பட்ட இளைஞன் மீண்டும் எழும்பி வரப்போவதில்லை. அவரது மனைவி தனிமையாகிவிட்டார்.

கசிப்பு மற்றும் போதைப் பொருள் விற்பனை என்பன இந்த நாட்டில் சட்டத்திற்கு விரோதமான செயல். இதை முற்றாக ஒழிப்பதற்கு ஜனாதிபதி தேசியமட்டத்தில் நடவடிக்கை எடுத்துள்ளார். தற்போது தேசிய மட்டத்தில் கசிப்பை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளபோதிலும் இரத்தினபுரி பொலிஸாருக்கு இதை செய்ய முடியாது போனது ஏன்?

மேற்படி பிரச்சினைக்கு காரணகர்த்தாவாகவும் பிரதான சந்தேகநபராகவும் விளங்கும் சிறிபால என்பவரை உடனடியாக கைது செய்ய வேண்டும். இந்த பிரச்சினை இன்று நேற்றல்ல தொடர்ந்து இடம்பெற்றுவரும் பிரச்சினை. எனவே இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும். இதற்கு நான் முன்னின்று போராடுவேன் என்று அமைச்சர் மனோ மேலும் தெரிவித்தார். (இ)

# மின்சாரத்தை 90 அலகுகளுக்கு குறைவாகப் பயன்படுத்தினால் பரிசு

## அமைச்சர் சியம்பலாப்பிட்டிய தெரிவிப்பு

(கொழும்பு)

மின்சாரத்தை 90 அலகுகளுக்கு குறைவாகப் பயன்படுத்தும் வீடுகளுக்கு, LED மின்குமிழ்களை நிவாரண விலையில் வழங்குவதற்கு, தீர்மானித்துள்ளதாக, மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சுகததாஸ உள்ளக அரங்கில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்சாரத்தை உற்பத்தி செய்வதைப் போலவே, முக்கியமான விடயம் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவது எனத் தெரிவித்த அமைச்சர் இதுவரை எமது நாட்டில் உள்ள 2 மில்லியன் மக்கள் சாதாரண மின்குமிழைப் பயன்படுத்துவதாகவும் பொருளாதாரப் பிரச்சினையே இதற்கான காரணமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், சாதாரண மின்குமிழ்களைப் பயன்படுத்துவதை விட LED மின்குமிழ்கள் மூலம் 60 சதவீதம் மின்சாரத்தை சேமிக்க முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### விலாவாரியாகச் சொல்லத் தெரியாதவர்கள்

படம் பார்த்துவிட்டுத் திரையரங்கை விட்டு வெளியே வருகிறவர்களிடம் அந்தப் படத்தைப் பற்றிய கருத்தைக் கேளுங்களேன். படம் மட்டம் என்றோ அறுவை என்றோ சுமார் என்றோ பிரமாதம் என்றோ பெரும்பாலும் ஒரு வரியில் மட்டுமே அபிப்பிராயம் சொல்லுவார்கள்.

ஏன் மட்டம், ஏன் அறுவை, என்னென்ன சுமார், என்னென்ன பிரமாதம் என்று அவர்களிடம் பல துணைக் கேள்விகளைக் கேட்டால் அவர்கள் சொல்லும் பதில்தான் விமர்சனம்.

இது போலத்தான் நான் இனிச் சொல்லப் போகும் விடயமும். தன் காதலிக்கு ஒரு சின்னப் பையனிடம் கடிதம் கொடுத்து அனுப்புகிறான் காதலன். கடிதத்தைக் கொடுத்துவிட்டு வரும் பையன் கடிதத்தைக்கொடுத்து விட்டேன் என்று ஒரு வாக்கியத்தை மட்டும் சொல்லிவிட்டுத் தப்பித்துவிட முடியுமா?

அந்தக் காதலன் 108 கேள்விகள் கேட்பான். ஆனால் இவ்வளவு கேள்விகளுக்கும் இடம் அளிக்காமல் எதிராளிக்கு என்னென்ன கேள்விகள் தோன்றும் , எதிலெல்லாம் அவனுக்கு ஆர்வம் இருக்கும் என்பதை யூகித்து அத்தனை கேள்விகளுக்கான விடைகளையும் கோர்வையாகச் சொல்லி முடிப்பவனே சிறந்தவன்.

மாமியார் வீட்டிற்குப் போய்விட்டுத் திரும்பும் ஒரு மாப்பிள்ளை தன் மனைவியிடம் கிட்டத்தட்ட இப்படித்தான் பேச வேண்டும். அங்கே ஒரு செய்தியும் இல்லை. போனேன் பார்த்தேன் சாப்பிட்டேன் வந்தேன். சும்மா தொணத் தொணன்னு கேள்வி கேட்காதே! என்று சட்டுப்புட்டென்று முடிக்கப் பார்த்தால் அவன் மனைவியின் மனநிலையைப் புரிந்து கொள்ளாத அல்லது மதிக்கத் தெரியாத கணவன் என்று சுலபமாகச் சொல்லிவிடலாம்.

யாருக்கு எதில் ஆர்வம் என்பதை உணர்ந்து கொண்டு அதைப் பற்றி விரிவாக எந்த ஒரு செய்தியையும் தேவையில்லாத விடயம் என்று ஒதுக்கி விடாமல் சொல்பவர் எவரையும் எளிதில் ஈர்த்துவிடுகிறார்.

யாருக்கு இதில் அக்கறை என்று நினைக்கிற விடயங்களைத் தவிர மற்றவற்றைக் காதுகளை நன்கு பட்டை தீட்டிக் கொண்டும் கண்களில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டும் கேட்டுக் கொள்வதும் பார்த்துக் கொள்வதும் ரொம்பவே நல்லது. பல நேரங்களில் இந்த உத்தி பலமாகக் கைகொடுக்கும்!

- லேனா தமிழ்வாணன்

# ஈழத்தமிழர் விவகாரத்தில் தி.மு.கவின் பங்கு

## டெசோ முதல் டெசோ வரை!

மீண்டும் ஒருமுறை, ஈழத்தமிழர் விவகாரத்தில் தி.மு.கவின் பங்கானது, சர்ச்சைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் காங்கிரஸுடன் சேர்ந்து தி.மு.கவும் காரணமாக இருந்ததாக ஜெயலலிதாவுக்குப் பிந்தைய அ.தி.மு.க முதல் முறையாகக் குற்றம்சாட்டியிருக்கிறது.

அண்மையில் மறைந்துபோன தி.மு.க. தலைவர் கருணாநிதி மீதான விமர்சனங்களில், ஈழத்தமிழர் விவகாரமும் முக்கியமானது. இதில், கருணாநிதியின் நிலைப்பாடுகளைப் பற்றி கண்டபடி பேசுவோரின் எண்ணிக்கை கணிசமாக இருக்கிறது. அவர் மீதான இந்த உச்சகட்ட குற்றச்சாட்டுதான், ஈழத்தில் தி.மு.கவின் நிலைப்பாடாக இருந்ததா, இருக்கிறதா?

1980-களில் அவர் முன்னின்ற டெசோ இயக்கமும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பின்னர் 2012இல் அவர் மீளவும் அமைத்த டெசோ இயக்கமும் அவரின் ஈழப் பங்களிப்பைச் சொல்லும் காலக் கண்ணாடியாக இருக்கும்.

தி.மு.கவின் தலைமையகமாக இருந்தது, சென்னை, அண்ணா சாலையில் இருந்த 'அன்பகம்'. 1985ஆம் ஆண்டு மே 13 அன்று, தி.மு.க. தலைவர் கருணாநிதி, தி.க.பொதுச்செயலாளராக இருந்த கி.வீரமணி, காமராஜ், காங்கிரஸ் தலைவராக இருந்த பழ.நெடுமாறன் ஆகியோர் கூடி, 'டெசோ' எனும் "தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பை" **(Tamil Eelam Supporting Organization - TESO)** உருவாக்கினார்கள். அதில், 1. தமிழீழம்தான் தீர்வு என்பதை உலக நாடுகளுக்கும் உணர்த்துவது, 2. தமிழீழப் போராளிகளுக்கு உதவுதல், 3. இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உரிய உதவிகள் கிடைக்கச்செய்வது முதலியவை டெசோவின் குறிக்கோள்கள் என முடிவுசெய்து அறிவிக்கப்பட்டது.

டெசோ உருவாக்கப்பட்டதுமே "இலங்கைத் தமிழர் படுகொலையை உடனே நிறுத்தவேண்டும்" எனக் கோரி அனைத்து மாவட்டங்களிலும் பேரணி, போராட்டங்கள் நடத்தப்பட்டன. சின்னஞ்சிறு ஊர்களில்கூட அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் உருவப் பொம்மைகள் எரிக்கப்பட்டன.

1985 ஒக்டோபர் 3 ஆம் திகதி கோவையில், 4ஆம் திகதி திண்டுக்கல்லில், 5ஆம் திகதி தூத்துக்குடியில், 6ஆம் திகதி திருச்சியில், 7ஆம் திகதி சேலத்தில், 13ஆம் திகதி வேலூரில் என இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்ற பேரணிகள் நடத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து 1986 மே 4ஆம் திகதி மதுரையில் டெசோ மாநாடு நடத்தப்பட்டது. தமிழகமே கிளர்ந்து எழுந்து திரண்டதுபோல, இலட்சக்கணக்கானோர் பங்கேற்ற டெசோ மாநாடு இந்தியாவைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாய், மறைந்த ஆந்திர முன்னாள் முதலமைச்சர் ராமாராவ், கர்நாடக உள்துறை அமைச்சர் ராசையா, வடமாநிலத் தலைவர்களான எச்.என்.பகுகுணா, ஜஸ்வந்த் சிங், காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் அப்துல்ரஷித் காபூர், பஞ்சாப் அகாலிதளம் பொதுச்செயலாளர் பல்வந்த்சிங் ராமுவாலியா ஆகியோர் அந்த மாநாட்டில் பங்கேற்றனர்.



> இந்திராவின் மறைவுக்குப் பிறகு பிரதமர் நாற்காலியில் ராஜீவ் அமர்ந்தபின்னர், இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கை மாற்றப்பட்டது. இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவையில் 1983 ஓகஸ்ட் 16இல் பேசியவர், இந்திரா. நேர்மாறாக, "இலங்கையில் உண்மையான பிரச்சினை வன்முறை. அதை ஆரம்பித்தவர்கள் தமிழர்கள்" என்று அராப் டைம்ஸுக்கு 1-9-1985 அன்று அளித்த பேட்டியில் சொன்னார், ராஜீவ்.



இந்திராவின் மறைவுக்குப் பிறகு பிரதமர் நாற்காலியில் ராஜீவ் அமர்ந்த பின்னர், இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கை மாற்றப்பட்டது. இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவையில் 1983 ஓகஸ்ட் 16 இல் பேசியவர், இந்திரா. நேர்மாறாக, "இலங்கையில் உண்மையான பிரச்சினை வன்முறை. அதை ஆரம்பித்தவர்கள் தமிழர்கள்" என்று அராப்டைம்ஸுக்கு 1-9-1985 அன்று அளித்த பேட்டியில் சொன்னார், ராஜீவ்.

பிரதமரே முடிவெடுப்பது என்கிற இந்திரா காலத்து நிலை மாறி, ஜே.என். தீட்சித், ரொமேஷ் பண்டாரி போன்ற அதிகாரிகள் தீர்மானித்ததே, இந்திய அரசின் கொள்கை என்று ஆனது.

பூட்டான் தலைநகர் திம்புவில் ஜூலை 8 முதல் 13வரை நடந்த இலங்கை அரசு - ஈழப் போராளிகள் பேச்சுவார்த்தையில், இந்திய அரசின் முடிவை ஈழப் போராளி இயக்கத் தலைவர்கள் ஏற்கவில்லை. அதையடுத்து, இந்தியாவிலிருந்து பாலசிங்கம், சந்திரஹாசன், சத்தியேந்திரா ஆகிய போராளி இயக்கத் தலைவர்களை நாடு கடத்த 23-8-1985 அன்று ராஜீவ் அரசு உத்தரவிட்டது.

அந்த உத்தரவைத் திரும்பப் பெறக் கோரி டெசோ விடுத்த அழைப்பை ஏற்று, 25-8-1985 அன்று சென்னையில் 7 இலட்சம் பேர் பேரணியாகத் திரண்டனர். தொடர்ச்சியாக, 27, 28, 29 ஆம் திகதிகளில் மாவட்டத் தலைநகர்களில் பேரணிகள் நடத்தப்பட்டன. 30-ஆம் திகதி ரயில் மறியலும் நடத்தப்பட்டது. அதையடுத்து போராளித் தலைவர்களின் நாடுகடத்தல் உத்தரவு திரும்பப் பெறப்பட்டது. இந்தப் பலமும் ஒற்றுமையும் தமிழகத் தலைவர்களின் வழக்கமான கருத்து வேறுபாட்டால் குலைந்துபோனது. முதல் டெசோ இயக்கம் முடங்கிப்போனது.

டெசோவே இல்லாதபோது அது உண்டாக்கிய தாக்கமும் குறைந்துபோனது. மகிழ்ச்சியில் மிதந்த இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன, ராஜீவ் காந்தியுடன் உடன்பாடு செய்துகொண்டார். ஆனால், சிறிது காலத்தில், அமைதி காக்கச் சென்ற இந்தியப் படைக்கும் ஈழப் போராளிகளுக்கும் போர் மூண்டது. ஜெயவர்த்தனவை அடுத்து இலங்கை ஜனாதிபதியான பிரேமதாசவால், இந்தியப் படை திருப்பி அனுப்பப்பட்டது. அதை வரவேற்காமல் புறக்கணித்தார், அப்போதைய முதலமைச்சர் கருணாநிதி.

"இந்திய இராணுவத்தை மதிக்கத் தவறாதவர்கள், தி.மு.கவினர். இந்திய இராணுவத்துக்கு இழுக்கு வர அதைப் பார்த்துக்கொண்டு இருக்க மாட்டார்கள். ஆனால், இந்திய இராணுவம் இலங்கையில் என் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த 5 ஆயிரம் பேர் கொல்லப்படக் காரணமாக இருந்தது என்பதை எண்ணித்தான், அந்தப் படையை வரவேற்க நான் செல்லவில்லை" என முதலமைச்சராகக் கருணாநிதி கூறியது, சட்டப்பேரவை வரலாற்றில் பதிவானது.

13 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு, 1989 நவம்பரில் ஆட்சிக்கு வந்த கருணாநிதியின் ஆட்சி, 1991 ஜனவரியில் கலைக்கப்பட்டது. அதற்கு திருப்புமுனைச் சம்பவமாக அமைந்தது, 1990 ஜூனில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத் தலைவர் பத்மநாபா உட்பட 12 பேர் சுட்டுக்கொல்லப்பட்ட நிகழ்வு!

(நாளை தொடரும்)

ஜூனியர் விகடன்

# கருணாஸ் கைது

(சென்னை)

முதல்வரை அவதூறாக பேசிய வழக்கில் நேற்று காலை கைது செய்யப்பட்ட கருணாசுக்கு ஒக்டோபர் 5 ஆம் திகதி வரை நீதிமன்ற காவல் விதித்து எழும்பூர் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நடிகரும், சட்டமன்ற உறுப்பினருமான கருணாஸ் முக்குலத்தோர் புலிப்படை அமைப்பின் சார்பில் கடந்த 16ஆம் திகதி வள்ளுவர் கோட்டத்தில் நடந்த ஆர்ப்பாட்டம் ஒன்றில் பேசினார். அப்போது, முதல்வர் எடப்பாடி பழனிசாமி தன்னை கண்டு அஞ்சுவதாக தெரிவித்தார்.

மேலும்,பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு சவால் விடுத்த அவர், முடிந்தால் காக்கிச்சட்டையை கழற்றிவிட்டு நேருக்கு நேர் மோதிப் பார்க்குமாறு சவால் விடுத்தார். சாதி ரீதியாகவும் பல்வேறு சர்ச்சை கருத்துக்களை கருணாஸ் பேசிய காணொலி சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனையடுத்து, முதல்வர் மற்றும் பொலிஸ் அதிகாரியை அவதூறாக பேசியதாக கருணாஸ் மீது நுங்கம்பாக்கம் பொலிஸார், கொலை மிரட்டல், கொலை முயற்சி உள்ளிட்ட 8 பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இந்நிலையில் சாலி கிராமத்திலுள்ள வீட்டில் நேற்றுக் காலை கருணாஸ் கைது செய்யப்பட்டார். நுங்கம்பாக்கம் அழைத்துச் சென்ற அவரிடம் 3 மணி நேரம் விசாரணை நடத்தினர். இதனை அடுத்து. அவர் எழும்பூரில் உள்ள நீதிபதி கோபிநாத் இல்லத்தில் ஆஜர் படுத்தப்பட்டார். கருணாஸ் உடன் கைது செய்யப்பட்ட நெடுமாறன், கார்த்திக், செல்வநாயகம் ஆகியோரும் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கருணாஸ்மீதான கொலை முயற்சி வழக்கை இரத்து செய்த நீதிபதி கோபிநாத், அவரை ஒக்டோபர் 5ஆம் திகதி வரை நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிட்டார். (இ)

# நூல்களை வெளியிட நிதியுதவி



யாழ். பல்கலை. மொழி பெயர்ப்பு மாணவர்களால், காலாண்டுக்கு ஒருமுறை மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிடுவதற்கான நிதி உதவியினை சிவன் அறக் கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம் வழங்கியுள்ளாரர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினை சேர்ந்த மொழி பெயர்ப்பு பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் வருடாந்தம் சர்வதேச மொழிபெயர்ப்பு தினத்தினை முன்னிட்டு மொழி பெயர்ப்பு சார்பான நூல்களை வெளியிட்டு வருகின்றனர்.

அந்தவகையில் இவ்வாண்டு வருடாந்த மொழி பெயர்ப்பு (Translator) சஞ்சிகையினை வெளியீடு செய்வதற்கான நிதி அனுசரணையை குறித்த நிறுவனம் வழங்கியுள்ளது. மேலும் காலாண்டுக்கு ஒருமுறை குறித்த நூல் வெளியீட்டுக்கு நிதி அனுசரணை வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கமைய அதற்கான உத்தர வாதத்தையும் இயக்குநர் வழங்கியுள்ளார்.

கடந்த புதன்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் மொழிபெயர்ப்பு பிரிவு ஒருங்கிணைப்பாளர் கலாநிதி எஸ்.கே.கண்ணதாஸ் மற்றும் கனடாவைச் சேர்ந்த பகுதிநேர விரிவுரையாளர் மணிவேலுப்பிள்ளை மற்றும் மாணவர்களை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. (இ-9)




மதுசாரம், புகையிலை, போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு தெரு வீதி நாடகம் வடமராட்சி நல்லொழுக்க நிறுவன இணைப்பாளர் க. ஆ. குலநாதன் தலைமையில் கரவெட்டி கிழக்கு காட்டுப்புலம் கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் நெல்லியடி பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராமஉத்தியோகத்தர், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தினால் (VOGT) செயற்படுத்தப்படும் இச் செயற்றிட்டத்துக்கு RAHAMA நிதியனுசரணை வழங்கிறது. வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக மதுசாரம், புகையிலை, போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வுகளை வடமராட்சி பகுதியில் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.


# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 6 விதி எண் 6

முழுச் சுக்கிரன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கலைஞர்கள் என்று பெயரெடுப்பார்கள். கலை அறிவும் பொது அறிவும் நிரம்பியவர்கள். ஞான தீர்க்கமுண்டாகும். பார்க்க அழகாகவும், நிதானமாகவும் செயற்படுவார்கள். எதையும் சிந்தித்துச் செயற்படும் மனிதர்கள். தன்மனம் கூறும் கருத்தைத் தெளிவாக எடுத்துரைப்பார்கள். ஒளிவு மறைவு இருக்காது. மூளை மின்னல் வேகத்தில் செயற்படும். தர்மத்தின் படியே நடப்பார்கள்.

மக்களிடம் நன்மதிப்பைப் பெறுவார்கள். புத்தகப் பிரியர்கள். எங்கு சென்றாலும் புதுப்புது நண்பர்களை உருவாக்கிக் கொள்வார்கள். வாசனைத் திரவியங்கள், மலர்கள், இயற்கைக் காட்சிகளை அதிகமாக விரும்புவார்கள். முன்னேற்றத்தில் அக்கறையிருக்கும். முக அழகும், கலை அழகும் இருக்கும். கண்களும், கன்னமும் அழகாக இருக்கும். பிறரிடம் அனுசரித்துப் போவார்கள். நிதானமானவர்கள். எதையும் வருமுன் காப்பார்கள். அரசியல் அறிவு நிரம்பியவர்கள். சிறந்த ஆலோசகர்கள். இவர்கள் பெண்களால் காதலிக்கப்படுதைக் காட்டிலும் கவரப்படுவதே அதிகம். எல்லோரும் நலமாக வாழவேண்டும் என்று விரும்புவார்கள்.

தனது முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். இவர்கள், அனைத்து மனிதர்களும் தனிப்பட்ட முறையில் முன்னேறினால் நாடு முன்னேறும் என்னும் கருத்துடையவர்கள். அழகான கணவன்-மனைவி அமைவார்கள். வீடு, தோட்டம், வாகனம், போன்றவற்றைக் கவர்ச்சிப் பொருட்களால் அலங்கரிப்பார்கள். இவர்களை ஒரு போதும் ஏமாற்ற முடியாது. எதிரிகளுக்கு எமனாக இருப்பார்கள். சவால்விட்டுக் காரியம் சாதிப்பார்கள். நிரந்தர எதிரிகள் யாரும் இருக்கமாட்டார்கள். எதிரிகளையும் வசீகரத்தால் நண்பர்களாக்கிக் கொள்வார்கள். மண், பெண், பொன்பொருள் மீது ஆசையிருக்கும். இன்பங்களை அடைய ஆவலிருக்கும். புத்திசாலிகள். ஞாபக சக்தி அதிகமிருக்கும். சில நேரம் சந்தேகப் புத்தியுடன் நடந்து கொள்வார்கள். ஏக்கப் புத்தியுடையவர்கள். குரங்கு போன்ற மனமுடையவர்கள். விண்ணில் ஆய்வுகள் செய்வீர்கள். மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகளை அறிந்து கொள்ள முற்படுவார்கள். மண வாழ்க்கை நன்றாக அமையும். மாற்று இனத்தவர்களின் தயவால், உதவியால் வாழ்க்கையில் முன்னுக்கு வருவார்கள். ஆடம்பர அலங்காரப் பிரியர்கள். எதையும் அலட்டிக் கொள்ள மாட்டார்கள். ஆடம்பரச் செலவுகள் செய்யும் இவர்களுக்குப் பணம் தேவைக்கேற்ப வந்து கொண்டேயிருக்கும். மனைவியின் அதிர்ஷ்டத்தால் எல்லா பாக்கியத்தையும் பெற்று செல்வச் சீமானாக வளமாக வாழ்வார்கள். சுதந்திரப் பிரியர்கள். நல்ல பல அனுபவங்களைப் பெற்றிருப்பார்கள். குழந்தைகள் மீது பாசமாக இருப்பார்கள்.




இவர்கள் செல்வத்தைப் பாதுகாக்கக் கூடியவர்கள். எதையும் முன்னின்று சாதிக்கும் குணமுடையவர்கள். புத்தகம், இசை, நடனம், நாடகம், நாட்டியம் போன்றவற்றில் அதிக ஆர்வமிருக்கும். சுவையான உணவுகளை விரும்பி உண்பார்கள். அதிக நண்பர்களைப் பெற்றிருப்பார்கள். ஜனவசிய சக்தி படைத்தவர்கள். நல்ல பண்புடையவர்கள். வீணான பேச்சை விரும்பமாட்டார்கள். பொதுவாழ்வில் நாட்டமுடையவர்கள். எதையும் வருமுன் யூகித்து அறிவும் ஆற்றலுடையவர்கள். தான தர்மம் செய்வதில் விருப்பமுடையவர்கள். நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற கொள்கையுடையவர்கள்.

சினிமா, கதை, நாடகம், கவிதை, பத்திரிகை, இலக்கியம், சமயம், உபதேசம் போன்றவற்றில் மிகவும் ஆர்வமுடன் செயற்படுவார்கள். சுகபோக வாழ்க்கையை விரும்புவார்கள். புதுமையை ஆதரிப்பார்கள். புரட்சியாளர்கள் போலக் காட்சியளிப்பார்கள். தானாகப் பெரிய பதவிகள் வந்து போகும் சில நேரங்களில் பொறாமைக் குணம் தலைதூக்கும். மந்திரம், மனோவசியம், குண்டலினி போன்ற சக்திகள் கைகூடும். மனைவி, மக்களிடம் தனிப்பாசமிருக்கும். கலையின் காரண கர்த்தாக்கள். வாக்கு வன்மையுடையவர்கள். வசீகர சக்தியுடன் பேசும் குணமுடையவர்கள். பேச்சும், எழுத்தும் பொருள் சேர்ப்பதாய் அமையும். மனக் கட்டுப்பாட்டினால் வரும் சித்திகள் கைகூடும். ஆன்மீகப்பற்று இருக்கும். சாஸ்திரங்கள் மீது நம்பிக்கை வைத்திருப்பார்கள். மற்றவர்கள் போற்றும் குணமிருக்கும். உதட்டளவில் தாராளமாகப் பேசும் இவர்கள் பணத்தை தாராள மாகச் செலவு செய்யத் தயங்குவார்கள். அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள் 1,10,19,28,6,15,24,9,18,27

துரதிர்ஷ்ட திகதிகள் 3,12,21,30

அதிர்ஷ்ட நிறங்கள் வெளிர் நீலம், பச்சை

துரதிர்ஷ்ட நிறங்கள் கறுப்பு, சிவப்பு, இருண்ட நிறங்கள், ஆரஞ்சு, ரோஸ்

அதிர்ஷ்ட இரத்தினங்கள் மரகதம், பெரில், அக்கோமரின், டர்க்குவாஸ், ஜேட், டெரிடாட்

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

51



மாவீரன் ராஜேந்திர சோழன்

“ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் எல்லாத் திசை களிலும் படையெடுத்துச் சென்று வடக்கே ராஜேந்திர சோழனை வெற்றிகொண்டு அவனைத் திறை செலுத்த வைத்தான். அப்பால் வடக்கே ஆந்திரத் தெலுங்குச் சிற்றரசுகளை அடக்கி நெல்லூர் வரை தன் ஆதிக்கத்தைப் பரப்பினான். வடமேற்கே கன்னட போசளரை மைசூர் சமவெளிக்குள் கட்டுப்படுத்தி வைத்தான்”

## யாழ்ப்பாண இராச்சியமும் வன்னிச் சிற்றரசுகளும் (கி.பி. 1200-கி.பி. 1500)

இதே காலமளவில் பாண்டிய அரசில் வலிமைவாய்ந்த சில இளவரசர்கள் தோன்றினர். அவர்களுள் ஒருவன் 1251 இல் பதவி பெற்ற ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் என்பவனாவான்.

தென்னிந்திய வரலாற்றில் மிகவும் புகழ்வாய்ந்த மன்னனாகவும் படையெடுப்புக்களில் சிறந்த வெற்றிகளைப் பெற்ற ஒருவனாகவும் போற்றப்படுபவன் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன், அவனுடைய வெற்றிகளின் விளைவாக இரண்டாம் பாண்டியப் பேரரசு எழுச்சி பெற்றது.

இதுவே தமிழ்நாடு கண்ட கடைசிப் பேரரசு. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் எல்லாத் திசைகளிலும் படையெடுத்துச் சென்று வடக்கே ராஜேந்திரசோழனை வெற்றிகொண்டு அவனைத் திறை செலுத்த வைத்தான். அப்பால் வடக்கே ஆந்திரத் தெலுங்குச் சிற்றரசுகளை அடக்கி நெல்லூர் வரை தன் ஆதிக்கத்தைப் பரப்பினான்.

வடமேற்கே கன்னட போசளரை மைசூர் சமவெளிக்குள் கட்டுப்படுத்தி வைத்தான். தென் மேற்கில் கேரளத்து வீரரவி உதய மார்த்தாண்டவர்மனை வெற்றிகொண்டதோடு, அப்பால் இலங்கை அரசுகளிடமிருந்து முத்துக்களையும், யானைகளையும் திறையாகப் பெற்றான் என அறியமுடிகிறது.

இந்த இறுதி நிகழ்ச்சி இலங்கையின் வடபகுதி அரசின் வரலாற்றில் முக்கியமானதாகும். இந்த நிகழ்ச்சியின் விபரங்கள் தெளிவாகக் கிடைக்காவிடினும், நடந்தது என்னவென்பதைப் பாண்டியருடைய கல்வெட்டுகளிலிருந்து கிடைக்கும் சான்றுகளைக் கொண்டு விளங்கிக்கொள்ளலாம்.

இப் பாண்டிய கல்வெட்டுகளிலுள்ள விடயங்களை அறிவதற்கு சாவக மன்னன் சந்திரபானு என்பவன் பற்றி சூளவம்சத்தில் கூறப்பட்ட விடயங்கள் முக்கியமானவையாகும். ஏற்கனவே கூறப்பட்டதுபோல, கலிங்க மாகனின் ஆட்சி யாழ்ப்பாண இராச்சியத்தில் 1247க்கு சற்று முன்பதாக முடிவடைந்திருக்க வேண்டும்.

இதற்குப் பின்னர் தென் கிழக்காசியாவிலுள்ள இன்றைய இந்தோனேசியாவின் சாவக அரசிலிருந்து வந்த சந்திரபானு என்பவன், பாண்டிய நாட்டிலிருந்தும், சோழ நாட்டிலிருந்தும் தமிழ்க் கூலிப்படைகளைத் திரட்டிக் கொண்டு மாதோட்டத்தில் வந்திறங்கி, வடபகுதியிலிருந்த சிங்களப் படைகளையும் சேர்த்துக் கொண்டு, பராக்கிரமபாகு ஆட்சி செய்த தம்பதெனியா இராச்சியத்தைத் தாக்கியதாக சூளவம்சத்திலே கூறப்பட்டுள்ளது.

ஆனால் அப்படையெடுப்பில் சந்திரபானு வெற்றி முடியவில்லை என அறியமுடிகிறது. எனினும் பின்னர் சந்திரபானு வட இலங்கை இராச்சியத்திலே மாகனின் ஆதரவு பெற்று, யாழ்ப்பாண இராச்சிய மன்னனாகியிருக்கலாம் எனக் கொள்ளமுடிகிறது. இதனை உறுதிப்படுத்துவதாகவே மேற்கூறப்பட்ட பாண்டியக் கல்வெட்டு அமைகிறது.

இக் கல்வெட்டு பல விபரமான வர்ணனைகளைக் கொண்டு காணப்படுகின்றது. இதில் சந்திரபானு தொடர்பாக உள்ள முக்கியமான செய்தி,அவன் யாழ்ப்பாண இராச்சிய மன்னனாக இருந்தமைக்கான சான்றாகக் காணப்படுகின்றது.

அத்தோடு ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் இலங்கைமீது படையெடுத்தபோது இங்கு இரண்டு மன்னர் ஆட்சி செலுத்தினர் என்பதை இக் கல்வெட்டுகள் உறுதிப் படுத்துகின்றன.

முதலாவது தடவையாக, ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் இலங்கைக்குப் படையெடுத்தபோது, அங்கு ஆட்சி நடத்தியோரை வெற்றி கொண்டு தனக்குத் திறை செலுத்தும்படி செய்தான். இங்கு தோற்கடிக்கப்பட்டுப் பதவி நீக்கப்பட்ட மன்னர்கள் கைதிகளாக்கப்பட்டோ, கொல்லப்பட்டோ இருக்கவில்லை என்பது இங்கு கருத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

பதினொராம் நூற்றாண்டில் சோழர் அநுராதபுரத்துச் சிங்கள மன்னனைத் தோற்கடித்தபோது, அவனைக் கைதியாகத் தமிழ் நாட்டுக்குக் கொண்டுசென்றதுடன், இலங்கையில் ஆட்சி நடத்த ஒரு சோழ இளவரசனை சோழ இலங்கேஸ்வரன் என முடிசூட்டி அனுப்பி வைத்தார்கள்.

இதனால் தொடர்ச்சியாக இலங்கை அரசு ஒரு தனியரசு என்ற கோட்பாடு தொடர்ந்து பேணப்பட்டது. ஆனால், இரண்டாம் பாண்டியப் பேரரசு எழுச்சிபெற்ற காலத்தில், இவ்வாறு கைப்பற்றப்பட்ட அரசுகளில் நேரடி ஆட்சியை நடத்தும் முறை கைவிடப்பட்டு, கைப்பற்றப் பட்ட மன்னர்கள் பாண்டியனுடைய மேலாதிக்கத்தை ஏற்று அவனுக்குத் திறை செலுத்தும் சாமந்த அரசர்களாக இயங்க ஒப்புக் கொள்ளப்பட்டதையும் அவரவர் அரசுகளில் அவர்கள் தொடர்ந்து சுதந்திரமாக ஆட்சி நடத்த அனுமதிக்கப்பட்டதையும் காணக் கூடியதாக உள்ளது.

அத்துடன் திறை செலுத்தத் தவறியோர் கொல்லப்பட்டு, அவர்களுடைய வாரிசுகளுக்கு அரசுரிமை வழங்கப்பட்டது. சோழராட்சியின் போது இல்லாத இப் புதிய கோட்பாடு வட இலங்கையில் தனித் தமிழரசு உறுதிபெற உதவிய ஒரு முக்கிய காரணியாகும்.

இதனைப் பின்வருமாறு விளக்கலாம். ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் நடத்திய முதலாவது இலங்கைப் படையெடுப்பின்போது தம்பதெனியாவில் ஆண்ட சிங்கள மன்னனாகிய இரண்டாம் பராக்கிரமபாகுவும் வடபகுதியில் ஆண்ட சாவக மன்னனும் பாண்டியனுக்குத் திறை செலுத்தும் அரசர்களாகினர். இதனால் இலங்கையிலிருந்து இரண்டு அரசுகளையும் வேறுவேறான அரசுகளாகப் பாண்டியப் பேரரசு அங்கீகரித்தது.

இதுவே வடபகுதி அரசுக்கு கிடைத்த முதலாவது முக்கியமான அங்கீகாரமாகும். வட இலங்கை அரசை அங்கீகரிக்காது, தானே முழு இலங்கையின் உரிமையுள்ள மன்னன் என்று இரண்டாம் பராக்கிரமபாகு முன்வைத்த கோரிக்கைக்கு இது மாறாக அமைந்தது.

எனினும் சிங்கள அரசுக்கும் வடபுல அரசாகிய யாழ்ப்பாண அரசுக்கும் இடையிலான பகைமை நீங்கவில்லை.வடக்கிலிருந்த சாவக மன்னன் தொடர்ந்து சிங்கள அரசைத் தாக்கியிருக்கலாம். அல்லது பராக்கிரமபாகு சாவக மன்னனைத் தாக்கியிருக்கலாம். அதுமட்டுமல்லாது சாவகன் பாண்டியனுக்குத் திறை செலுத்தவும் தவறினான். இந்த நிலைமையினைப் பயன்படுத்திய பராக்கிரமபாகு, பாண்டியனிடம் தனது அமைச்சர் ஒருவரை அனுப்பி சாவகமன்னன் பற்றி முறையிட்டதாகத் தெரிகின்றது.

பாண்டியப் பேரரசன் சாவகனைத் தண்டித்து வட இலங்கை அரசைப் பெறுவதற்குத் தனக்கு உதவுவான் எனப் பராக்கிரமபாகு எண்ணியிருந்தால் அந்த எண்ணம் நிறைவேறவில்லை என்பதை அறிய முடிகிறது.

இம்முறை மதுரையில் பாண்டியப் பேரரசனாக விளங்கிய ஜடாவர்மன் வீரபாண்டியன் இலங்கைக்குப் படையெடுத்தான். பாண்டியனைப் பொறுத்தவரையில் இலங்கை அரசர் இருவரும் பாண்டியருக்குத் திறைசெலுத்த உடன்பட்ட சாமந்த அரசர்கள்.

ஆகவே இருவரும் பகைமையில் ஈடுபட்டுப் போரிடுவதை அவன் விரும்பவில்லை. இருவரும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் ஆயினர். அதுமட்டுமன்றி ஒருவனுடைய அரசை மற்றவனுக்கு வழங்கி அவனுடைய் வலுவைக் கூட்டவும் பாண்டியன் விரும்பியிருக்கமாட்டான். ஆகவே தனக்குத் திறைசெலுத்த மறுத்துப் பகைமை காட்டிய யாழ்ப்பாண மன்னனாகிய சாவகனை எதிர்த்துப் போராடிய பாண்டிய மன்னன் போர்க்களத்தில் சாவகனைக் கொன்றான்.

(தொடரும்)

# சிறுவர் துன்புறுத்தலுக்கு முற்றுப்புள்ளி ஒக்டோபர் முதலாம் திகதி பாதயாத்திரை

(கொழும்பு)

இலங்கைப் பாடசாலைகளில் உடல் ரீதியான தண்டனைகள் மற்றும் வன்முறைகளை ஒழிப்பதற்கான ஜனாதிபதி காரியாலயம், சிறுவர் துன்புறுத்தலுக்கு முற்றுப்புள்ளி மற்றும் இலங்கை மன்றம் இணைந்து ஏற்பாடு செய்யும் 2020 நோக்கி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் ஒக்டோபர் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினத்தன்று பாதயாத்திரையொன்று ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு -7 இலங்கை மன்ற நிறுவனத்திலிருந்து ஆரம்பிக்கும் நடைபவனி ஆர்ப்பாட்ட ஊர்வலம் அல்ல என சிறுவர் துன்புறுத்தலுக்கு முற்றுப்புள்ளி அமைப்பின் தலைவர் டாக்டர் துஷ் விக்கிரமநாயக்க தெரிவித்தார். செப்டெம்பர் முதலாம் திகதி இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு, மேல், தெற்கு என அனைத்து பகுதிகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலே, பறங்கியர் உள்ளிட்ட அனைத்து இனத்தினரும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

பாடசாலைகளில் எமது பிள்ளைகளை துன்புறுத்துவதை நிறுத்துங்கள் எனக் கோரி மனுவொன்றும், அமைப்பின் மூலம் முன்வைக்கப்பட்ட ஐந்து யோசனைகளும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இது குறித்த விடயங்கள் தொடர்பாக விளக்கமளித்த டாக்டர் துஷ் விக்கிரமநாயக்க, இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் விசேட அம்சங்கள்பல உண்டு. நாம் பெற்றோர்கள், ஆசிரியர்கள்,பிள்ளைகளை இணைத்து இத்திட்டம் பற்றி அறிவுறுத்துகின்றோம்.

அதேபோல் நிபுணர்கள் குழுவினருடன் இணைந்து செயற்படுகின்றோம். அதைத்தவிர ஐந்து அம்ச யோசனை மிக முக்கியமானது.

இலங்கை 1991ல் ஐக்கிய நாடுகளில் சிறுவர் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டு அந்த சட்ட திட்டங்களுக்கு உட்படுவதாக உறுதியளித்துள்ளது.

ஆனால், அன்று தொடக்கம் இன்று வரை பல பாராளுமன்ற தேர்தல்கள் இடம் பெற்றன. 4 ஜனாதிபதிகள், 9 பிரதமர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். ஆனால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் வழங்கிய உறுதிமொழியை அதாவது சிறுவர்களுக்கு உடல் ரீதியாக தண்டனை வழங்குவதை நிறுத்த எதுவும் செய்ய முடியாது போயுள்ளது. அதனால் கடந்த பெப்ரவரி மாதம் ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் தொடர்பான அமைப்பால் எமது நாட்டுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் விரைவாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்கள்.

அதனால், ஐந்து அம்ச யோசனை மிக விசேடமானது. சிறுவர் துன்புறுத்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடும் ஐந்து தரப்பினரை இணைத்து நாம் வழங்கும் யோசனைகளும் அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகளும் ஒரே நோக்கில் செயற்படுத்த ஐந்து அம்ச யோசனைகள் முன்வைக்கப்படவுள்ளன.

பாடசாலைகளில் உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்படுவதைத்தடுக்க சர்வதேச பாடசாலைகள் அனைத்தையும் கல்வி அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர நாம் எதிர்பார்க்கின்றோம். சிறுவர்களுக்கான சட்டம் நாட்டில் வெற்றிபெற வேண்டுமானால் அனைத்து சிறுவர்களுக்கும் அச்சட்டம் உரித்தானதாக இருக்க வேண்டும்.

சர்வதேச பாடசாலைகள் கல்வியமைச்சின் ஊடாக கட்டுப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் முதலீட்டாளர்களாக பதிவு செய்யப்பட்டிருப்பதால் கல்வி அமைச்சு அனுப்பும் சுற்று நிருபங்களை ஏற்றுக்கொள்வதில்லை என்ற கருத்து நிலவுகின்றது.

அதேபோல்பிள்ளைகளை பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள், பொலிஸ் நிலையங்களில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் பயிற்சியளித்து மனதை ஒருவழிப்படுத்தி ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் ஒழுங்கு முறையொன்றை நாம் அறிமுகம் செய்யவுள்ளோம்.

கீழ் மட்டத்தில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்து நாடு பூராகவுமுள்ள அனைத்து சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் அப்பால் சென்று பாடசாலையிலேயே சிறுவர் பாதுகாப்பு அதிகாரியொருவரை நியமிக்க எதிர்பார்க்கின்றோம். அதன் பிரகாரம் சிறுவர் துன்புறுத்தல் தொடர்பான திட்டமொன்றை பாடசாலை மட்டத்தில் தயாரிக்க ஒத்துழைப்பு வழங்க உள்ளோம்.

பல வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கையை விரைவில் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும். அதன் மூலம் அனைத்து சிறுவர்களுக்கும் தேசிய அளவில் பாதுகாப்புக் கிடைக்கும். சிறுவர் தொடர்பான எமது சட்டங்கள் பரஸ்பரம் விரோதமாகவுள்ளது.


குற்றவியல்சட்ட கோவையில் ஒரு பிரிவில் சிறுவர்களை அடிக்க முடியாது. மனதளவிலோ உடலளவிலோ பாதிப்படையச் செய்யக் கூடாது எனக் கூறப்பட்டுள்ளது.

இன்னொரு பிரிவில் 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை ஆசிரியர் நல்லெண்ணத்துடன் தண்டித்தால் பிரச்சினை இல்லை எனக் கூறப்படுகின்றது. அப்போது நாம் எவ்வாறு சிறுவர்களுக்கு நியாயத்தை நிலைநாட்டுவது.

தேசிய அளவில் உடல் ரீதியான துன்புறுத்தலை நிறுத்தியுள்ளோம் எனக் கூறுவது ஐக்கிய நாடுகள் சபை ஒப்பந்தத்தில் எவ்வித சந்தேகமுமின்றி சிறுவர் துன்புறுத்தலை நிறுத்துவோம் என்று கைச்சாத்திட்டுள்ளோம். எமது சட்டத்தில் பிரச்சினை இருக்கும் போது நாம் எவ்வாறு செயற்படுவது.

இறுதியாக நாம் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பாடசாலைக்கு அனுமதிக்கும் ஒவ்வொரு சிறுவருக்கும் துண்டுப் பிரசுரமொன்றை மும்மொழிகளிலும் வழங்கவுள்ளோம். அதில் இலங்கையில் உங்களை யாரும் அடிக்க, பேச முடியாது.

அவ்வாறு யாரேனும் செய்தால் முறைப்பாடு செய்ய வேண்டியவர்கள், செல்ல வேண்டிய இடம் அனைத்தையும் நாம் அதில் குறிப்பிட்டுள்ளோம். இதன் மூலம் உடல் ரீதியான துன்புறுத்தலின்றி கல்வியைப் பெற்றுக் கொள்வது உறுதி செய்யப்படும். ஆசிரியர்களுக்கும் உத்வேகத்தை அளிக்கும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (இ)



கரவெட்டி அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர்கள் நேற்று சிரமதானத்தில் ஈடுபட்டனர். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1512

Search for people, places and things

### வாசன்

நம்மள தினமும் ஊக்கப்படுத்திறது பஸ் கண்டக்டர்தான்



போ போ... முன்னாடி போ... நடுவில நிக்காதே.. முன்னாடி போ... போயிட்டே இரு...

### வாமன்

அலங்காரம்! அகங்காரம்! இரண்டும் இல்லாத பெண்கள் மனைவியாக கிடைப்பது



ஆண்களின் வரம்!

### வாசுகி

எல்லோரையும் நம்புங்க... துரோகம் பழகிடும்



யாரையும் கண்டுக்காதீங்க தன்னம்பிக்கை வந்திடும்

### ராசன்

நாகரிகமென்னும் மேற்கத்தேய மோகத்தால் நாம் இழந்தவைகளில் மிக முக்கியமானவை



திண்ணை வீடுகள்...

### ராமு

கல்யாணம் பண்ணினா பொறுப்பு வருமாம்...



இதை நான் ஸ்கூல் படிக்கும் போதே செஞ்சிருந்தா டாக்டராகவோ கலெக்டராகவோ ஆகியிருப்பேன்

### ராகவ்

நட்பை விலை கொடுத்து வாங்கமுடியாது....



தகுதியிருந்தால் தானாகவே கிடைக்கும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



யாழ்ப்பாணம்-நல்லூர் சீரடி சாய் நாதரின் தேர்த்திருவிழா நேற்றுக் காலை வெகு விமர்சையாக இடம் பெற்றது. (படங்கள்.ஐ.சிவசாந்தன்)



யாழ்.பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள சந்தியா சிங்கள அக்கடமியில் சிங்களம் கற்கும் தமிழ் மாணவர்களுக்கான வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இயக்குநரும் ஆசிரியருமான திருமதி ஆர்.என்.சந்தியாகுமாரி தலைமையில் நடைபெற்றது. யாழ்.சுண்டுக்குளி குருசெற் வீதியில் அமைந்துள்ள கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் என்.விந்தன் கனகரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக தீவக மறைக்கோட்ட குருமுதல்வரும் அல்லைப்பிட்டி-மண்டைதீவு பங்குத்தந்தையுமாகிய அருட்பணி, மனுவேற்பிள்ளை டேவிட் அடிகளார், யாழ்.பேராலய பங்குத்தந்தை அருட்பணி ஆர்.நேசராஜ் அடிகளார் மற்றும் அருட்பணி எட்மன் மைக்கல் அடிகளார் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வைத்திய கலாநிதி என்.என்.கமலராஜன் மற்றும் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய ஆசிரியர் என்.கீதபொன்கலன் ஆகியோரும் மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

# சீனாவின் கடன்பொறி ஆபத்தில் சிக்கும் 23 நாடுகள்

ஆசியா, ஐரோப்பா மற்றும் ஆபிரிக்க நாடுகளில் 8 ட்ரில்லியன் டொலரை கட்டுமானத் திட்டங்களுக்காக முதலீடு செய்யும் சீனாவின் ஒரு அணை மற்றும் ஒரு பாதைத் திட்டமானது மிகவும் உன்னிப்பாக கண்காணிக்கப்படுகிறது. குறிப்பாக இத்திட்டத்தின் ஊடாக சீனா தனது எத்தகைய நோக்கத்தை நிறைவேற்றுகிறது என்பதை அறியவே இவ்வாறான கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது.




சீனாவின் இத்திட்டம் தொடர்பாக வோஷிங்டனைத் தளமாகக் கொண்டியங்கும் 'பூகோள அபிவிருத்திக்கான மையம்' ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளது.

இந்த ஆய்வின் பிரகாரம், சீனாவின் ஒரு அணை ஒரு பாதைத் திட்டமானது சிறிய மற்றும் வறிய நாடுகள் மீது பரந்தளவில் கடன் சுமையை உண்டுபண்ணுவதால், இந்த நாடுகளில் நிலைத்தன்மை பிரச்சினைகள் காணப்படுவதாகவும், இதனால் இந்த நாடுகள் இறையாண்மைக் கடன் என்கின்ற ஆபத்திற்கு முகங்கொடுக்க வேண்டியிருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

சீனாவின் இத்திட்டமானது 68 நாடுகளில் பாதிப்பைச் செலுத்துவதுடன் இந்த நாடுகள் ஒவ்வொன்றினதும் பொதுக் கடன் மீதும் தாக்கம் செலுத்தும்.

சீனாவின் திட்டத்திற்குள் உள்வாங்கப்படும் 68 நாடுகளில் 23 நாடுகள் தற்போது எதிர்நோக்கும் கடன் சுமை ஆபத்து மற்றும் இவற்றின் இறையாண்மை கடன் ஆபத்து விகிதம் மற்றும் உலக வங்கியின் கடன் பேண்தகு நிலை போன்றவற்றை இந்த ஆய்வானது பயன்படுத்தியுள்ளது.

2016 முடிவில், சீனா தனது ஒரு அணை மற்றும் ஒரு பாதைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 23 நாடுகளில் குழாய் இணைப்புக்களை இரவலாக வழங்கியுள்ளதால் இந்த நாடுகள் மீதான கடன் சுமை அதிகரித்ததாக ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சீனாவின் இத்திட்டம் காரணமாக எட்டு நாடுகள் தமது கடனைத் திருப்பிச் செலுத்துவதில் பல்வேறு இடர்பாடுகளைச் சந்திப்பதாக 'பூகோள அபிவிருத்திக்கான மையத்தின்' ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த எட்டு நாடுகளில் பாகிஸ்தான், டிஜிபோட்டி, மாலைதீவு, லாவோஸ், மொங்கோலியா, மொன்ரனிக்ரோ, தஜிகிஸ்தான், கிர்கிஸ்தான் ஆகியவை உள்ளடங்குகின்றன.

சீன-பாகிஸ்தான் பொருளாதார நடைபாதைத் திட்டம், சீனாவின் ஒரு அணை மற்றும் ஒரு பாதைத் திட்டத்தின் மையப்புள்ளியாகச் செயற்படுவதுடன் சீனாவுடன் அதிக நிதி சார் தொடர்புகளை வைத்திருக்கின்ற நாடாகவும் பாகிஸ்தான் காணப்படுகிறது.

சீனாவால் கணிக்கப்பட்ட 62 பில்லியன் டொலரில் 80 சதவீத நிதியை பாகிஸ்தானுக்கு கடனாக வழங்கியுள்ளது.

இந்த ஆய்வின் பிரகாரம், சீனா தான் வழங்கிய கடன்களை மீளப்பெற்றுக் கொள்ளும் அணுகுமுறையானது கடந்த காலத்தில் பிரச்சினையை உண்டு பண்ணியமை உறுதிப்படுத்தப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, இலங்கை, சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனா தன் வசப்படுத்தியது.

உலகின் ஏனைய கடன் வழங்குநர்களைப் போலல்லாது சீனாவானது கடன் பெற்ற நாடுகள் கடன்களைச் செலுத்தும் போது சந்திக்கும் பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக சட்ட விதிகளுக்கு உட்பட்டிருக்கவில்லை.

கடன் பெற்ற நாடுகளுடன் நிதிசார் தொடர்புகளைப் பேணுவதற்கான சட்ட விதிகளைப் பின்பற்றும் கடன்வழங்கும் நாடுகளைக் கொண்ட Paris Club அமைப்பின் தற்காலிக பங்குதாரராக சீனா மட்டுமே உள்ளது.

உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் வழங்குநர்களுக்கான ஒழுக்க நெறிமுறைகள் மற்றும் நியமங்கள், சீனாவின் ஒரு அணை மற்றும் ஒரு பாதைத் திட்டத்திலும் பிரயோகிக்கப்பட வேண்டும்என 'பூகோள அபிவிருத்திக்கான மையம்' தெரிவித்துள்ளது.

இதற்காக இத்திட்டத்தில் உலக வங்கி மற்றும் ஏனைய பன்முக வங்கிகள் தமது பங்களிப்பை அதிகரிப்பதுடன் இத்திட்டங்கள் தொடர்பில் நியமங்களை உருவாக்குவது தொடர்பில் சீன அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டும் எனவும் 'பூகோள அபிவிருத்திக்கான மையம்' சுட்டிக் காட்டியுள்ளது.

அத்துடன் பாரிஸ் கழகத்தின் முதன்மையான கோட்பாடுகளை மேற்பார்வை செய்யக்கூடிய புதிய கடன் வழங்கு நாடுகளைக்கொண்ட குழுவொன்றை உருவாக்க வேண்டும் எனவும் இந்தக் குழுவானது சீனாவுடன் அர்த்தமுள்ள பங்களிப்பை உருவாக்க வேண்டும் எனவும் ஆய்வாளர் குழு விதந்துரைத்துள்ளது.

கடன் ஆபத்துக்களை குறைப்பதற்காக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு சீனாவானது தொழில்நுட்ப மற்றும் சட்ட ஆதரவுகளை வழங்க வேண்டும் எனவும் வோஷிங்டனைத் தளமாகக் கொண்டியங்கும் 'பூகோள அபி விருத்திக்கான மையம்' பரிந்துரைத்துள்ளது.

எடுத்துக்காட்டாக காடுகளைப் பாதுகாத்தல் போன்ற சூழல் பாதுகாப்பை நோக்காகக் கொண்ட திட்டங்களுக்கு கடன்களைப் பெறும் நாடுகளுக்கு ஆதரவாக கடன் இடமாற்று ஏற்பாடுகளை சீனா வழங்க வேண்டும் என இந்த மையம் பரிந்துரைத்துள்ளது.

ஆங்கிலத்தில்
**Nikita Kwatra**
வழிமூலம்
**livemint**
மொழியாக்கம்:
நித்தியபாரதி

## "அவளும் நானும்" நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியிடும் மாதவி உமாசுதன் மாவின் "அவளும் நானும்" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் இல.37 இல் உள்ள ஹம்சியா மஹாலில் (ராஜா கிறீம் ஹவுஸ்) வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் க.சிவகரன் தலைமையில் இடம் பெறும். இதில் அறிமுக உரையினை யாழ். மானிப்பாய் சத்யசாயி பாடசாலை அதிபர் கலா சுந்தரேசன் வழங்குவார். மதிப்பீட்டுரையினை யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் மற்றும் கருத்து ரையினை கணனி மென்பொருள் பொறியியலாளர் மு. மயூரனும் ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலா சிரியர் மாதவி உமா சுதசர்மா வழங்குவார். (இ)

## திருவிழா திருப்பலி

(யாழ்ப்பாணம்)


உரும்பிராய் புனித மிகேல் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள் இடம பெற்று வருகின்றன.

எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நற்கருணை வழிபாடும் மறுநாள் சனிக்கிழமை திருவிழா திருப்பலி காலை 6.30 மணிக்கு இடம் பெறும் என பங்குத் தந்தை அருட்பணி ம.பத்தி நாதன் அறிவித துள்ளார். (இ)



# சிறுவர் அரங்கம்

## வித்தியாசமான உதவி



ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தில் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்றபோது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது.

சட்டென்று சுதாரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு "யாராவது காப்பாற்றுங்கள்" என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட் டது.

தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. "பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே. அறிவில்லையா உமக்கு" என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாக பற்றிக் கொண்டு "நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விட மாட்டேன்" என்று எச்சரித்தான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான். "ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவிதானே கேட்டேன்?" என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே "தம்பி.. நான் உனக்கு உதவிதான் செய்தேன்" என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான்.

பெரியவர் விளக்கினார். "நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய்.

உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்" என்று சொல்லிவிட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்.

## விடுகதைகளும் விடைகளும்

✦ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு அது என்ன?

**விரல்கள்**

✦பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?

**கிளி**

✦நடைக்கு உதாரணம் சொல்வார்கள். ஆனால் குறுக்கே நடந்தால் சிலருக்கு பிடிக்காது. அது என்ன?

**பூனை**

✦காக்கைப் போலக் கறுப்பானது, கையால் தொட்டால் ஊதா நிறம். வாயால் மென்றால் நீல நிறம் அது என்ன?

**நாவல் பழம்**

✦தாடிக்காரன், மீசைக்காரன். கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன் அது என்ன?

**தேங்காய்**

✦சிவப்புப் பைக்குள் சில்லறை கொட்டிக் கிடக்குது அது என்ன?

**காய்ந்த மிளகாய்**

✦ஒற்றைக் காலில் ஒய்யாரமாய் ஆடுவான். ஓய்ந்து விட்டால் படுத்துவிடுவான் அவன் யார்?

**பம்பரம்**

✦அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?

**வாழைப்பூ**

✦தலை மட்டும் கொண்ட சிறகில்லாத பறவை தேசமெல்லாம் சுத்தும்?

**தபால் தலை**

✦உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறான். அவன் யார்?

**கடல் அலை**

✦எப்போதும் காதருகில் ரகசியம் பேசிக் கொண்டிருப்பவள்?

**செல்பேசி**

✦கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும்தான்.

**வெங்காயம்**

✦இரவெல்லாம் பூக்காடு, பகலெல்லாம் வெறுங்காடு அது என்ன?

**வானம்**

✦உச்சிக் குடுமிக்காரன், கொள்ளிவச்சா வெடிப்பான் அது என்ன?

**பட்டாசு**

✦பெட்டியைத் திறந்தால் கிருஷ்ணன் பிறப்பான் அது என்ன?

**கச்சான்**

✦கண்ணைக் குத்தி தின்றேன். பசியும் மாறிப்போச்சு. அது என்ன?

**நுங்கு**

## நட்பு



நல்லவர்களை
என்றும் நாடி
நட்புடன் நன்றாய்
பழகிக்கொள்
நண்பர்கள் உனக்கு
அவசியமே
நிகழும் எதிர்வரும்
காலங்களில்
நண்பர்கள் உனக்கு
உதவிடுவர்
அதுபோல் நீயும்
நண்பர்களுக்கு
என்றும் உதவிகள்
செய்திடுவாய்!
உள்ளன்போடு
பழகிடுவாய்!



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் 2018.09 24

❖1799-கட்டபொம்மனும் இன்னும் 6 பேரும் புதுக்கோட்டை அரசன் விஜயரகுநாத தொண்டைமானால் கைது செய்யப்பட்டுப் பின்னர் செப் 29 இல் ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

❖1840-இலங்கை வங்கி தொடங்கப்பட்டது.

❖1898-யாழ்ப்பாணம், இணுவிலில் பெண்களுக்கான மக்லியொட் வைத்தியசாலையை அமெரிக்க மிசன் அமைத்தது.

❖1932-மாநில சட்டமன்றங்களில் தலித்துகளுக்கு சிறப்பு இட ஒதுக்கீட்டுக்கு வழிவகுக்கும் பூனா ஒப்பந்தத்திற்கு மகாத்மா காந்தி, அம்பேத்கர் ஆகியோர் ஒப்புதல் அளித்தனர்.

❖2014-மங்கல்யான் விண்கலம் இந்திய விண்வெளி ஆய்வு மையத்தினால் வெற்றிகரமாக செவ்வாய் சுற்றுவட்டத்தில் செலுத்தப்பட்டது.

**பிறப்புகள்**

❖1564-வில்லியம் ஆடம்சு, ஆங்கிலேய மாலுமி, நாடுகாண் பயணி (இ. 1620)

❖1777-இரண்டாம் சரபோஜி, தஞ்சாவூர் மராத்திய இராச்சியத்தின் அரசர் (இ. 1832)

❖1929-ஏ.வி.பி.ஆசைத்தம்பி, தமிழக அரசியல் வாதி, எழுத்தாளர், இதழாளர் (இ. 1979)

❖1930-யோன் யங், அமெரிக்க விண்வெளி வீரர் (இ. 2018)

❖1936-சிவந்தி ஆதித்தன், இந்தியத் தொழிலதிபர் (இ. 2013)

❖1937-பாரதி மணி, தமிழக எழுத்தாளர், நடிகர்

❖1941-தெ.ஞானசுந்தரம், தமிழ்ப் பேராசிரியர், நூலாசிரியர்

❖1950-மொகிந்தர் அமர்நாத், இந்தியத் துடுப்பாளர்

❖1989-பியா உர்ட்சுபாக், பிலிப்பீனிய அழகி

**இறப்புகள்**

❖1964-பம்மல் சம்பந்த முதலியார், தமிழ் நாடகாசிரியர், வழக்கறிஞர், மேடை நடிகர், எழுத்தாளர், நாடக இயக்குநர் (பி. 1873)

❖2004-இராஜா இராமண்ணா, இந்திய அணு அறிவியலறிஞர் (பி. 1925)

❖2006-பத்மினி, தென்னிந்திய நடிகை (பி. 1932)

❖2007-முருகேசு சுவாமிகள், இலங்கை இந்து ஆன்மீகவாதி (பி. 1933)

❖2009-நாத்திகம் இராமசாமி, இதழாசிரியர், பகுத்தறிவாளர் (பி. 1932)

❖2012-திலகன், மலையாளத்திரைப்பட நடிகர் (பி. 1938)

**சிறப்பு நாள்**

❖மரபு நாள் (தென்னாபிரிக்கா)

❖விடுதலை நாள் (கினி-பிசாவு, போர்த்துக்கலிடம் இருந்து 1973)

❖குடியரசு நாள் (டிரினிடாட் மற்றும் டொபாகோ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 70 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 100 | 60 | 80 |
| தக்காளி | 40 | 40 | 30 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 140 | 90 | 120 | 60 | 80 |
| கரட் | 200 | 140 | 160-200 | 140 | 240 |
| பூசணி | 50 | 50 | 40 | 40 | 60 |
| புடோல் | 80 | 60 | 60 | 30 | 80 |
| வாழைக்காய் | 100 | 90 | 80 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 100 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 110 | 100 | 95 | 120 |
| பாகற்காய் | 150 | 160 | 120 | 100 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 40 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 60 | 80 |
| லீக்ஸ் | 160 | 90 | 100 | 75 | 100 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 60 | 60 |
| கறிமிளகாய் | 120 | 100 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 180 | 100 | 30 | 80 |
| போஞ்சி | 140 | 140 | 140 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | — | 60 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 120 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 40 | 50 | 200 |
| இராசவள்ளி | 140 | 140 | 160 | 110 | 140 |
| வெங்காயப்பூ | 120 | 120 | 140 | 100 | 60 |
| முள்ளங்கி | 40 | 50 | 50 | 30 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 80 | 50 | 120 | 80 |

வாழ்க்கையில்வல்லவர்சிலரையும்காணலாம். ஆனால் நல்லவராயும் வல்லவராயும் உள்ளவர்கள் மிகச் சிலரையே இந்த உலகில் காண முடியும். – கோல்ட்டன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

## தியாகி திலீபனின் நினைவிலும் அரசியல் கபடத்தனம் புகுந்ததா?

தியாகி திலீபனின் நினைவு தினத்தை அனுஷ்டிப்பது தொடர்பில் தடை உத்தரவைப் பெற்றுக் கொள்ள பொலிஸார் முயற்சிப்பதான தகவல்கள் மிகப்பெரிய மனவருத்தத்தை தருகிறது.

தமிழ் மக்கள் என்பதற்காக இப்படி நடக்கிறது என்ற நினைப்புடனேயே பொலிஸாரின் மேற்போந்த நடவடிக்கை மக்களால் பார்க்கப்படுகிறது.

அதேநேரம் தமிழ்த் தரப்பினர் சிலரின் நாடகம்தான் இதுவோ என்று எண்ணுவதிலும் தவறிருப்பதாகத் தெரியவில்லை.

அதாவது தமிழ்த் தரப்புகளின் வருங்கால தேர்தல் பிரசாரம் என்பது மாவீரர் தினத்தை அனுஷ்டித்தோம்; முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னின்று செய்தோம்; தியாகி திலீபனின் நினைவு தினத்தை ஏற்பாடு செய்தோம்; அதற்காக நீதிமன்று ஏறி வாதிட்டோம்; எங்கள் வாதத்தால் தியாகி திலீபனின் நினைவை அனுஷ்டிக்க முடிந்தது என்றெல்லாம் கூறுவதற்கான ஒரு நாடகம் அரங்கேற்றப்படுகிறதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஏனெனில் நல்லாட்சி அரசு பொறுப்பேற்ற பின்னர் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பது தொடர்பிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்துவதிலும் படைத்தரப்பின் தலையீடுகள் மற்றும் குறுக்கீடுகள் மிகக் குறைவு என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

முன்பெல்லாம் மாவீரர் தினம் என்றதும் தமிழர் தாயகம் எங்கும் படையினர் குவிக்கப்படுவர்.

அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாகப் படையினரும் கவச வாகனங்களும் தயாராக நிற்கும்.

ஆனால் அந்த நிலைமை இப்போது இல்லாமல் போய் மாவீரர் தினம் சுமுகமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், அகிம்சை வழியில் உண்ணாவிரதமிருந்து தன்னுயிர் நீத்த ஒரு தியாகியை நினைவுகூருவதைத் தடை செய்ய வேண்டும் எனப் பொலிஸார் நினைத்ததற்குள் வலுவான காரணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாகம் தியாகி திலீபனின் நினைவு தினத்தை அனுஷ்டிப்பதைத் தடுப்பதுதான் பொலிஸாரின் நோக்கம் என்றால், அதற்காக நீதிமன்றத்தை நாட வேண்டிய தேவை பொலிஸாருக்கு இருந்திருக்காது.

ஆக, நான் அடிக்கிறதுபோல அடிக்கிறன். நீ அழுகிறதுபோல அழு என்ற நாடகம் தியாகி திலீபனின் புனிதமான நினைவேந்தலிலும் புகுந்து விளையாடுகிறதோ என்று எண்ணும்போது ஆ கடவுளே! அரசியல் கபடத்தனம் இப்படியெல்லாம் திட்டமிட்டுச் செயற்படுமா என்று எமக்குள் கேள்வி எழும்.

இந்தக் கேள்வியின் விளைவு ஏன்தான் எங்களைப் படைத்தாய் என்று இறைவனை நொந்து கொள்வதாகவே இருக்கும்.

எதுஎவ்வாறாயினும் நிலைமையை பொறுமையோடு அவதானிப்பதுதான் இப்போதைக்கு தர்மமாகும்.

# மைத்திரி, கோத்தா கொலைச்சதி

## பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடமிருந்து இரண்டு இயந்திரத் துப்பாக்கிகள் மீட்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டப்பட்டமை குறித்து விசாரிக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இரண்டு இலகு இயந்திரத் துப்பாக்கிகள் (எல்எம்ஜி) கைப்பற்றப்பட்டுள்ளன.

பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இந்த இரண்டு இலகு இயந்திரத் துப்பாக்கிகளும், கொலைச் சதிக்குப் பயன்படுத்த திட்டமிடப்பட்டிருந்ததா? என்ற கோணத்தில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பணிக்கு இலகு இயந்திரத் துப்பாக்கிகள் தேவையில்லை என்ற போதும், இவை அந்தப் பிரிவின் பொறுப்பில் இருந்தமை குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இந்த இலகு இயந்திரத் துப்பாக்கிகள் பம்பலப்பிட்டியிலுள்ள பொலிஸ் துறையின் மத்திய ஆயுத களத் தலைமையகத்தினால், பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் ஆணையின்படியே பயங்கரவாத தடுப்புப் பிரிவுககு வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிய வருகிறது. (இ-7)

## தந்தையை கத்தியால் குத்திக்கொன்ற மகன்

### பொலநறுவையில் சம்பவம்

(பொலநறுவை)

பொலநறுவை பழுகஸ்தமன பகுதியில் தந்தையை மகன் கத்தியால் குத்திக் கொலை செய்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

குடும்பப் பிரச்சினை காரணமாக இந்த கத்திக் குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

கத்திக்குத்து தாக்குதலுக்கிலக்கான பொலநறுவை பழுகஸ்தமன பகுதியைச் சேர்ந்த ஹீன்பண்டா (வயது -69) என்பவர் கடும் காயங்களுக்குள்ளான நிலையில் பொலநறுவை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (இ-7)

## கொடிகாமத்தில் வாள்வெட்டு இளைஞன் படுகாயம்!

(சாவகச்சேரி)

கொடிகாமம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் கையில் பலத்த காயத்துடன் காலில் சிறு வெட்டுக் காயத்துடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கச்சாய் வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த 21 வயதான அஜந்தன் என்ற இளைஞனே இவ்வாறு வெட்டுக் காயத்திற்கு இலக்காகி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த சனிக்கிழமை குறித்த பகுதியில் பெண் ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்காகி வயிற்றில் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. மேலதிக் விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-30)

## உலகப் பொருளாதார நெருக்கடிக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கத் தயார்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்தமையால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகது வெற்றிகரமான முறையில் முகங்கொடுக்க இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாத்தாண்டிய லூர்து மகா வித்தியாலயத்தில் வள மத்திய நிலையத்தை நேற்று முன்தினம்ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பிரதமர் இது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் சவால்களுக்கு முகங்கொடுத்து முன்னோக்கிச் சென்றதை போன்று டொலரின் பெறுமதி அதிகரித்தமையால் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு வெற்றிகரமான முறையில் முகங்கொடுக்க இருப்பதாக தெரிவித்துள்ளார்.

கல்வி, சுகாதாரம் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட மாட்டாது. டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளமை இலங்கைக்கு மாத்திரம் ஏற்பட்டுள்ள பிரச்சினை அல்ல. இத்தாலி நாணயம், ஸ்ரேலிங் பவுண, அவுஸ்திரேலிய டொலர், இந்தோனேசிய ரூபா, கொரிய நாணயம், பிலிப்பைன்ஸ் நாணயம், சிங்கப்பூர் டொலர், மலேசிய றிங்கிட் என்பனவற்றின் பெறுமதியும் குறைவடைந்துள்ளது. உலக பொருளாதார நெருக்கடிக்கு வெற்றிகரமாக முகங் கொடுப்பதாகவும் அதிலிருந்து தப்பியோட முனையவில்லை என்றும் தெரிவித்தார். (இ)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை



### பொருளும் நிகழ்ச்சியும்

நீங்கள் எழுதுவதற்காகப் பேனாவைக் கையில் வைத்திருக்கின்றீர்கள். அதையே நம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம். பேனாவைப் பார்த்து இது பொருளா அல்லது நிகழ்ச்சியா என்ற வினா எழுப்புங்கள். கையினால் தொட்டு உணர முடிவதாலும் கண்ணால் பார்த்து உணர முடிவதாலும் பேனா ஒரு பொருள்தான் என்று கருத நேரும்.

மேலே செல்வோம். அந்தப் பேனாவை எரியும் நெருப்பிலிட்டால் என்ன ஆகும். எரிந்து சாம்பலாகிப் போகும். பேனா என்ற வடிவம் இப்போது அதற்கு இல்லை. பேனா எங்கே? அழிந்து விட்டது. இவ்வாறு அழிவது பொருளாகுமா? பேனா என்னவாயிற்று? ஆராய்வோம். நெருப்பிலிட்டவுடன் அதில் இணைந்திருந்த பலதரப்பட்ட அணுக்கள் வெப்பத்தால் கிளர்ச்சியூட்டப் பெற்று இயக்க விரைவு பெற்று ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து போயிற்று. அதனால் அணுக்கள் கூட்டால் அமைந்த பேனா என்ற வடிவம் மறைந்து போயிற்று. எது பேனாவாகக் காட்சியளித்தது? அணுக்கள். பேனா பொருளன்று. அணுக்கள் கூடிய ஒரு நிதழ்ச்சி தான் என்பது விளங்கக் கண்டோம். பேனா மட்டுமென்ன? நாம் காணும் இப்பேரியக்க மண்டல நிகழ்ச்சிகள். தோற்றங்கள் அத்தனையும் அணுக்களின் கூட்டு இயக்கம் தானே? ஒரு கூட்டுத் தோற்றமாக நாம் காணும் எப்பொருளிலும் ஒவ்வொரு அணுவும் தனித்தனியாகத் தான் இயங்கிக்கொண்டிருக்கிறன. அவற்றின் இடையில் உள்ள இடைவெளியைக் காணும் திறமை புலனறிவுக்கு இல்லை.

அதனால் ஒரே கொத்தாக ஒரு தோற்றம் காட்சியாகினறது. இவ்வாறு இந்த அடிப்படையில் ஆராய்ந்தால் பிரபஞ்சத் தோற்றங்கள் அத்தனையும் நிகழ்ச்சிகளே என்ற முடிவுக்கு வருகிறோம். அடுத்து ஒரு வினா. எல்லாத் தோற்றங்கட்கும் அடிப்படைத் துகளான அப்பரமாணு பொருளா? நிகழ்ச்சியா? இதனையும் ஆராய்வோம். அப்பரமாணுவின் இயக்கத்தைக் கழித்து யார் அல்லது எது இயங்குகின்றது என்று உணர்ந்து கொள்ளலாமல்லவா? அதுதானே பொருளாக இருக்க முடியும்? பரமாணுவின் இயக்கத்தைக் கழித்துப் பார்த்தால் என்ன மிஞ்சும்? ஒன்றுமேயில்லை. வெட்டவெளிதான் மீதி. அகன்று நின்று பூரணமாக இருக்கும் வெட்டவெளி என்ற பொருள் தான் நுண்ணிய இயக்கத்தில். கண்ட நிலையில் பரமாணுவாக இருக்கின்றது. இப்போது பொருள்நிலை விளங்குகிறதல்லவா? வெட்ட வெளி என்ற ஒரு நிலையே பொருள் நிலையாகும். அதன் இயக்க நிகழ்ச்சியே பரமாணுவாகும். மற்ற தோற்றங்கள் யாவும் பரமாணுவாகும். மற்ற தோற்றங்கள் யாவும் பரமாணுக்களின் கூட்டு அல்லது தொடர் நிகழ்ச்சியாகும்.

## பாதுகாப்பு வழங்கும் அளவுக்கு கோத்தபாய ராஜபக்ஷ தகுதியானவரல்லர்

### சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு வழங்கும் அளவிற்கு முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தகுதி வாய்ந்தவர் இல்லை என அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் களனி பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ தற்போது அரசாங்க உத்தியோகத்தர் இல்லை எனவும் அவர் தற்போது எந்த ஒரு சேவையையும் செய்யவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது பாதுகாப்பிற்காக 17 பாதுகாப்பு உத்தியோகத்தர்களே வழங்கப்பட்டுள்ளதாகவும் இருப்பினும் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு இது வரையில் 25 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (இ-7)

## இருபாலை கிரிக்கெட் சமர் இறுதியாட்டம்; கொலின்ஸ்-கார்மேன் போய்ஸ் அணி மோதல்

இருபாலை விளை யாட்டுக் கழகம் 8 வீரர் பங்கு பற்றும் 6 பந்துப் பரிமாற்ற போட்டியினை நடத்தியது. இறுதியில் மோத கொலின்ஸ்- கார்மேன்போயிஸ் அணிகள் தகுதி பெற்றுள் ளன.

நெல்லியடி கொலின்ஸ் முதல் போட்டியில் அள வெட்டி ஞானவைரவர் விளை யாட்டுக் கழகத்தினையும் இரண்டாவது போட்டியில் சுப்பர் விளையாட்டு கழகத் தினையும் கால் இறுதி போட் டியில் ஐயன்னா விளை யாட்டு கழகத்தினையும் வெற்றி கொண்டு அரை இறுதியில் பலம் பொருந்திய சங்கானை உதயதாரகை விளையாட்டு கழகத்தினை துடுப்பாட்டத்தில் சோபிக்காத போதும் சிறந்த பந்துவீச்சு, அபார களத்தடுப்பினால் ஒரு ஓட்டத்தினால் திரில் வெற்றி பெற்றும் இறுதி க்கு தகுதி பெற்றது கொலின்ஸ்.

கார்மேன் போயிஸ்விளை யாட்டுக் கழகம் முதல் போட் டியில் இளம்கதிர் விளை யாட்டு கழகத்தினையும் இரண்டாவது போட்டியில் வதிரி சிறிமுருகன் விளை யாட்டுக் கழகத்தினையும் கால் இறுதியில் அரியாலை சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தினையும் அரை இறுதியில் ஜிபிஎஸ் விளை யாட்டுக் கழகத்தினை ரகிம் அயனின் அதிரடி ஆட்டம் மூலமும் வெற்றி கொண்டு இறுதிக்கு தகுதி பெற்றது கார் மேன் போயஸ் அணி. (க)

# FA கிண்ண உதைபந்தாட்டம்

## ஜெட்லைன்ஸ் அணியை வென்றது கொற்றாவத்தை றேஞ்சல் அணி



FA கிண்ண 32 அணி கள் பங்குபற்றும் உதைபந் தாட்ட சுற்றுப் போட்டியின் ஆட்டம் ஒன்றில் கொற்றா வத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து கம்பஹா ஜெட்லை ன்ஸ் அணி மோதிய ஆட் டம் அநுராதபுரம் பொது விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. ஆரம்பம் முதல் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தியது. கோல் பெறும் வாய்ப்புக்கள் இரு அணிகளாலும் தவற விடப் பட்டது ஆட்டத்தின் 23 வது நிமிடத்தில் றேஞ்சஸ் அணி யின் பின்கள வீரனின் தவறினால் ஜெட்லைன்ஸ் அணிக்கு தண்ட உதை வழங்கப்பட்டது. இதனை சரியாகப் பயன்படுத்தி ஜெட் லைன்ஸ் அணி கோலை போட்டு 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகி க்க முதல் பாதியாட்டம் முடி வுக்கு வந்தது. இரண்டாம் பாதியாட்டத்தின் ஆரம்பத் தில் றேஞ்சஸ் அணி வீரர் கள் தொடர்ச்சியாக எதிரணி யின் கோல்பரப்பை ஆக்கி ரமித்த வண்ணம் இருந்த னர். இதன் பயனாக 53 ஆவது நிமிடத்தில் ஜெட்லை ன்ஸ் அணியின் பின்கள வீரரின் முறையற்ற ஆட்டத் தினால் றேஞ்சஸ் அணிக்கு தண்ட உதை வழங் கப்பட்டது .

இதனை சரியாக பயன் படுத்திய ஆர்த்திகன் கோலை போட 1:1 என சம நிலையானது ஆட்டம். பின் னர் மீண்டும் றேஞ்சஸ் அணி வீரர்கள் எதிரணி யின் கோல் பரப்பை ஆக்கி ரமித்த வண்ணம் இருந்த னர். இதன் பயனாக மூலை உதையின் மூலம் கௌத மனால் ,அடிக்கப்பட்ட பந் தினை சிறப்பான முறை யில் கைலாஸ் கோலாக மாற்ற 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது றேஞ்சஸ் அணி. ஆட்டம் முடிய 5 நிமிட ங்கள் இருக்கையில் றேஞ் சஸ் அணியின் பின்கள வீரரின் தவறினால் மீண் டும் ஜெட்லைன்ஸ் அணி க்கு தண்ட உதை வழங்கப் பட்டது. இதனை நேர்த்தி யான முறையில் கோலாக மாற்ற 2:2 என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது ஆட்டம்.

வெற்றியை தீர்மா னிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதை யில் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று "FA கிண்ண ROUND 16" இற்குள் நுழைந்தது றேஞ்சஸ் அணி. (க)

## கிளி. இரணைமாதா நகர் சென்.மேரிஸ் அடுத்த சுற்றில்



அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் "வடக் கின் கில்லாடி யார்" என் னும் தொனிப்பொருளில் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கால் பந்தாட்டச் சுற்றுப் போட்டி யொன்றை நடத்தி வரு கின்றது.

தொடர்ந்து 3 ஆவது ஆண்டாக நடைபெறும் இந் தச் சுற்றுப்போட்டியின், முத ற்சுற்றில் எஞ்சியிருக்கும் ஆட்டங்களிலொன்று கடந்த 20 ஆம் திகதி வியாழக்கி ழமை நடைபெற்றது.

இதில்நாவற்குழி அன்னை அணியை எதிர்த்து கிளி நொச்சி இரணைமாதாநகர் சென்.மேரிஸ் அணி மோதியது.

போட்டி நேரத்தில் இர ண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் அடிக்க வில்லை. தொடர்ந்து வெற் றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது.

அதில். சென்.மேரிஸ் அணி 04:03 என்ற கோல் கள் கணக்கில் வெற்றி பெற் றது. இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக சென். மேரிஸ் அணியின் டெனி சியஸ் தெரிவு செய்யப் பட்டார். (க-26)

## கிளி. உருத்திரபுரம் அணி அடுத்த சுற்றுக்குத் தகுதி




அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் "வட க்கின் கில்லாடி யார்" என் னும் தொனிப்பொருளில் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கால் பந்தாட்டச் சுற்றுப்போட்டி யொன்றை நடத்தி வரு கின்றது.

தொடர்ந்து 3 ஆவது ஆண்டாக நடைபெறும் இந் தச் சுற்றுப்போட்டியின். முதற்சுற்றில் எஞ்சியிருக் கும் ஆட்டங்களிலொன்று கடந்த 20 ஆம் திகதி வியா ழக்கிழமை நடைபெற்றது. இதில் கிளிநொச்சி உருத் திரபுரம் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனி யன் அணி மோதியது.

இதில் உருத்திரபுரம் அணி. 01:00 என்ற கோல் கள் கணக்கில் வெற்றி பெற் றது.

ஆட்டநாயகனாக உருத் திரபுரம் அணியின் கயந் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

## வெற்றிவாகை சூடியது வட்டக்கச்சி இளந்தளிர்



வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழ்கமும். சனசமூக நிலையமும்இணை ந்து மறைந்த நட்சத்திர வீரர்கள் ஞாபகார்த்தமாக நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வட்டக் கச்சி இளந்தளிர் விளையா ட்டுக்கழகம் வெற்றிக்கிண் ணத்தை கைப்பற்றியது.

பதினான்கு அணிகள் பங்குபற்றிய இப்போட்டித் தொடரின் இறுதிப்போட்டி யில் உருத்திரபுரம் விளை யாட்டுக்கழகத்தை வீழ்த்தி வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழகம் வெற் றியீட்டியது. வட்டக்கச்சி மத்திய கல்லூரி மைதானத் தில் நான்கு நாட்கள் நடை பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறி தரன் முதன்மை விருந்தின ராக கலந்து கொண்டிருந்த அதே வேளை மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், விளையா ட்டு உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (க)

### கைதடி தென்கிழக்கு விநாயகர் ச.ச.நிலையத்தின் தாச்சிப்போட்டி

## கைதடி கலைநகர் துர்க்கா எதிர் நாவற்குழி சரஸ்வதி அணி மோதல்





கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலை யத்தின் 71வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையமும் விநா யகர் விளையாட்டுக் கழக மும் இணைந்து யாழ். மாவ ட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் விநாய கர் விளையாட்டுக் கழக மைதானத்தில் தென்மரா ட்சி ரீதியில் நடைபெற்று வரும் மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி தொடரின் இறுதிப் போட்டி இன்று இரவு 8 மணி க்கு விநாயகர் விளையாட் டுக்கழக மைதானத்தில் நடை பெறவுள்ளது. இவ் இறுதிப் போட்டியில் கைதடி கலைந கர்துர்க்கா C விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி A விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

## அரசியல் ரொட்டித்துண்டு...

எதிர்வரும் மாதம் 25ஆம் திகதியுடன் வடமாகாண சபையின் ஆயுட்காலம் நிறைவுக்கு வரவுள்ள நிலையில் அடுத்தகட்ட செயற்பாடுகள் குறித்து முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய கருத்துரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முதலமைச்சர் பதவி முடிவுக்கு வந்ததும் தமிழ் மக்கள் பேரவையின் நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்துவேன். கட்சிகளிலும் பார்க்க மக்களை ஒன்றிணைத்து எமது மக்களின் தேவைகளை உலகிற்கு எடுத்துக் கூற என்னால் முடிந்தவற்றை செய்வேன் என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தற்போதைய தலைமைகள் போய் கூட்டமைப்பு பதிவு பெற்று மாற்றுத்தலைமை உதித்தால் மீண்டும் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்குவதற்கு சாத்தியம் உள்ளது என்று குறிப்பிட்ட அவர், வட மாகாண சபையின் ஒருசில பின்னடைவுகளுக்கு அரசியல் ரொட்டித்துண்டுகளைக் காட்டி அறநிலை மறந்த அவையினர் சிலரே காரணம். அவ்வாறு இருந்தும் எமது செயற்பாடுகள் செவ்வனே இருந்தன என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் அவர் வழங்கிய கருத்துரை வருமாறு.

**கேள்வி:**-ஒக்டோபர் 23ஆம் திகதி உங்களின் பிறந்த தினத்தன்று வடமாகாண சபையின் முதலாம் அத்தியாயம் நிறைவுக்கு வரவுள்ள நிலையில் அடுத்த கட்டம் என்ன செய்யப் போகிறீர்கள்?

**பதில்**-24ஆம் திகதி பௌர்ணமி தினமாகையாலும் 25ஆம் திகதியே கடைசித் தினமாகக் கூறப்பட்டுள்ளதாலும் வட மாகாண சபை ஒக்டோபர் 23ஆம் திகதி கூட இருக்கின்றது. அன்றைய தினம் பிறந்த தினமாக அமைந்தது எதேச்சையாக ஏற்பட்ட ஓர் ஒற்றுமை.

நான் முதலமைச்சர் பதவி முடிவுக்கு வந்ததும் தமிழ் மக்கள் பேரவையின் நடவடிக்கைகளில்' கூடிய கவனம் செலுத்த உள்ளேன். கட்சிகளிலும் பார்க்க மக்களை ஒன்றிணைத்து, எமது மக்களின் தேவைகளை, அபிலாஷைகளை, விருப்பு வெறுப்புக்களை, கரிசனைகளைத் தெரிந்து வைத்து உலகிற்கு எடுத்துக் கூறவும் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறவும் வேண்டியுள்ளது. என்னால் முடிந்ததை இது சம்பந்தமாகச் செய்ய முன்வருவேன்.

**கேள்வி:**அடுத்த கட்டம் தொடர்பில் 4 தெரிவுகளைக் கொண்டிருக்கும் நீங்கள் இறுதி முடிவை எப்போது எடுக்கவுள்ளீர்கள்?

**பதில்**-வடமாகாணசபைத் தேர்தல்கள் உடனே நடைபெறக்கூடிய சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவு. முதலில் நான்காவது தெரிவில் ஈடுபட்டுக் கொண்டு மேற்கொண்டு நடக்க வேண்டியவை பற்றி பின்னர் ஆராய்வோம்.

**கேள்வி:**உங்களை முதலமைச்சராக தெரிவு செய்ய வேண்டும் என்பதில் ஆரம்பம் முதல் இறுதிவரை இறுக்கமாக இருந்த கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை சந்திப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டா?

**பதில்**-நான் எப்பொழுதும் ஆயத்தம். அவருடன் எனக்கென்ன பிணக்கு? அவரின் வலது கரம் இடமளித்தால் அவரும் என்னைச் சந்திப்பதில் அவருக்கு எந்தத் தடங்கலும் இருக்காது என்று நம்புகின்றேன்.

**கேள்வி:**உங்களிடத்தில் காணப்படும் 4 தெரிவுகளில் நான்காவது தெரிவை மேற்கொள்ளும் பட்சத்தில் கூட்டமைப்பு வரவேற்புடன் ஆதரவை நல்கும் என. அதன் பேச்சாளர் தெரிவித்திருக்கின்றதைக் கருத்தில் எடுப்பீர்களா?

**பதில்**-கூட்டமைப்பு ஏற்கெனவே ஆதரவு நல்கியே வருகின்றது. பேச்சாளருக்கு இது தெரியாது போலும்!

**கேள்வி:** கொள்கை ரீதியாக புதிய கூட்டணியை உருவாக்கி அடுத்த தேர்தலில் களமிறங்குவீர்களா?

**பதில்**-இன்னமும் முடிவெடுக்க வில்லை. ஆனால் கொள்கை ரீதியாகவே எனது நிலை இருக்கும் என்பதில் சந்தேகம் இருக்கத் தேவையில்லை.

**கேள்வி:**எதிர்காலத்தில் கூட்டமைப்புடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று அதன் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்குவதற்கு சாத்தியப்பாடு உள்ளதா?

**பதில்**-தற்போதைய தலைமைகள் போய் கூட்டமைப்பு பதிவு பெற்று மாற்றுத் தலைமை உதித்தால் சாத்தியப்பாடு உண்டு.

**கேள்வி:**வடமாகாண சபையின் வினைத்திறனான செயற்பாட்டில் பின்னடைவுகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா?

**பதில்**-இன்றைய மத்திய அரசாங்கம் பற்றியும் அவர்களின் வினைத்திறன் சம்பந்தமாகவும் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. ஆகவே யாரும் இவ்வாறான கேள்விகளை யாரைப்பற்றியும் அடுக்கலாம். எம்மைப் பொறுத்த வரையில் பின்னடைவுகளுக்குக் காரணம் நாமல்ல. எம்முள் இருந்து கொண்டே எமக்குக் குழிபறித்துக் கொண்டிருப்போரே அதற்குப் பதில் கூறவேண்டும்.

அரசியல் ரொட்டித் துண்டுகளைக் காட்டி அற நிலை மறந்த அவையினர் சிலரை வைத்து அரங்கேற்றிய நாடகங்கள் பின்னடைவைத் தராமல் எதனைத் தருவன? அப்படி இருந்தும் எமது செயற்பாடுகள் பற்றி நல்லதே கூறப்பட்டுள்ளன.

நாடு பூராகவும் உள்ள 800க்கும் அதிகமான அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள் போன்றவற்றுள் 2015ஆம் ஆண்டில் எமது மாகாண முதலமைச்சர் அமைச்சே சில விடயங்கள் சம்பந்தமாக முதலிடம் பெற்றது. 2016இலும் நாம் முதன்மை நிலையில்தான் அடையாளம் காட்டப்பட்டுள்ளோம்.

சதிகள் பல நடந்தாலும் எமது செயற்பாடுகள் வினைத்திறனுடன்தான் நடத்தப்பட்டு வருகின்றன. முட்டைகளை இட்டுவிட்டு கொக்கரித்து எமது வினைத்திறன் பற்றி பறைசாற்ற வேண்டிய அவசியம் எமக்கில்லை.

**கேள்வி:**இதுவரை காலத்தில் வட மாகாண சபை சாதித்தது என்ன?

**பதில்:**எமது சாதனைகள் பற்றிய கைநூல் விரைவில் வெளிவரும். அதை வாசித்துத் தெரிந்து கொள்ளலாம்.

**கேள்வி:**கஜேந்திரகுமார், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இரு துருவமாகியுள்ள நிலையில் புதிய கூட்டணி ஒன்று அமைவதிலும் சிக்கல்கள் இருப்பது போல் உள்ளதே?

**பதில்**-கொள்கைகள் ஒன்றாக இருந்தால், மக்களின் நலனே முக்கியமென்ற எண்ணம் வேரூன்றி விட்டால் துருவங்கள் கூட இணையலாம்.

**கேள்வி:**மகிந்த ராஜபக்ஷ உட்பட இலங்கையின் அரசியல் தலைமைகள் இந்தியாவின் கரிசனையை கவனத்தில் கொண்டு செயற்படுகின்ற சூழல் காணப்படுகின்ற நிலையில் தொடர்ந்தும் அரசியல் களத்தில் பயணிப்பதை உறுதிசெய்துள்ள நீங்கள் இந்தியாவுடன் உறவுகளை கட்டியெழுப்புவது தொடர்பில் கவனம் செலுத்துவீர்களா?

**பதில்**-இந்தியாவுடனான எனது உறவுகள் என்றுமே நன்றாகவே இருந்து வருகிறது. அதில் கட்டி எழுப்ப எதுவும் இல்லை என்றார். (மு)

## வட-கிழக்கில் பொது...

பெற்றுக்கொண்டுள்ளதாக, செயலாளர் அலுவலகத்திலிருந்து தகவலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய சர்வதேச குற்றவியல் நீதிமன்ற பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும், வடக்கு கிழக்கு மக்களின் அரசியல் அபிலாசையை அறிந்து கொள்ள ஐ.நாவின் கண்காணிப்பின் கீழ் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என வடமாகாண சபையின் பிரேரணையை அனுப்பிவைத்த சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு கோரிக்கையும் வைத்துள்ளது.

ஐ.நாவின் தலையீட்டை கோரும் வட மாகாண சபையின் பிரேரணை பிரான்ஸ் மனித உரிமைகள் அமைப்பின் ஊடாக, ஐ.நா பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த பிரேரணையுடன் இணைக்கப்பட்ட குறித்த மனித உரிமைகள் அமைப்பின் கடிதம் தமக்கு கிடைக்கப்பெற்றதாக ஐ.நா பொதுச்செயலாளரிடம் இருந்து, அந்த அமைப்பிற்கு மின்னஞ்சல் மூலம் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் 39-வது அமர்வின் நிகழ்ச்சி நிரலில் வடமாகாண சபையின் பிரேரணை விவகாரமும் உள்ளடக்கப்பட வேண்டுமென்பதே குறித்த மனிதஉரிமைகள் அமைப்பின் கோரிக்கையாகும்.

இலங்கையில் போர்க் குற்றமிழைத்த குற்றச்சாட்டுக்களில் இருந்து இராணுவம், புலிகள் ஆகிய இரண்டு தரப்பையும் விடுவித்து, புதிய நல்லிணக்க திட்டமொன்றை இலங்கை ஜனாதிபதி ஐ.நாவில் பிரேரிக்கவுள்ளதாக ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்.

இந்த நிலையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் வடமாகாண சபையின் பிரேரணையும் விவாதத்திற்காக இணைத்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கையுடன், மனித உரிமைகள் அமைப்பொன்று களத்தில் இறங்கியுள்ளது.

ஐ.நாவில் அங்கத்துவமுள்ள நாடுகள் அல்லாதவற்றின் விவகாரங்களை கையாளும் பொறிமுறையின் ஊடாகவே, வடமாகாண சபையின் பிரேரணை குறித்த மனித உரிமைகள் அமைப்பின் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அறியக் கிடைக்கின்றது. (மு)

## அனைவரு...

யாதென நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனை தெரிவித்தார்.

ஆவா குழுவினரை கட்டுப்படுத்துவதற்கு இராணுவத்தினர், அரசாங்கத்தின் அனுமதியை கோரியுள்ளதாக, தகவல் வெளியாகியுள்ளது.

தெற்கில் அவ்வாறான ஒரு குழு இருந்தால், அவ்வாறு எந்த அனுமதியும் பெறப்படுவதில்லை.

எனினும் ஆவா குழுவினரை கட்டுப்படுத்துவதற்கு அனுமதி கோரப்படுகிறது.

வன்முறைகளை கட்டுப்படுத்த பொலிஸாருக்கு தேவையான நேரத்தில், இராணுவத்தினரின் உதவியை கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வடக்கிற்கும், தெற்கிற்கும் வேறு சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாது என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (மு)

## அரசைக் காப்பாற்று...

வடமாகாண சபை தமக்கு இருக்கின்ற அதிகாரங்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு தமக்கான அதிகாரங்களைக் கோரவேண்டும்.

ஆனால் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மக்களின் வாக்கைப் பெற்றுக் கொண்டு அதன் பின்னர் வெளியில் ஓடிவிடுவர். அவர்கள் கொழும்பிலும் வெளிநாடுகளிலும் வீடுகளைக் கட்டிக் கொண்டு தமது குடும்பங்களுடன் சந்தோசமாக இருப்பார்கள்.

அதன் பின்னர் வாக்களித்த மக்களிடம் வருகின்ற போது விடுதிகளில் தங்கியிருப்பார்கள். அதுவும் தேர்தல் காலங்களிலேயே இங்கு வருவார்கள். ஆனால் நாங்கள் அப்படியில்லை. எப்போதும் மக்களுடன் மக்களாக இருப்போம்.

இந்த மக்களுடன் இருப்பவர்களையே எதிர்வரும் தேர்தல்களிலும் வேட்பாளர்களாக நிறுத்துவோம். வடக்கு மக்களுக்காக செயற்படுவதற்கு நாங்கள் வடக்கிற்கு வந்திருக்கிறோம்.

அதற்கமைய வடக்கு மக்களும் தமக்காக செயற்படுகின்றன எம்மைப் போன்ற தரப்பினர்களுக்கு தமது ஆதரவை வழங்கவேண்டும்.

அதனூடாக எதிர்காலத்தில் இந்த மக்களுக்கு எம்மாலான அனைத்தையும் பெற்றுக் கொடுக்க நாம் தயாராகவே இருக்கின்றோம் என்றார். (மு)


தன நிதானய

NLB NATIONAL LOTTERIES

உத்தியோகபூர்வ முடிவுகள்



திகதி: 23-09-2018

சீட்டிழுப்பு இலக்கம்: 53

N 12 67 74 80

ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

| | | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றி பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 89,849,572.40 | - |
| 1 | வது பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் சரியாயின் | ரு. 1,000,000.00 | - |
| 2 | வது பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 100,000.00 | 04 |
| 3 | வது பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 2,500.00 | 63 |
| 4 | வது பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000.00 | 155 |
| 5 | வது பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 100.00 | 3,826 |
| 6 | வது பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரு. 50.00 | 2,472 |
| 7 | வது பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரு. 20.00 | 65,139 |
| 8 | வது பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரு. 20.00 | 12,137 |

வெற்றியீட்டப்பட்டுள்ள ரூபா 2,764,220.00 மொத்த பணப்பரிசில் உருவாகிய மொத்த வெற்றியாளர்களின் எண்ணிக்கை 83,796

அடுத்த சுப்பர் பரிசு ரூபா 90,026,521.84

இணையம்: www.nlb.lk

- ரூபா 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பணப்பரிசில்கள் அரச வரிச்சட்டதிட்டத்திற்கு உட்பட்டதாகும்.
- பரிசுத்தொகைக்கான பணத்தினை பெற்றுக்கொள்ளும்போது தேசிய அடையாள அட்டையினை கொண்டுவருதல் அத்தியாவசியமானது.
- வெற்றியீட்டிய லொத்தர் டிக்கெட் சீட்டிழுக்கப்பட்ட நாள்முதல் ஆறு மாதத்திற்கு மாத்திரமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை

இல. 234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 0112470662 / 0112470663
உத்தியோகப்பூர்வ முடிவுகள் தொடர்பாக: 0112458585

கொவிசெத

திகதி 2018.09.23
சீட்டிழுப்பு இலக்கம் 1891
ஆங்கில எழுத்து W
வெல்லப்பட்ட இலக்கங்கள் 12 46 54 62
தேசிய லொத்தர் சபை

நீரோகா

திகதி 2018/09/23
சீட்டிழுப்பு இலக்கம் 450
லக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 05 20 42 46
08
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத

திகதி 2018/09/23
சீட்டிழுப்பு இலக்கம் 3752
ஆங்கில எழுத்து J
வெல்லப்பட்ட இலக்கங்கள் 1 9 8 3 0 5
தேசிய லொத்தர் சபை

## துப்பாக்கிச் சூட்...

ள்ளனர். தங்காலை, வாடிகல பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை 11.15 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முகத்தினை மூடியவாறு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இவ்வாறு துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டு தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தங்காலை - கதிர்காமம் பிரதான வீதியின் வாடிகல பகுதியில் உள்ள மோட்டார் வாகன நிலையமொன்றின் உரிமையாளரான 42 வயதுடைய ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஹிக்கடுவையில் நேற்று பிற்பகல் மற்றுமொரு துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹிக்கடுவை தபால் அலுவலகத்திற்கு அருகில் இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில் குறித்த சம்பவங்கள் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (மு)

## ஒன்றரை வயது...

நிறுத்தப்பட்டிருந்த உழவு இயந்திரத்தை இயக்கி பின்பக்கமாக கொண்டு சென்றுள்ளார். அப்போது குழந்தை இயந்திரத்தின் பின்னால் நின்றது தெரியாமல் மீண்டும் இயந்திரத்தை இயக்கிய போது உழவு இயந்திரத்தின் சில்லு குழந்தை மேல் ஏறியுள்ளது.

சம்பவ இடத்திலேயே பரிதாபமாக குழந்தை உயிரிழந்துள்ளது. இந்த மரண விசாரணையை மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஜெ.கிறிஸ்தோபர் மேற்கொண்டிருந்தார். சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (மு- 9)

## நினைவேந்தலை...

முன்னாள் மூத்த போராளி மு.மனோகர் (காக்கா அண்ணா) நேற்று ஞாயிற்றுக் கிழமை) மாவையின் இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பில் தியாகி திலீபன் நினைவு நாள் தொடர்பாக ஏற்பட்டுள்ள குழப்பநிலைமையை சுட்டிக்காட்டியபோதே அவர் தமது நிலைப்பாட்டை இவ்வாறு வெளிப்படுத்தினார் என அறியவந்தது.

சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தாங்கள் இந்த விடயத்தை உடனடியாக தெரிவிக்க வேண்டுமென முன்னாள் மூத்த போராளி மு.மனோகர் விடுத்த வேண்டுகோளையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

திலீபன் நினைவு நாளுக்கு தடைவிதிக்கக் கோரி பொலிஸார் வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், அதற்கெதிராக சுமந்திரன் வாதாட இருப்பதாகவும் வெளிவந்த செய்திகளின் பின்னணியில் நல்ல நாடகம் அரங்கேறுகிறது என முன்னாள் மூத்த போராளி மு.மனோகர் முன்வைத்த குற்றச்சாட்டை மாவை சேனாதிராசா இதன்போது நிராகரித்திருந்தார்.

எப்படியிருந்தாலும் கடந்த வருடம் இதே இடத்தில் களியாட்டமாக நடைபெற்ற ஒரு நிகழ்வில் பங்கேற்றவரின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வை நடத்துவது பொருத்தமற்றது என முன்னாள் மூத்த போராளி மு.மனோகர் சுட்டிக்காட்டினார்.

இந்தநிலையில் அன்றைய நினைவு நிகழ்வின் நிகழ்ச்சி நிரல் தொடர்பில் மாவை கேட்டபோது அதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று முன்னாள் மூத்த போராளி மு.மனோகர் பதிலளித்தார். (மு)

## பிரதம நீதியரச...

ஜயசூரியவின் பெயரை புதிய பிரதம நீதியரசர் பதவிக்கு ஜனாதிபதி முன்மொழியவுள்ளார்.

அத்துடன், நாட்டின் 30ஆவது சட்டமா அதிபராக, தற்போதைய மேலதிக சொலிஸ்ரார் ஜெனரல் டப்புல்ல டி லிவரவை நியமிக்கவும் ஜனாதிபதி பரிந்துரைத்துள்ளார்.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் அடிப்படையில் பிரதம நீதியரசர் மற்றும் சட்டமா அதிபராக நியமிக்கப்படுவோரின் பெயரை அரசியலமைப்புச் சபை ஜனாதிபதிக்கு பரிந்துரைக்கும்.

அரசியலமைப்புச் சபையில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகளுடன் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் உள்ளடங்கியுள்ளனர்.

இந்த நிலையில் சட்ட மா அதிபர் மற்றும் பிரதம நீதியரசருக்கான பெயர்கள் இம்முறை ஜனாதிபதியால் அரசியலமைப்புச் சபைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.(மு)

**Biology A/L**
**பிரத்தியேக வகுப்புக்கள்**
K.கலைவாணன் B.Sc (Hons)
தொடர்பு: 0713438442

**வீடு வாடகைக்கு**
சகல வசதிகளுடன் கூடிய வீடு யாழ் பேருந்து தரிப்பிடத்துக்கு அண்மையில் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
077 582 0084
(C-3938)

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-3782)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. O/L 6 Passes with 5 credits including Maths.
Date :- 29/09/2018
கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accounting Courses**
Executive Level & Business level
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. A/L 3 Passes
Date :- 29/09/2018
Note :- 2018 பரீட்சை எடுத்த மாணவர்களும் பதிவு செய்யலாம்.
**Certificate Course in English**
Students Awaiting (A/L) Results Enrich your Proficiency in English
Date :- 06/10/2018
17th Batches have successfully Completed the course. Register your names.
Further Details: Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
0212223382 / 0212229149
(C-3900)

**வீடு நாள்/வார வாடகைக்கு**
யாழ் பேருந்து தரிப்பிடத்துக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய AC, Non AC வீடு நாள்/வார வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு:
077 582 0084
(C-3938)

**பயிற்சியுடன் வேலை வாய்ப்பு**
பயிலுனர்கள் - 2018 இல் A/L எடுத்தவர்கள்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை
● எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால வேலை வாய்ப்பு பயிற்சிகள் உண்டு.
● விரும்பியவர்கள் பயிற்சி முடிவில் வேலையில் சேரலாம்.
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -7'500/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226236
v2vacancies@gmail.com

Jaffna College Institute of Technology
புதிய கற்கை நெறிப் பிரிவுகள் September / October 2018 இல் ஆரம்பமாகவுள்ளன.
Vaddukoddai, Sri Lanka
Tel: 0212250975 / 0213213139
E-mail:ejcit@sltnet.lk
(5772)

merwiyns
மேர்வின்ஸ்
Manufacturers of:
Polymer Stamp, Pre Inked Stamp
Date Stamp, School Badges, House Name Boards,
Table Top Stand Boards,
Engraved Key Tags, Acrylic Awards, Sticker Cutting
213/1F. லலிதா கட்டடம் 1ம் மாடி.
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 221 7757 / 0774 010 633 / 0774 003 780
email: merwiyns@gmail.com
(5450)

**பணிநிலை வெற்றிடங்கள்!**
மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பிய நாடுகள், மேலைத்தேய நாடுகள் பலவற்றிலும் பலதுறைப்பட்ட வேலைவாய்ப்புக்களையும் பெற்றுத்தரும்
வடக்கின் 1ம் அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
License No. 2268
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
நிறுவனத்தின் யாழ் கிளையில் பின்வரும் பணிநிலை வெற்றிடங்கள் உள்ளன.
வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர்
ஆட்சேர்ப்பு உத்தியோகத்தர்
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்
க.பொ.த. உயர்தரம் படித்த, அடிப்படை ஆங்கிலமொழி தொடர்பாடல் மற்றும் கணினி – தட்டச்சு திறன்களுள்ளவர்கள், சுயவிபரக்கோவை, சான்றிதழ்களுடன்
25-09-2018 செவ்வாய்
பிற்பகல் 3 மணிக்கு நேரில் வரவும்.
கவர்ச்சியான சம்பளம் மற்றும் கமிஷன் வழங்கப்படும்.
இல. 221 - 1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
077 00 38 215, 0114 063 144, 021 222 00 11
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk
(C-3993)

**வேலையாள் தேவை**
சாயி சபரீஷன் பூஜா ஸ்ரோர்ஸ்
(கோவில் பூஜைப் பொருட்கள்)
விற்பனை நிலையத்துக்கு (ஆண்/பெண்) வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.
தாவடி சந்தி, கோண்டாவில் மேற்கு, கே.கே.எஸ் வீதி
தொடர்பு: 077 310 8671, 077 711 0629
(5774)

**பதவிக்கான தேடல்**
புதியதோர் எதிர்காலத்தை நோக்கி...
இவ்வாண்டு A/L பரீட்சைக்கு தோற்றியவர்கள் மற்றும் O/L படித்த 15 பேர் உள்வாங்கப்படுவர்.
● தங்குமிடம்/ உணவு வசதிகள் உண்டு.
● வயதெல்லை 18 - 25
● அனுபவம் அவசியம் அற்றது.
தொடர்புகளுக்கு: 077 157 1699, 076 676 7620
(5773)

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**
DHL
• 220 க்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
• உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட முடியும்
• 3 – 5 நாட்களில் உரிய முறையில் ஒப்படைக்கப்படும்
• மிகக் குறைந்த கட்டணம்
077 755 4528
லண்டன் Rs. 550 /- பிரான்ஸ் Rs. 700 /- சுவிஸ் Rs. 750 /- ஜேர்மனி Rs. 650 /-
(சி-3923)
யாழ் - கொழும்பு பஸ் பிரயாண சேவை
யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பிற்கான பஸ் பிரயாண சீட்டுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம்.
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பம் படிவ ஏற்பாடுகள் (Online) மூலமாக செய்து கொடுக்கப்படும்
VISA
திருமுருகன் கொம் நெற்
தொ, இல. - 077 755 4528
இல. 321 (323) K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(சி-3902)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.